கோகுலம்

GOKULAM

பிப்ரவரி 85 ரூ.2





டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்

பிறந்த நாள் : 19.2.1855 மறைந்த நாள்: 28.4.1942

கோகுலம்

மலர்—3 இதழ்—1
1985 பிப்ரவரி மாத இதழ்



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்

- பாரதியார்

தனிப்பிரதி ரூ. 2/-
ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் வீட்டில் பால் பொங்கிற்றா?

நிச்சயம் பொங்கியிருக்கும். அதேபோல் நீங்கள், உங்கள் பெற்றோர், உற்றார், உறவினர் அனைவருடைய உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கட்டும்.

'தமிழ்த் தாத்தா' என்று நாமெல்லாம் அன்போடு அழைக்கும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் குழந்தைப் பருவக் கட்டுரையை இந்த இதழில் படிக்கப் போகிறீர்கள். அந்தக் காலத்தில் — அதாவது 120 ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிக்கூடங்கள் எப்படி இருந்தன, ஆசிரியர்கள் மாணவர்களை எப்படி நடத்தினார்கள், மாணவர்கள் எவ்வாறு கல்வி கற்றார்கள் என்பதையெல்லாம் இக்கட்டுரையில் அறியலாம்.

தமிழ்த்தாத்தாவின் உருவப்படத்தை உள் அட்டையில் பார்க்கிறீர்கள். அவரைப் பற்றிய குறிப்பையும் சுருக்கமாகக் கொடுத்திருக்கிறோம். அதை முதலில் படித்துவிட்டு, அவரது குழந்தைப் பருவக் கட்டுரையைப் படியுங்கள்; மிகவும் சுவையாக இருக்கும்.

"ஆழ் கடலில் அப்பாவுடன் போனேன்," என்ற கட்டுரையில் ஆபிரகாம் என்ற சிறுவன் அப்பாவுடன் கடலில் சென்று மீன் பிடித்து வந்த அனுபவத்தைக் கூறுகிறான். அப்பாவுடன் ஆகாயத்தில் சென்றது, அப்பாவுடன் கப்பல் ஏறிப் போனது — இப்படிச் சில கட்டுரைகளையும் நீங்கள் விரைவில் படிக்கப் போகிறீர்கள்!

-அழ. வள்ளியப்பா



இந்த இதழ் எழுத்தாளர்கள்



கீதா ராகவன்


விஜயா வின்செண்ட்


பிருந்தாவனக் கதாசிரியர்கள்


மு.கா.நெடுமாறன்


என்.சாரதா


ஆர்.சிதம்பரம்

பிருந்தாவனக் கவிஞர்கள்


ஏ. ஆர். சுந்தர்



வி. அபிராமி


மீ. ஸ்ரீதேவி


எஸ். சுப. கணேசன்

அட்டையில் : சீமா

வண்ணப்படம் : அனு



மின்மினிக் கதைகள்

ஆமையின் பிடிவாதம்

மழை பெய்யாததால் ஏரி, குளம், குட்டைகளெல்லாம் வற்றிக் கொண்டிருந்தன. அப்போது, ஏரியில் வசித்த ஆமைகள், நண்டுகளெல்லாம் பக்கத்திலிருந்த ஓர் ஆற்றுக்குப் போய் விடுவதென்று முடிவு செய்தன.

ஆனால், ஒரே ஓர் ஆமை மட்டும் அந்த ஏரியிலே இருக்க முடிவு செய்தது. மற்ற ஆமைகளிடம், ''நான் இந்த ஏரியில்தான் பிறந்தேன்; இதில்தான் வளர்ந்தேன். என் மூதாதையரும் இங்குதான் பிறந்து வளர்ந்து இறந்தார்கள். அதனால், நான் வேறு இடத்திற்கு வரமாட்டேன்'' என்று கூறிவிட்டது.

''மழை பெய்ததும் திரும்பி வந்துவிடலாம்'' என்றன மற்ற ஆமைகள்.

அந்த ஆமை கேட்கவில்லை. அங்கேயே தங்கியிருந்தது. ஏரி வறண்டது. ஒரு சொட்டு நீர் கூட இல்லை. மண்ணைக் குடைந்து அதற்குள் நிம்மதியாகத் தூங்கியது அந்த ஆமை. நாளாக ஆக அங்கிருந்த மண் இறுகியது.

ஒருநாள் மண்பாண்டம் செய்யும் ஒரு தொழிலாளி அங்கு வந்தார். மண்வெட்டியால் அங்கிருந்த மண்ணை ஓங்கி வெட்டினார். அப்போது அவருடைய மண்வெட்டி ஆமை முதுகில்பட்டு அது சுக்கல் சுக்கலாக உடைந்தது. உள்ளேயிருந்த உடம்பிலும் நல்ல காயம்!

பிறகு...? முன்யோசனை இல்லாத ஆமை, தன் பிடிவாதத்தால் இறந்தது!

நன்றி கெட்ட சிங்கம்

சிங்கம் முக்கி முனகிக் கொண்டிருப்பதைக் கண்டது ஒரு மரங்கொத்தி. அருகில் சென்று விசாரித்தது.

சிங்கம் குழறியபடி சொன்னது: ''மானை அடித்துத் தின்றபோது, தொண்டையின் குறுக்கே ஒரு எலும்பு மாட்டிக் கொண்டது. ஒரு வாரமாகிறது.



என்னால் எடுக்க முடியவில்லை. அதனால், சாப்பிடவும் முடியாமல் பட்டினி கிடக்கிறேன்.''

உடனே மரங்கொத்தி சிங்கத்தின் அருகில் சென்று அதன் பெரிய வாய்க்குள் கூர்ந்து பார்த்தது. குறுக்கே எலும்பு இருப்பது தெரிந்தது.

''ஐயோ, பாவம்! நான் உன் வாய்க்குள் போய் என் உளி போன்ற அலகால் அந்த எலும்பை அகற்றி விடுகிறேன்'' என்றது. அவ்வாறே செய்தது.

ஒரு வாரம் சென்றது.

மரங்கொத்தி சிங்கத்தின் அருகிலே சென்று, ''அதோ அந்த மரத்தின் அடியில் பெரிய புதர் இருக்கிறது. புதருக்குள்ளே நிறையப் பூச்சிகள் இருக்கின்றன. அவற்றைப் பிடித்துத் தின்ன ஆசை. புதருக்குள் புகுந்து பிடிப்பது சிரமம்; நேரமும் ஆகும். நீ அந்தப் புதரை உன் கால்களால் உதைத்து அப்பால் தள்ளினால் ஏராளமான பூச்சிகள் எனக்குச் சுலபமாகக் கிடைக்கும்'' என்றது.

''ஓஹோ! அன்று எனக்கு உதவி செய்ததற்குப் பதிலாக இன்று உதவி கேட்கிறாயா? நான்தான் அன்றே உனக்குப் பெரிய உதவி செய்து விட்டேனே!'' என்றது சிங்கம்.

''உதவி செய்தாயா? என்ன உதவி?''

''நீ என் வாய்க்குள் போன போது நான் என் வாயை 'கபக்'கென்று மூடியிருந்தால், நீ செத்துப் போயிருப்பாயே! உன்னைக் கொல்லாமல் விட்டதே பெரிய உதவிதானே!''

''ஆஹா! நல்ல உதவிதான்! நன்றி கெட்ட மிருகமே!'' என்று கூறிக் கொண்டே பறந்து சென்று விட்டது மரங்கொத்தி.

குரங்குகளா முட்டாள்கள்?

காசி நகரிலே ஒரு பெரிய திருவிழா. அத்திருவிழாவைப் பார்க்கப் பெரும் கூட்டம் வரும்.

காசி ராஜாவினுடைய தோட்டக்காரரும் அவருக்குக் கீழே வேலை பார்ப்பவர்களும் திருவிழாப் பார்க்க ஆசைப்பட்டார்கள்.

''ஒரு வாரத்திற்கு நாம் இங்கு இருக்க மாட்டோம். அதுவரை இந்தச்செடிகளுக்கு யார் தண்ணீர் ஊற்றுவது?'' என்று கவலைப்பட்டார் தோட்டக்காரர்.

அத்தோட்டத்திற்கு அடிக்கடி வந்து பழங்களைப் பறித்துத் தின்னும் சில குரங்குகள் அப்போது அங்கு வந்தன. அவற்றை அருகிலே அழைத்தார்.

''நாங்கள் எல்லோரும் திருவிழாப் பார்க்கப் போகிறோம். திரும்பி வர ஒரு வாரம் ஆகும். நீங்கள்

இத்தோட்டத்தில் எவ்வளவு நாட்களாகப் பழங்களைப் பறித்துத் தின்றிருக்கிறீர்கள்? அதற்குப் பதிலாகத் தினமும் இங்குள்ள செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். செய்வீர்களா?'' என்று கேட்டார்.

எல்லாக் குரங்குகளும் பலமாகத் தலையை ஆட்டின.

தோட்டக்காரர் சில தவலைகளையும், வாளி களையும் குரங்குகளிடம் கொடுத்து, ''தண்ணீரை வீணாக்கிவிடாதீர்கள். சில செடிகளின் 'வேர் ஆழ மாகப் போயிருக்கும். அவற்றிற்கு அதிகமாக நீர் விட வேண்டும். வேர் ஆழமாகப் போகாத செடிகளுக்குக் குறைவாக நீர் விட்டால் போதும்'' என்று சொல்லி விட்டுத் தம் ஆட்களுடன் புறப்பட்டுப் போனார்.

மறுநாள், தலைமைக் குரங்கு, மற்ற குரங்குகளை அழைத்து, ''வேர் ஆழமாகப் போயிருக்கிறதா, இல்லையா என்பதை நம்மால் அறிந்து கொள்வது சிரமம். ஆகையால், ஒவ்வொரு செடியாகப் பிடுங்கு வோம். வேர் எவ்வளவு நீளம் இருக்கிறதென்று பார்ப்போம். பிறகு திரும்பவும் நட்டு வைத்துத் தேவையான அளவு தண்ணீர் ஊற்றுவோம்'' என்றது.

அவ்வாறே அவைகள் செய்தன. சில செடி களைச் சுலபமாகப் பிடுங்க முடியவில்லை. சில குரங்குகள் ஒன்று சேர்ந்து அவற்றை ஆட்டி அசைத்துப் பிடுங்கி, வேர்களைப் பார்த்துவிட்டுப் பிறகு நட்டு வைத்துத் தண்ணீர் ஊற்றின.

இப்படிச் செய்தால், செடிகள் என்ன ஆகும்? பல செடிகள் வாடி வதங்கின; சில செடிகள் அழுகிப் போயின.

திருவிழா முடிந்து தோட்டக்காரர் வந்து பார்த் ததும் திடுக்கிட்டார். விவரம் அறிந்ததும், ''ஏ முட் டாள் குரங்குகளே!'' என்று திட்ட ஆரம்பித்தவர், மறுவிநாடியே, ''சே, இந்தக் குரங்குகளா முட்டாள்? இவற்றிடம் இப்பொறுப்பை ஒப்படைத்த நான்தான் முட்டாள்'' என்று வேதனையடைந்தார்.

உலகம் உடைந்ததா?

பனைமரத்தின் அருகிலே ஒரு முயல் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது.

அப்போது, மரத்திலிருந்து ஒரு பனங்காய் 'தொப்'பென்ற சத்தத்துடன் கீழே விழுந்தது. அச்சத் தத்தைக் கேட்ட முயல், திரும்பிக் கூடப் பார்க்காமல், ''ஐயோ, உலகம் உடைஞ்சிடுத்தே! உலகம் உடைஞ் சிடுத்தே!'' என்று அலறிக் கொண்டே தலைதெறிக்க





ஓடியது.

முயல் இப்படிக் கதறிக் கொண்டே ஓடிவருவதைக் கண்ட மற்ற முயல்களும் பயந்துபோய், அதன்பின்னால் ஓடின. வழியிலே நின்ற காட்டெருமை, புலி, கரடி, யானை எல்லாமே அவற்றின் பின்னால் ஓடின.

"ஐயோ, உலகம் அழியப் போகுதே!"

"ஐயோ, பூமி பிளந்திடுச்சே!"

"ஐயோ, பூமிக்குள்ளே போகப் போகிறோமே!" — இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாகக் கதறிக் கொண்டே ஓடின.

சப்தம் கேட்ட சிங்கம் குகையை விட்டு வெளியில் வந்தது. ஓடுகின்ற மிருகங்களை நிறுத்தி விவரம் கேட்டது.

"பூமி எப்போதும் போலத்தானே இருக்கிறது! தரையை நன்றாக அழுத்திப் பாருங்கள். நாலா பக்கமும் உற்றுப் பாருங்கள். பூமி, உடைந்ததை யார் நேரில் பார்த்தது? அழியப் போவதாக யார் சொன்னது?" என்று கேட்டது.

"இதுதான், இதுதான்" என்று ஒவ்வொரு மிருகமும் இன்னொரு மிருகத்தைக் காட்டியது. கடைசியில், முயலிடத்தில் போய் நின்றது.

அந்த முயல், "நான் நேரில் பார்க்கவில்லை. ஒரு பனைமரத்தடியில் படுத்திருந்தபோது 'தொப்'பென்ற சப்தம் கேட்டது. உலகம் உடைஞ்சிட்டதாக நினைத்துத் திரும்பிப் பார்க்காமலே ஓடி வந்துவிட்டேன்" என்றது.

உடனே சிங்கம், "நீங்களெல்லாம் இங்கே இருங்கள்" என்று கூறிவிட்டு, முயலை முதுகில் ஏற்றிக் கொண்டு முயல் சொன்ன இடத்திற்குச் சென்றது. அங்கே பனங்காய் விழுந்து சிதறிக் கிடப்பதைக் கண்டது. விஷயம் புரிந்துவிட்டது.

முயலை மீண்டும் முதுகில் ஏற்றிக் கொண்டு, மிருகங்கள் இருந்த இடத்திற்குச் சிங்கம் வந்தது. விவரத்தைக் கூறி, "உலகம் உடையவில்லை; பனங்காய்தான் உடைந்தது! எல்லாரும் நிம்மதியாகப் போய் வாருங்கள்" என்றது.

—புத்தர் ஜாதகக் கதைகள்.

மர்மத் தீவில் ஓர்
அதிசய உலகம்!

—அடுத்த இதழில்



உ. வே. சாமிநாதையர்

அந்தக் காலத்தில் புத்தகம் கிடையாது. பத்திரிகை கிடையாது. காகிதமும் கிடையாது. எழுதுவதற்கும், படிப்பதற்கும் பனை ஓலைகளையே பயன்படுத்தி வந்தார்கள். அந்த ஏடுகளில்தான் அருமையான காவியங்களும், அற்புதமான விஷயங்களும் இருந்தன.


பிற்காலத்தில் அவையெல்லாம் கவனிப்பாரற்று எங்கு எங்கோ மூலை முடுக்குகளிலும் பரண்களிலும் கிடந்தன. கறையான்களுக்கும் பூச்சிகளுக்கும் இரையாயின.

அவற்றையெல்லாம் சேகரித்து அழகிய முறையில் புத்தகங்களாக வெளியிட ஆசைப்பட்டார் உ.வே. சாமிநாதையர்.

ஊர் ஊராகச் சென்றார். மிகுந்த சிரமப்பட்டுப் பழைய ஏடுகளைத் தேடிப் பிடித்தார். இரவு பகல் இடைவிடாமல் ஆராய்ச்சி செய்தார்.

இவருக்கு, 'மகாமகோபாத்தியாய,' 'திராவிட வித்தியாபூஷணம்,' 'தாக்ஷிணாத்ய கலாநிதி' ஆகிய சிறப்புப் பட்டங்களுடன் சென்னைப் பல்கலைக் கழக 'டாக்டர்' பட்டமும் வழங்கப் பெற்றது. ஆயினும், 'தமிழ்த் தாத்தா' என்றே தமிழ் மக்கள் இவரைப் பிரியமாக அழைக்கிறார்கள்.

இவர் ஆனந்த விகடனில் தமது வரலாற்றை 1940 ஜனவரி மாதம் 'என் சரித்திரம்' என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினார். அதுவே பின்னர் புத்தகமாக வெளி வந்தது. அதிலிருந்து சில பகுதிகளை 'என் குழந்தைப் பருவம்' என்ற கட்டுரையில் காணலாம்.



ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்கத் தலைவர்களில் மிக அதிகமான புத்தகங்கள் யாரைப் பற்றி வெளிவந்திருக்கின்றன என்று கேட்டால், "ஆபிரகாம் லிங்கனைப் பற்றித்தான்" என்ற பதிலே கிடைக்கும்.

லிங்கன் பிறந்தது ஒரு காட்டிலே தான். ஆம், கென்டக்கி மாகாணத்தில் ஹாட்ஜென்வில் என்ற ஊரின் அருகே, காட்டில் கட்டிய ஒரு மரக் குடிசையிலே பிறந்தார். இவருடைய அப்பா முதலில் தச்சராயிருந்து, பிறகு விவசாயத் தொழிலை மேற்கொண்டார்.

லிங்கன் பள்ளியில் சேர்ந்து படித்ததெல்லாம் ஓர் ஆண்டுதான்!

இளமையில் இவர் பல தொழில்களைச் செய்தார். படகோட்டியாகவும், விறகு வெட்டியாகவும், மளிகைக் கடை குமாஸ்தாவாகவும், போர் வீரராகவும், போஸ்ட் மாஸ்டராகவும், வக்கீலாகவும் வேலை பார்த்தார்.

இவர் பிறகு அரசியலில் ஈடுபட்டார். தேர்தலில் நின்று, அமெரிக்க ஜனாதிபதியானார். அப்போது அமெரிக்காவில் அடிமைகளாயிருந்த நீக்ரோ மக்களுக்கு விடுதலை அளித்தார். அமெரிக்க மாகாணங்களில் ஒற்றுமையை நிலைநாட்டினார்.

இவர் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தபோது, இவரது கொள்கைகளைப் பிடிக்காத ஒரு நடிகன் இவரைச் சுட்டான். மறு நாள் இவரது உயிர் பிரிந்தது.




என் குழந்தைப் பருவம்

டாக்டர் உ.வே.சாமிநாதையர்

முதலில் உத்தமதானபுரத்தில் எனக்கு உபாத்தியாயராக இருந்த நாராயணையர் சற்றேறக் குறைய முப்பத்தைந்து பிராயம் கொண்டவர். நல்ல வடிவம் உடையவர். அவரைக் காணும் போது எனக்கும் மற்றப் பிள்ளைகளுக்கும் பயம் உண்டாகும். பிரம்பை அதிகமாக அவர் உபயோகிப்பார். அவரை நினைக்கும் போதெல்லாம் அவருடைய பிரம்படிதான் எனக்கு ஞாபகம் வருகிறது.

நாராயணையர் அரிச்சுவடி, எண் சுவடி முதலியவைகளைத்தான் கற்பிப்பார். அவரிடம் நான் கற்ற பின்பு சாமிநாதையரது பள்ளிக்கூடத்தில் சேர்ந்தேன். அங்கேதான் ஏட்டில் எழுதக் கற்றுக் கொண்டேன். அக்காலத்தில் காகிதம் பள்ளிக்கூடம் வரைக்கும் வரவில்லை. சிலேட்டும் இல்லை. முதலில் மாணாக்கன் மணலில் எழுதிப் பழக வேண்டும். பிறகு, அவனே எழுத்தாணியால் ஓலைச் சுவடியில் எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சாமிநாதையர் சங்கீதமும் சமஸ்கிருதமும் தெரிந்தவர். எனக்கு அவர் சம்க்ஷேப ராமாயணம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம், நீதி சாரம், அமரம் மூன்று காண்டங்கள் என்பவற்றைப் போதித்தார். அவ்வளவும் எனக்கு மனப்பாடமாக இருந்தன. தமிழும் கணக்கும் கற்பித்தார். அவர் நாராயணையரைப் போல் கடுமையானவர் அல்லர். ஆனாலும், அந்தக் காலத்துக் கிராம உபாத்தியாயர்களுக்கு பிரம்பு ஆடாவிட்டால் மாணாக்கர்கள் படிக்க மாட்டார்களென்ற எண்ணம் பரம்பரையாக இருந்து வந்தது; அவருக்கும் அந்தக் கொள்கை உண்டு.



கிராமத்துப் பள்ளிக்கூடங்களைத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் என்றும் சொல்லுவார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களில் மாணுக்கர்கள் பயிலும் முறையே வேறு. இப்போது அதனை எங்கும் பார்க்க முடியாது.

பிள்ளைகள் யாவரும் விடியற் காலையில் ஐந்து மணிக்கே எழுந்து சுவடித் தூக்கோடு பள்ளிக்கூடத் திற்கு வந்துவிட வேண்டும். சுவடி களையெல்லாம் வைத்துத் தூக்கிச் செல்லும் கயிறுகள் சேர்ந்த பலகைக்குச் 'சுவடித் தூக்கு' என்று பெயர். அந்தத் தூக்கு ஒருவகை உறியைப் போல இருக்கும். தூக்கைப் பள்ளிக்கூடத்தில் ஓரிடத்தில் மாட்டி விட்டுப் பிள்ளைகள் முறைப்படி இருந்து, முதல்நாள் நடந்த பாடங் களைப் பாராமல் ஒப்பிக்க வேண்டும். அதற்கு 'முறை சொல்லுதல்' என்று பெயர். அப்போது உபாத்தியாயர் வீட்டிற்குள் படுத்துக் கொண்டிருப் பார்; அல்லது வேறு ஏதேனும் செய்து வருவார். அவரை எதிர் பாராமல் பிள்ளைகள் பாடங்களை முறை சொல்ல வேண்டும். அதை அவர் உள்ளே இருந்தபடியே கவ னிப்பார். பெரும்பாலும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் உபாத்தியாயரது வீட்டுத் திண்ணையிலேயே இருக்கும்.

ஆறு மணிக்குமேல் பிள்ளைகளெல் லாம் வாய்க்கால் அல்லது குளம் முத லிய இடங்களுக்குப் போய் தந்த சுத்தி செய்து, தங்கள் தங்கள் குலத் திற்கேற்ற சின்னங்களைத் தரித்துக் கொண்டு, ஸந்தியாவந்தனமோ, வேறு அநுஷ்டானமோ செய் வார்கள். பிறகு தங்கள் வஸ்திரங் களில் மணலை எடுத்துக் கொண்டு மூஷிகவாகனம், ஸரஸ்வதி ஸ்தோத் திரம் முதலியவற்றைச் சொல்லிக் கொண்டே பள்ளிக்கூடத்திற்கு வரு வார்கள். முன்பிருந்த பழைய மணலை அகற்றிவிட்டுப் புதிய மணலைப் பரப்புவார்கள். எழுதுவ தற்குரியவர்கள் அதில் எழுது வார்கள். மற்றவர்கள் தங்கள் பாடங் களைப் படிப்பார்கள்.

ஒன்பது மணிக்குப் பிள்ளைகளைப் பழையது (புழைய அமுது) சாப்பிட விடுவது வழக்கம். அப்பொழுது உபாத்தியாயர் ஒரு பக்கத்தில் வீற்றி ருந்து ஒவ்வொரு பிள்ளையின் கையிலும் பிரம்பால் அடித்து அனுப்பு வார். பழைய சோற்று ருசியில் பள்ளிக்கூட ஞாபகம் மறக்கக் கூடா தென்பதற்காக அங்ஙனம் செய்வார் போலும்!



பிள்ளைகளுக்குள்ளே கெட்டிக் காரனுகவும் பலசாலியாகவும் இருப் பவனை உபாத்தியாயர் சட்டாம் பிள்ளையாக நியமிப்பார். அவன் புத்திசாலியாக இராவிட்டாலும், பல சாலியாக இருக்க வேண்டியது அவ சியம். உபாத்தியாயருக்குப் பிரதிநிதி யாகப் பிள்ளைகளை அடக்கியாள் வதும், பாடம் ஒப்பிக்கக் கேட்பதும் அவன் வேலைகள். அவனிடம் எல் லோரும் அடங்கி நடக்க வேண்டும். சில பிள்ளைகள் அவனுக்கு வேண்டிய தின்பண்டங்களைக் கொடுத்துத் தம்



வசப்படுத்தி, உபாத்தியாயருடைய பிரியத்தையும் அவன் மூலமாகச் சம்பாதிப்பார்கள். சில சமயங்களில் உபாத்தியாயரது கடுமையைக் காட்டிலும் சட்டாம்பிள்ளையின் கடுமை அதிகமாக இருக்கும்!

மாணாக்கர்களுக்குள் பழையவர்கள் புதியவர்களுக்குக் கற்பிப்பதும் பள்ளிக்கூட வழக்கங்களில் ஒன்று.

பன்னிரண்டு மணிக்குமேல் மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிள்ளைகள் வீட்டுக்குச் செல்வார்கள். பிறகு மூன்று மணிக்கு மீண்டும் பாடம் தொடங்கப்படும். இரவு ஏழு மணி வரையிற்கூடப் பள்ளிக்கூடம் நடைபெறுவதுண்டு.

ஒவ்வொரு நாளும் பாடங்கள் முடிந்தவுடன் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பும் போது அவர்களது ஞாபக சக்தியை விருத்தி செய்விப்பதற்காக ஒவ்வொருவருக்கும் பூ, மிருகம், பட்சி, ஊர் இவற்றின் பெயர்களில் வகைக்கு ஒவ்வொன்றை உபாத்தியாயர் சொல்லி அனுப்புவார். அந்தப் பெயர்களை மறுநாள் மறவாமல் வந்து சொல்ல வேண்டும். 'மறந்து போய் விடுவோமோ' என்ற பயத்தால் சில பிள்ளைகள் வீடு சென்றவுடன், தமக்கு உபாத்தியாயர் சொன்ன பொருள்களின் பெயர்களைத் தம் தாய் தகப்பனரிடம் சொல்லி விடுவார்கள். மறுநாள் விடியற்காலையில் அவர்களிடம் அவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டு வந்து சொல்லுவார்கள்.

பள்ளிக்கூடத்திற்குக் காலையில் ஐந்து மணிக்கே வந்துவிட வேண்டுமாகையால், துணைக்கு யாரையேனும் பிள்ளைகள் அழைத்து வருவார்கள்; பெரும்பாலும் முதிய ஸ்திரீகளை அழைத்து வருவதே வழக்கம். நேரம் கழித்து வந்தால் பிரம்படி பலமாகக் கிடைக்குமே என்ற பயத்தால், ஒவ்வொருவனும் எல்லோருக்கும் முன்பே வந்து விட முயல்வான். இவ்வாறு வருவதன் பிரயோசனம் பழையதுக்கு உபாத்தியாயர் வீட்டுக்கு விடும்போது தெரியும்.

வழக்கப்படி பிள்ளைகளைப் பிரம்பினால் அடித்து அனுப்பும் போது, காலையில் முதலில் வந்தவன் கையில் பிரம்பினால் தடவி விடுவார். இரண்டாம் பையனை மெல்ல அடிப்பார். வரவர அடி அதிகமாகும்; பலமாகவும் விழும். இதனால், முதல்நாள் பலமான அடி வாங்கியவன் அதற்குப் பயந்து மறுநாள் எல்லோருக்கும் முன்பே வந்து விடுவான். முதலில் வருபவனை 'வேத்தான்' என்று சொல்லுவார்கள். 'வேற்றான்' என்னும் சொல்லே அவ்வாறு வந்தது. மற்றவர்களை விட வேறான தனிப் பெருமை உடையவனென்பது அதன் பொருள். உபாத்தியாயரது கைக்கோலின் அடியைப் பெறாமல் தடவுதலை மாத்திரம் பெறுவது ஒரு தனிப் பெருமையல்லவா?

சில சமயங்களில், ''நாமே இன்று முதலில் வந்து விட்டோம்'' என்ற பெருமிதத்தோடு ஒரு பிள்ளை தன் துணைக்கு வந்த பாட்டியோடு பள்ளிக்கூடத்தில் நுழைவான். ஆனால், இவனுக்கு முன்பே அங்கு ஒருவன் இருப்பான்! இருட்டில் அவன் இருப்பது இவனுக்குத் தெரியாது. ஆனாலும் தான் முன் வந்ததாக எண்ணி இவன்

சந்தோஷப்படக் கூடாதென்னும் நினைவினால், அங்கிருப்பவன் இவன் புகுந்தவுடன் சிறிது கனைப்பான். அப்போது இவனுடைய மகிழ்ச்சி எங்கோ பறந்து போய்விடும்!

பிள்ளைகளுக்கு மணல் தான் சிலேட்டின் ஸ்தானத்தில் இருந்தது. பனையேடு தான் புஸ்தகம். எழுத்தாணியே பேனா. உபாத்தியாயர் எழுதித் தரும் ஏட்டுச் சுவடியிலிருந்து முதலில் நெடுங்கணக்கை (அரிச்சுவடியை)க் கற்றுக் கொள்வான் மாணாக்கன். அப்பால் எண் சுவடி முதலிய சுவடிகள் பெற்றுப் படிப்பான். ஓலை வாரவும், சுவடி சேர்க்கவும், நன்றாக எழுதவும் தெரிந்து கொள்வதற்குப் பல நாளாகும். சுவடியைப் பிரித்து ஒழுங்காகக் கட்டுவதற்குக் கூடப் பழக்கம் வேண்டும். பிள்ளைகளுக்கு எழுத்துப் பழக்கம் உண்டாக உபாத்தியாயர் ஓர் ஓலையில் எழுதித் தருவார். பிள்ளைகள் அதே மாதிரி எழுதிப் பழகுவார்கள். அந்த மூல ஓலைக்குச் 'சட்டம்' என்று பெயர்.

ஏட்டுச் சுவடிகளில் மஞ்சள், ஊமத்தையிலைச் சாறு, வசம்புக் கரி, முதலியவற்றைத் தடவிப் படிப்பது வழக்கம். எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதற்கும் பூச்சிகள் வராமல் இருப்பதற்கும் அவ்வாறு செய்வார்கள். ஏட்டுச் சுவடிகளுக்குக் குறிப்பிட்ட அளவு ஒன்றும் இல்லை. வெவ்வேறு அளவில் அவை இருக்கும். சுவடிகளில் ஒற்றைத் துவாரம் இருக்கும். ஒரு நூற்கயிற்றைக் கிளி மூக்கு என்ற ஒன்றில் முடிந்து, சுவடியின் துவாரத்தின் வழியே செலுத்தி, அதைக் கட்டுவார்கள். பனையோலையை நரம்போடு சேர்த்துச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் 'கிளி மூக்குகளாக உபயோகப்படுத்துவார்கள். கிளி மூக்கிற்குப் பதிலாகப் பொத்தானையோ, துவாரம் பண்ணின செப்புக் காசையோ, சோழியையோ முடிவதும் உண்டு:

ஏடுகளின் ஆரம்பத்திலும் இறுதியிலும் வெற்றேடுகள் சில சேர்த்திருப்பார்கள்.

எழுத்தாணிகளில் குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி என வெவ்வேறு வகை உண்டு. வாரெழுத்தாணிக்குப் பனையோலையினாலேயே உறை செய்து அதற்குள் செருகி வைத்திருப்பார்கள். மடக்கெழுத்தாணிக்குப் பிடி இருக்கும்; மடக்கிக் கொள்ளலாம். அந்தப் பிடி, மரத்தினாலோ, தந்தத்தினாலோ மாட்டுக் கொம்பினாலோ அமைக்கப்படும்.

ஒரு பையன் புதிதாக ஒரு நூலைப் படிக்கத் தொடங்குவதைச் 'சுவடி துவங்கல்' என்பார்கள். பனையோலையில் அந்த நூலை எழுதி, மஞ்சள் தடவி, விநாயக பூஜை முதலியவற்றைச் செய்து பையனிடம் கொடுத்து உபாத்தியாயர் படிப்பிப்பார். அவன் வீட்டிலிருந்து வந்த காப்பரிசி நிவேதனம் செய்யப்படும். அது தேங்காய்த் துண்டு, எள்ளு, வெல்லம் இவைகள் சேர்க்கப் பெற்று மிகச் சுவையாக இருக்கும். அதைப் பிள்ளைகளுக்கும் பிறருக்கும் விநியோகம் செய்வார்கள். அன்றைய தினம் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை நாளாகும்.

சுவடி துவக்கலென்றால் பிள்ளைகளுக்கு அளவற்ற சந்தோஷம் உண்



டாகும். புதிய நூலைக் கற்பதனால் உண்டாவதன்று அது; 'காப்பரிசி கிடைக்கும்; பள்ளிக்கூடம் இராது' என்ற ஞாபகமே அதற்குக் காரணம்.

பௌர்ணமி, அமாவாசை, பிரதமை, அஷ்டமி, ஆகிய தினங்களில் பள்ளிக்கூடம் நடைபெறாது. அந்த விடுமுறை நாட்களை 'வாவு' என்று சொல்லுவார்கள். உவா என்பதே அவ்வாறு மருவியது. உவா என்பது பௌர்ணமிக்கும் அமாவாசைக்கும் பெயர்.

ஒவ்வொரு பிள்ளையும் தினந்தோறும் உபாத்தியாயருக்கு ஏதேனும் ஒரு பொருள் கொண்டு வந்து கொடுப்பான்; ஒரு விறகோ, வறட்டியோ, காயோ, பழமோ தருவது வழக்கம். விசேஷ தினங்களில் அந்த விசேஷத்திற்கு உபயோகப்படும் பொருள்களைத் தருவார்கள். விடுமுறை நாட்களில் பணமும் கொடுப்பதுண்டு. அதை 'வாவுக் காசு' என்று சொல்லுவர்.

உபாத்தியாயருக்கு மாதம் கால் ரூபாய் சம்பளம், ஒவ்வொரு பையனும் கொடுப்பான். பணக்காரர்கள் வருஷாசனமாக நெல் கொடுப்பார்கள். விசேஷ காலங்களில் மரியாதையும் செய்வார்கள். நவராத்திரி காலங்களில் உபாத்தியாயருக்கு ஒரு வகையான வரும்படி உண்டு. அந்த உத்ஸவத்தை 'மானம்பூ' என்று சொல்வார்கள். மகா நோன்பு என்னும் சொல்லே அந்த உருவத்தை அடைந்தது. அக்காலத்தில் பிள்ளைகள் நன்றாக அலங்கரித்துக் கொண்டு வந்து பாட்டுப் பாடுவார்கள். கோலாட்டம் போடுவார்கள். அதற்கெனவே தனியே பாட்டுக்கள் உண்டு. ஒவ்வொருவர் வீட்டுக்கும் பிள்ளைகளை அழைத்துச் சென்று பாடச் சொல்வது உபாத்தியாயர் வழக்கம். வெளியூருக்கும் செல்வது உண்டு. அவரவர்கள் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி பணம் தருவார்கள். இந்தப் பணம் முழுவதையும் உபாத்தியாயர் எடுத்துக் கொள்வார். மானம்பூ வருவாயினால் தான் உபாத்தியாயர்கள் தங்கள் வீட்டுக் கல்யாணம் முதலிய காரியங்களைச் சிறப்பாக நடத்துவார்கள்.

உபாத்தியாயருக்கு அக்காலத்தே கணக்காயரென்ற ஒரு பெயருண்டு. கிராமத்து ஜனங்கள் உபாத்தியாயரிடம் மரியாதையோடு பழகுவார்கள். பிள்ளைகளை அவர் என்ன செய்தாலும் அது குறித்து வருத்தமடைய மாட்டார்கள். வீட்டில் விஷமம் செய்யும் பிள்ளைகளை உபாத்தியாயரிடம் சொல்லி அடக்குவார்கள். இளமைப் பருவம் முழுவதும் பிள்ளைகள் உபாத்தியாயருடைய ஆட்சியின் கீழ் இருக்க வேண்டும். அவரையே தெய்வமாக மதிப்பதும், இன்றியமையாத வேளைகளில் அவர் வீட்டு வேலைகளைச் செய்வதும் மாணாக்கர்களுக்கு இயல்பு.

பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் செய்விக்கும் தண்டனைகள் மிகவும் கடுமையானவை. அவரது பிரம்படி ஒன்றினாலேயே மாணாக்கர்கள் கதி



கலங்குவார்கள். விட்டத்தில் கயிற்றைக் கட்டி, அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு சில நேரம் இருக்கும்படி செய்வது ஒரு தண்டனை. அதைக் 'கோதண்டம்' என்று கூறுவர். அப்படிப் பையன் தொங்கும் போது கீழிருந்து உபாத்தியாயர் அவனது காலில் அடிப்பதும் உண்டு. நான் ஒரு முறை இந்தத் தண்டனையை அடைந்திருக்கிறேன். பாடம் நன்றாகச் சொன்னவனை, சொல்லாதவன் முதுகில் ஏறச் செய்து, பிற்பகலில் பிள்ளைகளைச் சுற்றிவரச் செய்வது ஒரு வழக்கம். அதற்குக் 'குதிரையேற்றம்' என்று பெயர். அவ்விதம் நான் ஒரு முறை சவாரி செய்திருக்கிறேன்.

இவ்வாறு மாணாக்கர்கள் மனத்தில் அச்சத்தை உண்டாக்கிக் கல்வி புகட்டும் இந்த வழக்கம் இக்காலத்தில் யாவராலும் கண்டிக்கப்படுகிறது. அக்காலத்தில் பெரும்பாலான திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இந்த முறையில் தான் நிகழ்ந்து வந்தன. அடிக்குப் பயந்தாவது பையன் படித்து வந்தான். அவனுக்குப் பல விஷயங்கள் மனனம் ஆகும்.

காகிதம், புஸ்தகம் என்பவை வழக்கத்தில் வராத அக்காலத்தில் மாணாக்கனுக்கு ஞாபக சக்தியை அபிவிருத்தி செய்வதற்கு உபாத்தியாயர்கள் சிரமப்படுவார்கள். ஒரு மனிதன் தன் வாழ்க்கைக்கு அடிப்படையான விஷயங்களை இளமையில் பள்ளிக்கூட வாழ்வில் மனப்பாடமாகத் தெரிந்து கொள்வான். எண் சுவடியிலுள்ள கீழ்வாயிலக்கம், மேல் வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்ப்பாடுகள் பெரிய வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை நடத்துவதற்கும், ஜனங்கள் பெரிய உத்தியோகங்களை வகிப்பதற்கும் உரிய வழியைப் புலப்படுத்தின. எல்லாம் பெரும்பாலும் மனக்கணக்காகவே இருக்கும்.

பண்டிகை நாட்களில் பிள்ளைகள் யாவரும் ஒன்றாகச் சேர்ந்து கோயிலுக்குச் செல்வார்கள். ஆடி மாதம் பதினெட்டாந்தேதியில் பழஞ்சுவடிகளை எல்லாம் சேர்த்து அழகான ஒரு சப்பரத்தில் வைத்து மேளதாளத்துடன் இழுத்துச் சென்று ஆற்றிலோ, குளத்திலோ விடுவார்கள். பிள்ளையார் சதுர்த்தியன்று ஏழு பிள்ளையாரைத் தரிசிக்க வேண்டுமென்பது ஒரு சம்பிரதாயம். ஸ்ரீஜெயந்தியிலும், சிவராத்திரியிலும் பிள்ளைகள் சேர்ந்து இரவில் கண் விழித்துப் பாடிக் கொண்டும், கதை சொல்லிக் கொண்டும் வேடிக்கையாகப் பொழுது போக்குவார்கள்.

'என் சரித்திரம்'
என்ற நூலிலிருந்து
சில பகுதிகள்

அடுத்த இதழில்-

என் குழந்தைப் பருவம்

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.



புதிர்: 37



திருக்குறள் புதிர்

புதிர்: 38



மேலே உள்ள ஒவ்வொரு படமும் ஒரு திருக்குறளை நினைவூட்டும். ஏந்தப் படம் எந்தத் திருக்குறளை நினைவூட்டுகிறது? ஒரு தனித் தாளில் இரு குறள்களையும் எழுதிக் கொண்டு 24 ஆம் பக்கம் பாருங்கள்.

ஒரு பூனை புலியாகிறது

டாக்டர் பூவண்ணன்

3. விடாதே, பிடி!

சேரன் ஒற்றையடிப் பாதையில் ஓடினான். பாதை வளைந்தும் நெளிந்தும் இறங்கியும் ஏறியும் சென்றது. சேரன் அந்த இடத்திலும் தன் ஓட்டத்தை நிறுத்தவில்லை; வேகத்தைக் குறைக்கவில்லை. மலையிலிருந்து கீழிறங்கும் ஆறு போல ஓடினான்.

காலடிச் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. எத்தனை பேர் தன்னைப் பின் தொடர்கிறார்கள்? சேரன் திரும்பிப் பார்த்துத் தெரிந்து கொள்ள விரும்பாமல் ஓடிக் கொண்டேயிருந்தான்.

எதிரே ஒரு பள்ளம். சேரன் அதில் பொத்தென்று குதித்து ஓடினான். ஓடும்போது காதைத் தீட்டிக் கொண்டான். கொஞ்ச நேரத்தில் பொத் — பொத் என்று இரு சத்தங்கள் கேட்டன.

'ரெண்டு பேர் வருகிறார்கள்' என்று உணர்ந்து கொண்ட சேரன் இன்னும் வேகமாக ஓடினான்.

ஒற்றையடிப் பாதை ஒரு சாலையில் சங்கமமானது. அந்தச் சாலையில் இடப்பக்கம் திரும்பிச் சென்றால் விஜயின் பங்களா வரும். அதற்குள் ஓடி நுழைந்து கொள்ளலாம். ஆனால் பின் தொடர்ந்து வருபவர்கள் தான் தங்கியுள்ள இடத்தைத் தெரிந்து கொள்வார்கள். 'கூடாது! அவர்கள் என் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளக் கூடாது!'

சேரன் வலப்பக்கம் திரும்பி ஓடினான்.

பின் தொடர்ந்து வந்த இருவரில் முன்னே வந்து கொண்டிருந்த ஒருவன், சேரன் வலப்பக்கம் திரும்புவதைப் பார்த்தான். அந்தச் சாலையில் ஏதாவது ஒரு பங்களாவுக்குள் அவன் நுழைந்து விடும் முன் பிடித்துவிட வேண்டும் என்னும் ஆவேசத்துடன், கால்களை எட்டப் போட்டான்.

ஓர் உருண்டைக் கல்லின் மீது அவன் கால் வைக்க, கல் அவன் காலை இழுத்துக் கொண்டு பக்கவாட்டில் உருள, அவன் கீழே விழுந்தான்.

விழுந்தவன் எழுந்து கொள்ள முயல்வதற்கு முன், அவனுடன் வந்த மற்றொருவன் அந்த இடத்துக்கு வந்துவிட்டான். அவன் நின்று, கீழே விழுந்தவனைத் தூக்கிவிடக் கையை நீட்டினான்.

விழுந்தவன் அதைப் பற்றிக் கொள்ளவில்லை.

“முட்டாளே! என்னைப் பிறகு கவனிக்கலாம். ஓடு. அந்தப் பையன் வலப்பக்கம் திரும்பி ஓடினான். அவனைத் தப்ப விடாதே! பிடி அவனை!”

கைநீட்டியவன், தன் கையை இழுத்துக் கொண்டு ஓடினான். சாலையை அடைந்து, வலப்பக்கம் திரும்பி ஓடினான்.

சாலைகளில் விளக்குகள் எரிந்தன. அந்த ஒளியில், தனக்கு முன்னே அந்தச் சிறுவன் எவ்வளவு தூரத்தில் ஓடுகிறான் என்பதை அறிய விரும்பிப் பார்த்தான். எதிரே சாலை நீண்டு சென்று, கீழ்நோக்கிச் சரிந்து இறங்

கியது. அந்தச் சரிவு வரை சாலையில் யாரும் இல்லை. அவன் தன் ஓட்டத்தை நிறுத்தாமல் தலையைத் திருப்பிப் பின்னே பார்த்தான். பின்னேயும் சாலையில் யாருமில்லை. ஒற்றையடிப் பாதையில் விழுந்த அவனுடைய கூட்டாளி அப்போது தான் சாலைக்கு வந்து சேருவதைக் கண்டான்.

பார்வையைத் திருப்பி முன்னே செலுத்தினன். 'பையன் சரிவில் இறங்கி ஓடிக் கொண்டிருப்பான்' என்று நினைத்தபடி அவன் ஓடினன். மூன்று நிமிடத்தில் சாலை சரிந்து கீழிறங்கும் இடத்தை அடைந்தான். அங்கும் யாருமில்லை.

அவன் மேலும் ஓடாமல் நின்றான். அதற்குள் விழுந்து எழுந்தவன் அங்கே வந்துவிட்டான். அவன் தன்னை ஏதாவது கேட்கும் முன் தானே அவனிடம் ஒரு கேள்வி கேட்டான்.

''ஜாக்கி! பையன் வலப்பக்கந்தான் திரும்பினனு? நல்லா பாத்தையா?''

''நல்லா பாக்காமச் சொல்லுவேனு! இந்தப் பக்கந்தான் திரும்பினன். ஏதாவது பங்களாவுக்குள் நுழைஞ்சுட்டானே? பாபு, நீ அந்தப் பக்கம் பங்களாக்களைக் கவனி. நான் இந்தப் பக்கம் பார்க்கிறேன்.''

பாபு சாலையின் எதிர்ப்பக்கம் நகர, ஜாக்கி, வலப்பக்கத்தைக் கவனித்தான்.

அரைமணி நேரம் சென்றது. இருவரும் சந்தித்தனர். அவர்கள் டார்ச் ஒளியில் பார்த்த பையன் எங்கே ஒளிந்து கொண்டான் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. 'இடப் பக்கம் திரும்பியிருக்கலாம்' என்று பாபு சொன்னதை ஜாக்கி சில முறை மறுத்தான். பிறகு 'சரி, அங்கும் பார்க்கலாம்' என்று கூறி அவனுடன் சென்று தேடினன். அவர்கள் தேடிய பையனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சாலையிலிருந்த பங்களாக்களுக்குள்ளே சென்று தேட அவர்களுக்குத் தைரியம் இல்லை. அதனல் வெளியிலிருந்தபடியே அலசிப் பார்த்தார்கள். பையன் கிடைக்கவில்லை. அவன் நிச்சயம் சாலை சரிந்து இறங்குவதற்கு முன்னேயுள்ள ஏதோ ஒரு பங்களாவில் இருக்க வேண்டும் என்று நினைத்தான், ஜாக்கி. அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதனல் ஜாக்கியும் பாபுவும் தம் மற்றக் கூட்டாளிகள் இருக்கும் இடத்துக்கு—தேனீ இறந்து கிடக்கும் இடத்துக்குப் போனர்கள்.

சேரன் எங்கே போனன்?

வலப்பக்கம் திரும்பி ஓடிக் கொண்டிருந்தான், சேரன். அப்போதே எதிரே வந்த காரின் விளக்கு அவன்மேல் பட்டது. சேரன் காரைப் பார்த்தான். அது விஜயின் கார். உடனே குறுக்கே நின்று கையைக் காட்டினன். டிரைவருக்குச் சேரனைத் தெரியும். அதனல் வண்டியை நிறுத்தினன். சேரன் பின் சீட்டின் கதவைத் திறந்து காரில் ஏறிக் கொண்டான்.

''என்ன தம்பீ, இப்படி ஓடி வர்றே?''

டிரைவரின் கேள்விக்குப் பதில் சொல்லும் நிலையில் சேரன் இல்லை.

''அப்புறம் சொல்றேங்க.''

டிரைவர் மேலும் ஒன்றும் கேட்காமல் காரைச் செலுத்தினன். கார், ஒற்றையடிப் பாதை சேரும் இடத்தைக் கடந்த பிறகுதான் பாபு சாலைக்குள் வந்தான். அதனல் கார் அவன் பார்வைக்குத் தப்பியது.

காரிலே டிரைவரைத் தவிர யாருமில்லை. விஜயின் தந்தை, தமது 'ஜேம்ஸ்பாண்ட் பெட்டி'யைப் பங்களாவில் விட்டுவிட்டு வந்துவிட்டார். அதைக் கொண்டு வருவதற்காக வந்த கார் சேரனைக் காப்பாற்றியது.

சேரன் பங்களாவில் இறங்கிக் கொண்டான். சிறிது நேரத்தில் டிரைவர், பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

பங்களாவின் மாடிக்குச் சென்ற சேரன், ஒரு கண்ணாடிச் சன்னலின் பின்னே நின்று சாலையைப் பார்த்தான். வெகுநேரத்துக்குப் பிறகு இரண்டு பேர், இருபுறங்களிலும் இருந்த பங்களாக்களை நோட்டமிட்டவாறு வருவது தெரிந்தது. அவர்கள் விஜயின் பங்களாவைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றார்கள். பிறகு வந்த வழியே திரும்பினார்கள்.

அவர்கள் தன்னை விரட்டி வந்தவர்களே என்பதைச் சேரன் உணர்ந்தான். "அவர்கள் மீண்டும் வரலாம். ஒருவேளை பொழுது விடிந்த பிறகு வரலாம். அவர்களிடம் சிக்கக் கூடாது. உடனே கோயமுத்தூர் போய்விட வேண்டும்" என்று நினைத்தான் சேரன்.

நினைத்தவுடனே அவனால் புறப்பட முடியுமா? விஜய் வரும் வரை காத்திருக்க வேண்டும்! அதைத் தவிர வேறு வழியில்லை.

இரவு எட்டு மணிக்கு, சமையற்காரனின் வற்புறுத்தலால் சேரன் ஓரளவு சாப்பிட்டான். அதன்பின், விஜயை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.



மணி ஒன்பதாயிற்று!

விஜய் வரவில்லை.

சேரன் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தான். கம்பளியைக் கழுத்து வரை போர்த்திக் கொண்டான். அறைக்குள் இருந்த ஹீட்டரின் கதகதப்பை அனுபவித்துக் கொண்டே, அறைக் கதவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இமைகள் மெல்லக் கீழிறங்கின!

"தூங்கக் கூடாது! தூங்கக் கூடாது" என்று கூறிக் கொண்டே சேரன் படுக்கையிலிருந்து இறங்கினான். அறைக்குள்ளேயே நடந்தான்.

மணி ஒன்பதரை!

சேரன் இருந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு விஜய் உள்ளே வந்தான். அறைக்குள்ளே, கூண்டில் அடைக்கப்பட்ட புலியைப் போல நடை போட்டுக் கொண்டிருந்த சேரனைப் பார்த்ததும் வியப்படைந்தான்.


"சேரா! நீ இன்னும் தூங்கலையா?"

விஜய் கேட்டான். அவனைக் கண்டதும் சேரன் முகம் மலர அவனருகே வந்தான்.

"விஜய்! நான் இப்பவே கோயமுத்தூர் போகணும். பஸ்ஸிலோ, டிரெய்னிலோ அனுப்பி வச்சுடு. ப்ளீஸ்!"

சேரனின் வேண்டுகோள் விஜயின் வியப்பை விந்தியமாக உயர்த்தியது. அவன் சேரனை நன்றாகப் பார்த்தான். அவனிடம் ஒரு வகை பதட்டம் இருந்தது. அவன் உடையில் இன்னும் ஆங்காங்கே மண் ஒட்டிக் கொண்டிருந்தது. கண்களில் ஏதோ ஒரு கலவரம் தெரிந்தது.

"சேரா! உனக்காக நான் எதுவும் செய்வேன். ஆனால், இப்போது மணி ஒன்பதரைக்கு மேலாகிவிட்டது. இதற்குமேல் டிரெய்னும் இல்லை. இந்த இரவில், இந்தக்



'இவர் ஒரு சிறந்த கவிஞர்' என்று புகழ்பெற்ற பல கவிஞர்கள் கூடி ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு 'கவிமாமணி' விருது வழங்கப் பெறுகிறது. இத்தகைய சிறப்பு மிக்க விருதினை இந்த ஆண்டு பெற்றவர். குழந்தைகளுக்காகவும் பல சிறந்த பாடல்களை இயற்றியுள்ள திரு. இளையவன்தான்!

திரு. இரா. சுராஜ் தலைமையில் இயங்கிவரும் பாரதி கலைக்கழகத்தின் 33—வது ஆண்டுவிழாவில், 'கோகுலம்' கௌரவ ஆசிரியர் தலைமையில், நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் இந்த விருதினை வழங்கினார்.

குளிரில், கோயமுத்தூருக்குப் போக வேண்டிய அவசரம் என்ன? உன் அம்மாவுக்கோ, அப்பாவுக்கோ உடம்பு சுகமில்லையா? ஏதாவது செய்தி வந்ததா?''

'இல்லை' என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினான், சேரன்.

''பின் ஏன் இப்பவே கோயமுத்தூர் போகணும்னு சொல்றே? ஞாயிற்றுக் கிழமை ஊருக்குத் திரும்புவதுதானே நமது திட்டம்?''

''ஆமாம் விஜய். ஆனாலும் நான் இப்போதே கோயமுத்தூர் போகணும். ஏன்—எதற்காக என்று கேட்பதற்கு உனக்கு உரிமை இருக்கு. ஆனால் இப்போ அதை நான் சொல்லக் கூடாது. திரும்பவும் உன்னைக் கோவையில் சந்திக்கும்போது நிச்சயம் சொல்றேன். என்னை எப்படியாவது கோவைக்கு அனுப்பு.''

சேரனின் குரலிலும் ஒரு பதட்டம். அவன் திடீரென்று மாறியிருப்பது தெரிந்தது. சேரன் ஏன் இப்படியிருக்கிறான்? எதற்காகக் கோவைக்குப் போக வேண்டும் என்று விரும்புகிறான்? விஜய் இதை மேலும் கேட்க விரும்பவில்லை.

''சரி, சேரா! நீ இப்போது சொல்ல வேண்டாம். உன் ரகசியத்தை நீ விரும்பும்போது சொல். ஆனால் இந்த இரவில் உன்னை அனுப்ப முடியாது. வெளியே பனி மூட்டம் அதிகம். குளிரும் அதிகம். அதனால் மலைவழியில், கொண்டை ஊசி வளைவுகளில் இந்தச் சூழலில் செல்வது நல்லதில்லை. அதற்கும் மேலே ஒன்று! டிரைவர் காலையிலிருந்து ஓய்வில்லாமல் வேலை செய்துகொண்டேயிருந்தான். அப்பா, அவனிடம், நல்லாத் தூங்கு! காலையிலே பத்து மணிக்கு எழுந்தாலும் போதும்னு

சொன்னார். இந்நேரம் அவன் அசந்து தூங்கியிருப்பான். அவனை எழுப்பி வண்டி எடுக்கச் சொல்றதும் சரியில்லே. சேரா! பொழுது விடிந்ததும் உன்னை முதல் பஸ்ஸிலே கோவைக்கு அனுப்பறேன். சரிதானே!''

சேரனால் 'சரி' என்று சொல்வதைத் தவிர வேறெதுவும் சொல்ல முடியவில்லை.

விஜய் படுத்து விட்டான். சேரனும் படுத்தான். அவனால் தூங்க முடியவில்லை. படுக்கையில் நெளிந்து கொண்டேயிருந்தான்.

''சேரா! காலையிலே எழுந்திருக்கணும்னா இப்போ நல்லாத் தூங்கணும். மத்த நினைவுகளை ஒதுக்கி விட்டுத் தூங்கறதிலே கவனம் செலுத்து.''

விஜய் குரல் ஒலித்தது.

''நீ சொல்வது உண்மை! சீக்கிரம் தூங்கினால்தான், சீக்கிரமாக எழுந்து கொள்ள முடியும். குட் நைட் விஜய்.''

''குட் நைட்.''

சேரன் சீக்கிரமாகத் தூங்கிவிட்டான். மறுநாள் காலை, 'சேரா! சேரா!' என்று விஜய் அழைத்தபடி அவன் உடம்பையும் அசைத்த போது தான் எழுந்தான்.

எழுந்தபோதே, ''மணி என்ன விஜய்? பொழுது விடிஞ்சுட்டுதா?'' என்று கேட்டான், சேரன்.

''மணி ஏழாயிட்டுது. ஆனால் பொழுது விடியலே. ஊட்டி சூரியன் கொஞ்சம் சோம்பேறி. தாமதமாத் தான் எழுந்திருப்பான். நீ அவசரமாக போகணும்னு சொன்னதாலே உன்னை எழுப்பிட்டேன். டிரைவரையும் எழுப்பச் சொல்லிட்டேன். சீக்கிரம் பல் தேய்ச்சு, முகம், கழுவித் தயாராகு. டிபன் ரெடி. சாப்பிட்டுட்டுப் போகலாம்.''

''நன்றி விஜய்'' என்றபடி போர்வையை விலக்கி எழுந்தான் சேரன். அடுத்த அரை மணிக்குள் சுடச்சுட இட்லி சாப்பிட்டு விட்டுத் தயாரானான்.

விஜய் அவனிடம் இருபது ரூபாய் கொடுத்தான்.

''சேரா! இங்கே அப்பாவுக்குக் கார் தேவை. அதனால் நீ பஸ்ஸில் ஊருக்குப் போகணும். டிரைவர் உன்னை பஸ் ஸ்டாண்டில் விடுவான். கோவைக்கு பஸ் கட்டணம் பத்து ரூபாய்க்குள் இருக்கும். அதற்குத் தான் இந்தப் பணம்.''

''அப்போ, பத்து ரூபாய் போதுமே! எதுக்கு இருபது ரூபாய்?'' என்றபடி, இரண்டு பத்து ரூபாயில் ஒன்றை அவனிடம் நீட்டினான் சேரன்.

''இருக்கட்டும். ஒருவேளை பதினொரு ரூபாயாக இருந்தால் என்ன



செய்யறது? எனக்கு பஸ் சார்ஜ் தெரியாது. மீதியை அப்புறம் வாங்கிக்கறேன்.''

சேரன் இருபது ரூபாயைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். இருவரும் பங்களாவின் வெளியே வந்தார்கள்.

கார் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டிருந்த டிரைவர், அதை நிறுத்தி, கார் கதவைத் திறந்துவிட்டான். சேரன் பின் சீட்டில் உட்கார்ந்தான். விஜயிடம் விடை பெற்றுக் கொண்டான்.

கார் பங்களாவை விட்டு வெளியே வந்தது. பனி மூட்டம் முற்றிலும் விலகாத சாலையில் சென்றது.



மாணவருக்கு மகாத்மா

* மாணவர்கள் பள்ளிகளில் எதைப் படிக்கின்றனர், எதைப் படிக்கவில்லை என்று நான் கவலைப்படவில்லை. ஆனால், அசாதாரண சூழ்நிலைகளில் கூட அச்சமின்றி உண்மையைப் பின்பற்றுபவனே சிறந்த மாணவன்.

* மனம், உடல், செயல் ஆகிய மூன்று நிலைகளிலும் தூய்மையைக் கடைப்பிடிக்கும் மாணவனே பிறருக்குத் தொண்டு செய்யும் தகுதி பெறுகிறான். இம்மூன்று தூய குணங்களும் ஒரு மாணவன் வாழ்க்கையில் அமையுமானால், அவன் வாழ்க்கையில் வெற்றி பெறுவது நிச்சயம்.

—கௌசல்யா (7249), கோவை—1.

சிறிதுநேரம் பொறுத்து சேரன் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் ஒரு வெள்ளை நிற அம்பாசிடர் கார் வருவது தெரிந்தது.

சில நிமிடம் பொறுத்து மீண்டும் திரும்பிப் பார்த்தான் சேரன். அதே அம்பாசிடர் கார், அதே இடைவெளியில் வந்தது. காரையே உற்றுப் பார்த்தான். காரின் முன் சீட்டில் டிரைவரும், டிரைவருக்குப் பக்கத்தில் ஒருவனும் இருப்பதைப் பார்த்தான்.

டிரைவர் குறுந்தாடி வைத்திருந்தான். தலையில் ஒரு சென்டி மீட்டர் உயரமுள்ள முடி! அண்மையில் மொட்டையடித்துக் கொண்டான் போலும். அருகே இருந்தவன் தலையில் அடர்த்தியான முடி! சுருள் சுருளான முடி!

"யார் இவர்கள்?''

"ஒருவேளை நேற்று என்னை விரட்டிய ஆசாமிகளோ?''

"டிரைவர் மெதுவாகப் போங்க'' என்றான் சேரன்.

டிரைவர் கிளட்சை மாற்றி, ஆக்சிலேட்டரை மிதித்த காலின் அழுத்தத்தைக் குறைத்து, காரின் வேகத்தைக் குறைத்தான்.


சேரன் திரும்பிப் பார்த்தான். வெள்ளை அம்பாசிடரும் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டதே தவிர, சேரனின் காரைத் தாண்டிப் போகவில்லை.

"டிரைவர், கொஞ்சம் வேகமாகப் போங்க.''

கார் வேகமாகச் சீறிப் பாய்ந்தது. பின்னே வந்த அம்பாசிடரும் அதே வேகத்தில் வந்தது. இரண்டுக்கும் இடையே இருந்த தூரம் மாறவில்லை.

அம்பாசிடரில் வருபவர்கள் தன்னைப் பின்தொடர்ந்து வருகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டான் சேரன்.

'நேற்றிரவு அவர்களிடமிருந்து தப்பிவிட்டேன். இப்போது எப்படித் தப்புவது?'



சேரன் கவலையடைந்தான். அடிக்கடி பின்னே திரும்பி அம்பாசிடரைப் பார்த்தபடியிருந்தான்.

சேரன் வந்த கார் சேரிங்கிராஸை அடைந்து, திரும்பி சூப்பர் மார்க்கெட்டைக் கடந்து சென்றது. சிறிது தூரத்தில் உதகையின் பிரதான மார்க்கெட். அதற்கு முன்னே சாலை Y போல இரண்டாகப் பிரிந்தது.. மார்க்கெட், இரண்டு சாலைகளுக்கு நடுவே இருந்தது.

சேரன் வந்த கார் வலப்புறம் உள்ள சாலையில் செல்ல வேண்டும். அப்போது இடப்புறமிருந்த சாலையிலிருந்து ஒரு பெரிய லாரி வந்து கொண்டிருந்தது. அது நேராகச் செல்வதாகத்தான் தெரிந்தது. அதனால் டிரைவர் தன் வழியே காரைச் செலுத்தினான். வேகத்தைக் குறைக்காமல் செலுத்தினான். அதே நேரத்தில் எதிரே இடப்புறச் சாலையில் வந்த லாரி ஒரு 'யூ டர்ன்' போட்டுத் திரும்பி, வலப்புறச் சாலையில் செல்ல முயன்றது. இதைச் சற்றும் எதிர்பார்க்காத டிரைவர், காரை நடைபாதையை உரசியபடி ஓட்ட, லாரிக்காரன் திடீர் பிரேக் போட்டான்.

சேரன் வந்த கார் மயிரிழையில் தப்பிச் செல்ல, இடையே புகுந்த லாரி, சாலையின் குறுக்கே நின்றது. அதனால், பின் தொடர்ந்த அம்பாசிடர், லாரிக்கு மறுபுறம் நின்றுவிட்டது.

பின்னே திரும்பிப் பார்த்த சேரன் இதைக் கவனித்தான். உடனே, "டிரைவர், காரை நிறுத்துங்க, சீக்கிரம்" என்றான்.

கார் நின்றது.

சேரன் அவசர அவசரமாகக் காரிலிருந்து இறங்கினான்.

"டிரைவர்! நானே பஸ் ஸ்டாண்டுக்குப் போய் விடறேன். நீங்க இப்படியே எங்காவது கொஞ்சம் சுற்றிவிட்டுத் திரும்பிப் போங்க. பிளீஸ்! காரணம் கேட்காதீங்க பிளீஸ்! கிளம்புங்க!"

நேற்றிரவே சேரனின் கலவரத்தைப் பார்த்த டிரைவர், இன்று 'மெதுவாப் போங்க — வேகமாப் போங்க' என்று சேரன் கூறியதையும் பின்னே அம்பாசிடர்

தொடர்ந்து வருவதையும் கவனித்திருந்தான். 'சேரனை யாரோ பின் தொடர்கிறார்கள். அவர்களிடமிருந்து தப்பத் துடிக்கிறான்' என்பதைப் புரிந்துகொண்டான். அதனால் காரை உடனே கிளப்பினான்.

சேரன் சாலையின் ஓரம் இருந்த ஒரு கடை மறைவில் நின்று கவனித்தான்.

இரண்டு நிமிடத்தில் சாலையின் குறுக்கே நின்ற லாரி, திரும்ப முடியாமல், பின்னே சென்றது. அது கொஞ்சம் நகர்ந்ததும், ஒரு ஆட்டோ ரிக்ஷாவின் சாமர்த்தியத்தோடு, அம்பாசிடர் அந்த வழியில் நுழைந்தது. நுழையும் போதே டிரைவர் எதிரே பார்த்தான். தூரத்தில் நீலநிற பியட் போவது தெரிந்தது. உடனே ஆக்சிலேட்டரை அழுத்தினான். அம்பாசிடர் காற்று வேகத்தில் பறந்தது.

கடையின் மறைவில் நின்ற சேரன் அம்பாசிடரை நன்றாகப் பார்த்தான். உள்ளே இருந்த இரண்டு பேரையும் கவனித்தான். அவர்கள் பார்வை அவன் பக்கம் திரும்பவில்லை.

சேரன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

விஜயின் டிரைவர் வேகமாகப் போயிருக்கலாம். ஆனாலும், அப்படிப் போகவில்லை. ஓரளவு நிதானமாகச் சென்றான். கொஞ்ச நேரத்தில் அம்பாசிடர் பின்னே வருவது தெரிந்தது. 'சேரன் பஸ்ஸைப் பிடித்துச் செல்லும் வரை இந்த அம்பாசிடரில் இருப்பவர்களைக் கொஞ்சம் போக்குக் காட்டி அழைத்துச் செல்ல வேண்டும்' என்று நினைத்தான். அதனால் காரைத் திருப்பி மார்க்கெட்டின் மறுபுறம் இருந்த சாலையில் செலுத்தினான். அம்பாசிடரும் அப்படியே சென்றது. அதைக் கண்டு மகிழ்ந்த டிரைவர் மீண்டும் சேரிங் கிராசைக் கடந்து வலப்பக்கம் திரும்பிப் போனான். அம்பாசிடரும் அப்படியே சென்றது.

இப்படி அரை மணி நேரம் போக்குக் காட்டிய பிறகு விஜயின் பங்களாவுக்குச் சென்றான், டிரைவர். அப்போதும் அம்பாசிடர் அதைப் பின் தொடர்ந்ததைக் கவனித்தான்.

காரை, போர்டிகோவில் நிறுத்தி விட்டு வெளியே வந்து டிரைவர் பார்த்த போது, அம்பாசிடர், வந்த வழியே திரும்பிச் சென்று கொண்டிருப்பதைக் கண்டான்.

"சேரனைப் பிடிக்கவா பார்த்தீங்க! அவன் இந்நேரம் குன்னூரைக் கடந்திருப்பான், தெரியுமா?"

டிரைவர் மனத்திலே நினைத்த போதே அவன் முகத்திலே ஒரு வெற்றிப் புன்னகை படர்ந்தது.

அந்த டிரைவருக்கு, அம்பாசிடரில் வந்தவர்கள் துப்புத் துலக்குவதில் மிக்க திறமையானவர்கள் என்பது தெரியாது.


அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு அதே மனிதர்கள், கோயமுத்தூரில், நெசவாளர் காலனியில், சேரனின் வீட்டின் மூடிய கதவைத் தட்டிக் கொண்டிருந்தார்கள்!

(தொடரும்)

தாயார்: ஏண்டா பள்ளிக்கூட கரும் பலகையைத் தூக்கிகிட்டு வர்றீங்க?

பையன்: எங்க வாத்தியார் இந்தக் கணக்குகளை 'ஹோம் வொர்க்' செய்யச் சொன்னாரு.

—உதயம்.



'டிங்கினானே'



தணிகை உலகநாதன்

மாமண்டூர் ஒரு சிற்றூர். அங்கே கந்தனின் மாமா இருந்தார். கந்தன் கிறிஸ்துமஸ் விடுமுறையில் மாமா வீட்டுக்குப் போய் இருந்தான். அங்குள்ள இயற்கை அழகைக் கண்டு களித்தான்.

ஒருநாள் இரவு அங்குள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் பாரதக் கதை நடந்து கொண்டிருந்தது. கந்தன் தன் மாமாவுடன் பாரதக் கதையைக் கேட்கச் சென்றான். எள் விழுவதற்கும் இடம் இல்லாதபடி ஊர் மக்கள் திரளாகக் கூடிப் பாரதக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். மண்டபத்தில் இருந்த மேடையில் பெரிய விளக்கொன்று எரிந்தது. கதை தொடங்கிச் சிறிதுநேரம் சென்ற பிறகே கந்தனும், அவன் மாமாவும் அங்கே சென்றனர்.

அப்போது, உடுக்கைக்காரர், 'டிங்கினானே! டிங்கினானே!' என்று சொல்லி ஆலாபனம் செய்ய ஆரம்பித்து விட்டார். கூடியிருந்த மக்கள் பலமாகக் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

கந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது நேரத்தில் கதை முடிந்தது. மங்களம் பாடியவுடன் கந்தன் தன் மாமாவைப் பார்த்து, "மாமா, 'டிங்கினானே! டிங்கினானே!' என்று பாகவதர் பாடினாரே, அப்படியென்றால்...?" என்று கேட்டு முடிப்பதற்குள், அவர் சிரித்துக் கொண்டே, "கந்தா, ஒரு யானையை அடிப்பதற்காகப் பீமசேன மகாராஜன் மரத்தைப் பிடுங்கினானாம். 'மரத்தைப் பிடுங்கினானே' என்பதைத்தான் அழகாகப் பாடினார்" என்றார்.

மறுநாள் இருவரும் தாம் கேட்ட அந்த 'டிங்கினானே' கதையை வீட்டிலிருந்த அனைவரிடமும் கூறிச் சிரித்தார்கள்.

கந்தன், மாமாவைப் பார்த்து, "மாமா! நேற்று இரவு நடந்த பாரதக் கதை வேடிக்கையாக இருந்தது. கேட்பவருக்கு விளங்காதபடி பாடும் பாட்டுக்குக் கூட எவ்வளவு கூட்டம்! பார்த்தீர்களா?" என்றான்.

"கந்தா! அவர்களுக்குப் பொருள் விளங்கினால் என்ன? விளங்காவிட்டால் என்ன? கதை கேட்பது ஒரு புண்ணியம் என்பதற்காகப் பலர் இப்படிக் கூடி இருக்கலாம். வீட்டிலேயே அடைபட்டுக் கிடப்பவர்களுக்கு ஒரு நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கலாம் இல்லையா? அது போகட்டும். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா?"

"பேசும்போதோ, எழுதும்போதோ கேட்பவர்கள் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுமாறு சரியான முறையில் சொற்களைப் பிரித்துப் பேச வேண்டும்; எழுத வேண்டும், மாமா!"

"ஆமாம், கந்தா! 'புத்தியில்லாதவன்' என்னும் சொற்றொடரில் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட பொருள்

உண்டாவதைக் காணலாம்.'

"எப்படி மாமா?"

"புத்தி இல்லாதவன்" என்று பிரித்தால் 'அறிவு இல்லாதவன்' என்றும், "புத்தியில் ஆதவன்" என்று பிரித்தால் 'புத்தியில்'சூரியனைப் போன்ற ஞானம் உள்ளவன்'. என்றும் பொருள்படும். ஓர் உணவு விடுதியில் 'பெண்மணி கள்சாப்பிடும் இடம்' என்று எழுதப்பட்டிருந்ததாம். இதன் பொருள் 'பெண்கள் கள்ளைக் குடிக்கும் இடம்' அன்றோ? 'பெண் மணிகள் சாப்பிடும் இடம்' என்று சரியாகப் பிரித்து எழுதி இருந்தால் இந்த விபரீதம்-நேர்ந்திருக்குமா? இப்படியே இன்னும் சில வேடிக்கையான சொற்றொடர்களைக் காணலாம்.

"வேடிக்கையா, சொல்லுங்கள் மாமா!"

'இதோ இந்தச் சொற்றொடரைப் பார், கந்தா, இந்தச் சொற்றொடர், காக்கைக்காகா கூகை கூகைக்காகா காக்கை' என்று ஒரு தொடராகச் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. இதையே காக்கைக்கா காகூகை கூகைக்கா கா கா க் கை என்று பிரித்தாலும் பொருள் விளங்காது.

'காக்கைக்கு ஆகா கூகை;
கூகைக்கு ஆகா காக்கை.'

என்று பிரித்தால் எளிதாகப் பொருள் விளங்கும். கூகை என்பது கோட்டான்.

காக்கைக்குக் கோட்டான் பிடிக்காது;
கோட்டானுக்குக் காக்கை பிடிக்காது.

இரண்டுக்கும் பகை என்பது பொருள்.

மாமா கூறிய உதாரணங்களைக் கேட்ட கந்தன் ஒருவர் தாம் எண்ணிய செய்தியைப் பிறர் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் எங்கெல்லாம் இடம்விட்டு எழுத வேண்டுமோ அங்கெல்லாம் இடம் விட்டும், எங்கெல்லாம் சேர்த்து எழுத வேண்டுமோ அங்கெல்லாம் சேர்த்தும்எழுத வேண்டும் என்னும் முறையை அழுத்தம் திருத்தமாக அறிந்து கொண்டான்.

திருக்குறள் புதிர் விடை

விடை: 37

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். (64)


ஒருவர் கூழ் குடிக்கும்போது அவருடைய குழந்தைகள் அக்கூழில் தங்களின் பூப்போன்ற கைகளைப் போட்டுத் துழாவுகிறார்கள். அப்படி அவர்கள் கைபட்ட உணவானது அமிழ்தத்தைக் காட்டிலும் மிகுந்த சுவையுடையதாயிருக்கிறது.

விடை: 38

சொல் வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். (827)

வில்லின் வணக்கம் தீமையைக் குறிக்கும். அதுபோலத்தான், பகைவர்களின் சொல்லில் காணப்படும் வணக்கமும் தீங்கையே உண்டாக்கும். ஆகையால், அவர்களின் பேச்சிலே மயங்கிவிடக் கூடாது.

பாட்டியின் சேவல்



குழந்தைக் கவிதை

கொக்க ரக்கோ என்றே அந்தச்
சேவல் கூவிடும்.
கொஞ்ச நேரம் சென்ற வுடனே
பொழுது விடிந்திடும்.
மக்க ளெல்லாம் விடியும் பொழுதே
எழுந்து கொள்ளுவார்;
வழக்கம் போல வேலை களைச்
செய்யத் தொடங்குவார்.

'என்றன் சேவல் கூவி னால்தான்
பொழுது விடிந்திடும்;
இல்லை யானால் இந்த ஊரே
இருளில் மூழ்கிடும்'
என்றே எண்ணி அந்தச் சேவல்
சொந்தக் காரியாம்
ஏழைப் பாட்டி சேவ லுடனே
கிளம்பிச் சென்றனள்.

எட்டு மீட்டர் கடந்து அங்கோர்
மண்ட பத்திலே
இரவு முழுதும் சேவ லுடனே
தங்கி யிருந்தனள்.
கொட்டக் கொட்ட விழித்தி ருந்து
சேவல் கூவிலே
கொஞ்ச நேரம் ஆன வுடனே
தெருவில் வந்தனள்.

அன்று தனது ஊரில் இருந்து
அந்தப் பக்கமாய்
வந்தோ ரிடத்தில் "நமது ஊரில்
பொழுது விடிந்ததா?"
என்று கேட்க, "ஆமாம் பாட்டி.
பொழுது விடிந்தது.
எதற்கு நீயும் கேட்கி றாயோ?"
என்றார் அவர்களும்.

"என்றன் சேவல் கூவி டாமல்
பொழுது விடியுமா?
இல்லை, இல்லை, பொய்தான்" என்றாள்
ஏழைப் பாட்டியும்.
"உன்றன் சேவல் கூவித் தானா
உதிக்கும் சூரியன்?
நன்று, நன்று" என்று கூறி
நகைக்க லாயினர்.

பழைய கதை; புதிய பாடல்

கேளுங்கள்; சொல்லுகிறோம்

*** தமிழில் முதல் முதலாகக் குழந்தைப் பத்திரிகையை ஆரம்பித்தவர் யார்? பத்திரிகையின் பெயர் என்ன?**

—பா. இந்துமதி, மேலமலையனூர்.

நாகர்கோயிலில் இருந்த கிறிஸ்தவப் பிரசார சபையார் 'பால தீபிகை' என்ற பெயரில் 1840—ல் ஒரு சிறுவர் பத்திரிகையைத் தொடங்கி 12 ஆண்டுகள் நடத்தினார்கள். அது 3 மாதங்களுக்கு ஒரு முறையாக வெளிவந்தது.

*** என் சொந்தக்காரர் ஒருவர் நடு இரவிலே எழுந்திருப்பார். தூங்கியபடியே சிறிது தூரம் நடப்பார். இதற்கு என்ன காரணம்?**

—பா. ராமசாமி, திண்டுக்கல்.

இது ஒரு விதமான வியாதி. ஆங்கிலத்தில் ஸோம்னம்புலிஸம் (somnambulism) என்று சொல்லுகிறார்கள். ஹிஸ்டீரியா என்ற நோயின் அறிகுறி என்று கூறப்படுகிறது. உளவியல் நிபுணர்களைக் கலந்து ஆலோசிப்பது நல்லது.

*** பாம்பு சத்தம் போடுமா?**

—எஸ். குமார், கும்பகோணம்.



பாம்புக்குக் குரல் வளையும் இல்லை; குரலும் இல்லை. ஆனாலும், கோபம் வரும்போது நுரையீரலுக்குள் காற்றை இழுத்து இழுத்து வெளியிடுவதால் 'உஸ், உஸ்' என்று சீறுவது போல் சத்தம் கேட்கிறது.

*** உங்கள் கையெழுத்து கொஞ்சம் இளைத்துப் போய் இருக்கும் என்றீர்களே, நிறைய வைட்டமின் சாப்பிடுங்கள். பாரதியார் போல் குண்டுகுண்டாக எழுத ஆரம்பித்து விடுவீர்கள்.**

—ராஜீ நவி, புதுவை—1.

அப்போதும் என் எழுத்து குண்டாகாது; நான்தான் குண்டாவேன்!

*** சூரிய கிரகணத்தை ஏன் கண்ணால் பார்க்கக் கூடாது?**

—ஆர். வசுமதி, சிதம்பரம்—1.

ஒன்றிரண்டு விநாடிகள் பார்க்கலாம். அதற்குமேல் பார்த்தால் கண் கூசும்; கெடுதலும் உண்டாகும். அதனால்தான் புகை படிந்த கண்ணாடி அல்லது போட்டோ பிலிம் மூலமாகப் பார்க்க வேண்டும் என்கிறார்கள்.

*** மகாகவி பாரதியாரை நீங்கள் நேரில் பார்த்திருக்கிறீர்களா?**

—ஆர். மீனலோசனி, மாங்குடி.

இல்லையே! அவர் காலமான பிறகுதான் நான் பிறந்தேன். அவர் மறைந்த ஆண்டிலே கூட நான் பிறக்கவில்லை. அப்படிப் பிறந்திருந்தால், 'நான்தான் பாரதியாரின் மறு பிறவி' என்று பெருமையடித்துக் கொள்ளலாம். அதற்கும் வழியில்லை.

*** விஞ்ஞான விளையாட்டை ஏன் வெளியிடுவதில்லை?**

—ஆர். வெங்கடேசன், உசிலம்பட்டி.

சில புதிய பகுதிகளைத் துவக்கும் போது, பழைய பகுதிகளில் சிலவற்றை நிறுத்தி வைக்க வேண்டியிருக்கிறது.



• **பூனை குறுக்கே போனால் அபசகுனம் என்கிறார்களே, இது உண்மையா?**

—கே. வெங்கடேசன், சுந்தராபுரம்.

இது ஒரு மூட நம்பிக்கைதான். கிராமங்களில் வேண்டுமானால் இப்படிக் கூறிக் கொண்டிருக்கலாம். ஜனநெருக்கமுள்ள பட்டணங்களில், பூனைகள் வசிக்கும் இடங்களில் கூட மனிதர்கள் வசிக்கிறார்களே. ஆகையால் பூனைகள் குறுக்கும், நெடுக்குமாகச் சென்று கொண்டுதானிருக்கும். ஒவ்வொரு தடவையும் சகுனம் பார்க்க முடியுமா?

• **குழந்தைகள் திரைப்படங்களைப் பார்ப்பதுண்டா?**

—எஸ். ஜெயஸ்ரீ, ஈரோடு—10.

ஓ! சமீபத்தில் கூட 'மை டியர் குட்டிச் சாத்தான்' பார்த்தேனே!

• **மயிலாப்பூரிலுள்ள கபாலீஸ்வரர் கோயில்முன்பு கடற்கரை ஓரமாக இருந்தது என்கிறார்களே, உண்மையாக இருக்குமா?**

—என். சுமதி, சென்னை—4.

உண்மைதான். இப்போது சாந்தோம் மாதா கோயில் இருக்கிறதே அந்த இடத்திலோ அதற்குப் பக்கத்திலோ முன்பு கபாலீஸ்வரர் கோயில் இருந்ததாம். அந்தக் கோயிலைப் போர்ச்சுக்கீசியர்கள் இடித்து விட்டார்களாம். அதற்குப் பிறகே இப்போதுள்ள இடத்தில் கபாலீஸ்வரர் கோயில் கட்டப்பட்டதாம்!

• **நம் இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்து விட்டது என்கிறார்களே, எவ்வளவு குறைந்திருக்கிறது?**

—சி.பட்டாபி, ஸ்ரீரங்கம்.

ஒரு ரூபாய் என்று நாம் சொல்லுகிறோமே, அதன் உண்மையான மதிப்பு 17 பைசாதானாம்! அந்தக் காலத்தில் நாலணாவுக்குக் கூட மிகுந்த மதிப்பு இருந்ததாம். 120 ஆண்டுகளுக்கு முன்பு, ஒருவர் தம்முடைய கால் ரூபாய் நாணயம் தொலைந்து விட்டதென்று டில்லியிலுள்ள கொட்வாலி போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்தாராம்!

• **கடல் ஏன் பொங்குகிறது? எப்போது?**


—அ. கலைச்செல்வன், திண்டுக்கல்.

பூமியில் எங்கேனும் அதிர்ச்சி ஏற்பட்டாலும், கடலுக்கு அடியிலுள்ள எரிமலைகள் வெடித்தாலும் கடல் பொங்கும். பௌர்ணமி, அமாவாசை தினங்களில் அலைகள் உயர உயர எழும்புவதுண்டு. சந்திரனும், சூரியனும் இணைந்து ஒரு முகமாகப் பூமியை இழுப்பதுதான் இதற்குக் காரணம்.

• **இந்திராகாந்தி இளம் வயதில் வானர சேனை' என்ற தொண்டர் படையை ஆரம்பித்தார் என்று படித்தேன். என் அம்மா சிறுமியாக இருந்த போது 'வானர சேனை' என்ற ஒரு குழந்தைப் பத்திரிகையைப் படித்தாராம். அதை யார் நடத்தினார்கள்?**

—கே. காமாட்சி, திருச்செந்தூர்.

இப்போது 'குமுதம்' - பத்திரிகையின்



இணை ஆசிரியராயிருக்கிறாரே ரா. கி. ரங்கராஜன், அவர்தான் நடத்தினார்.


• **என் போன்ற சிறுவர்கள் புனைபெயரில் கதை எழுதலாமா? புனை பெயர் வைத்துக் கொள்ள - எங்கேனும் பதிவு செய்து கொள்ள வேண்டுமா?**

—கா. சிவசுப்பிரமணியன், ஏம்பலம்.

யார் வேண்டுமானாலும் புனை பெயரில் எழுதலாம். பதிவு செய்யத் தேவையில்லை. தொடர்ந்து அதே பெயரில் நல்ல கதைகளை எழுதிவந்தால், புனை பெயர் வாசகர் மனத்தில் பதிவாகிவிடும்.

• **யானைக்குட்டி அம்மாவிடம் துதிக்கையால் பால் குடிக்குமா? அல்லது வாயால் குடிக்குமா? யானையின் துதிக்கையில் எத்தனை எலும்புகள் இருக்கும்?**

—ப. ராஜகுமார், கல்லுப்பட்டி.



வாயால்தான் பால் குடிக்கும்.

யானையின் துதிக்கையில் ஓர் எலும்பு கூடக் கிடையாது. எல்லாம் தசைகளே. அதனால்தான், அது துதிக்கையை வளைக்கிறது; முறுக்குகிறது; சுற்றுகிறது; மேலே தூக்குகிறது. கீழே தாழ்த்துகிறது. எலும்புகள் இருந்தால் இப்படியெல்லாம் செய்ய முடியுமா? ஆனாலும், துதிக்கை மிகவும் பலமான உறுப்பு. ஒரு டன் எடையுள்ள மரத்தைக் கூட அது சுலபமாகத் தூக்கிவிடும்!

*** இந்தத் தேர்தலில் நீங்கள் யாருக்கு ஓட்டுப் போட்டீர்கள்?**

—இ. அண்ணாமலை, வேதாரண்யம்.

ஐயையோ! அது இரகசியமாயிற்றே! வெளியே சொல்லலாமா? இருந்தாலும், இப்படி உன் காதை என் வாய் அருகிலே கொண்டு வா, சொல்லுகிறேன்:

தேர்தலுக்கு நின்றவர்களில் யார் யோக்கியமானவராகவும், நாட்டுப்பற்று உடையவராகவும், பிறருக்காக உழைக்கக் கூடியவராகவும் இருக்கிறார் என்று பார்த்தேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று பார்க்கவில்லை. இருந்தாலும், நான் எதிர்பார்த்த மாதிரி ஒருவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்காக ஓட்டுப் போடாமல் இருக்கலாமா? எங்கள் தொகுதியில் தேர்தலுக்கு நின்றவர்களில் கூடுமானவரை நான் சொன்ன தகுதிகளைப் பெற்ற ஒருவருக்கு வாக்களித்து விட்டேன்.

*** 'செண்பகப் பட்சி' என்று சொல்லுகிறார்களே, அதை நீங்கள் பார்த்ததுண்டா?**

—எஸ். வனமாலி, திருப்பதி.

பார்த்ததில்லை. கேள்விப்பட்டிருக்கிறேன். 'செம்போத்து' என்றும் அதைச் சொல்லுகிறார்கள். மூங்கில் புதர்களிலும், செடிகளிலும் வசிக்குமாம். 'ஹூ... ஹூ...' என்று கத்துமாம். எங்கேயாவது போகும்போது இதைக் கண்டால், 'நல்ல சகுனம்' என்று வட இந்தியர்களில் பலர் கருதுகிறார்களாம்!

*** கண்ணாடியைப் பார்த்தால் நம் முகம் தெரிகிறதே, எப்படி?**

—எஸ். ரகுராமன், சென்னை—33.

வெறும் கண்ணாடியில் பார்த்தால், கண்ணாடியின் பின்புறமுள்ள பொருட்கள்தான் தெரியும். ஆனால், அதே கண்ணாடியின் பின்புறம் வெள்ளியப் பூச்சுப் பூசினால், எதிரிலுள்ள உருவம் தெரியும். வெள்ளியப் பூச்சு இப்போது பல விதங்களில் பூசப்படுகிறது.

*** கோகுலச் சிறுவர் சிறுமியர் எதிர்காலத்தில் எப்படிப்பட்டவர்களாகத் திகழவேண்டும்?**

—என். சந்திரன், பாவட்டக்குடி.

நாடு போற்றும் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் திகழ வேண்டும் என்பதே எங்கள் ஆசை.

அண்ணாவின் நகைச்சுவை

ஒரு பேராசிரியர் ஒரு மன்றத்தில் ஆங்கிலத்திலே பேசுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் பேச இருந்த தலைப்பு 'அயர்லாந்தில் பாம்புகள்' என்று அறிவிக்கப்பட்டிருந்தது.


குறித்த நாளில் — குறித்த இடத்தில் — குறித்தபடி பேராசிரியரின் பேச்சைக் கேட்கப் பெருந் திரளாக மக்கள் கூடியிருந்தார்கள். கூட்டம் நடத்துவோர் பேராசிரியரை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்த பிறகு பேராசிரியர் பேச ஆரம்பித்தார். அவர் சொன்னார்:

''இங்கே 'அயர்லாந்தில் பாம்புகள்' என்ற தலைப்பில் நான் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சுருக்கமாக



அது பற்றிப் பேச விரும்புகிறேன். ''அயர்லாந்தில் பாம்புகளே இல்லை'' என்று கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

—'அண்ணாவின் உவமைகள்' என்ற புத்தகத்திலிருந்து.



என் பொழுதுபோக்கு:

இலை ஓவியம்



எனக்குப் படம் வரைவதில் அலாதிப் பிரியம். அதுவும் மர இலையில் வரைவது எனக்குப் பிடிக்கும். படம் வரைவதற்கு மிகவும் ஏற்ற இலை — அரசமரத்து இலையே. இந்த இலையை நாம் வெண்மையாக்கியபின் (அதாவது பச்சையம் நீக்கி) வரையலாம்.

முதலில் அதற்கு ஒரு பாத்திரத்தில் சிறிது ஸ்பிரிட் ஊற்றி, அதில் இலையைப் போட்டுப் பின்னர் அப் பாத்திரத்தைத் தண்ணீர் சூழும்படி வைத்து வேக வைக்க வேண்டும். அப்போது அந்த இலையானது பச்சையத்தை இழந்து வெண்மையாக இருக்கும். பின், அதை எடுத்துப் பத்திரப் படுத்திப் படம் வரையலாம். ஸ்பிரிட் வைத்து வேக வைக்கும்போது கவனத்துடன் செயல்பட வேண்டும். வெறும் பாத்திரத்தில் ஸ்பிரிட் ஊற்றி இலையைப்போட்டு நேரடியாக அடுப்பில் வைக்கக்கூடாது. ஏனெனில், ஸ்பிரிட் எரிந்து அசம்பாவிதம் நிகழ்ந்து விடும். சரி, நமக்கேன் வம்பு என்கிறீர்களா, மற்றொரு மிக எளிதான கூறுகிறேன்.



இலையைப் பறித்து அப்படியே புத்தகத்துக்குள் வைத்துப் பதப்படுத்த வேண்டும். அது நன்கு காய்ந்து Brown நிறத்தில் இருக்கும். அதை எடுத்து அதில் கறுப்புக் கலர் கொடுத்து வரைந்தால், மிக அருமையாக இருக்கும். லைட் கலரை உபயோகித்தால் அவ்வளவு நன்றாக இருக்காது. இவ்வாறு பதப்படுத்தப்பட்ட இலையில், இரண்டு அல்லது மூன்று கோட்டிங் வெள்ளைக் கலர் கொடுத்து அதன் பின்னர் நாம் அதில் எந்தக் கலரையும் பயன்படுத்தி வரையலாம்.

குறிப்பு: ஸ்பிரிட்டில் பதப்படுத்தப்பட்ட இலைகளில் வண்ண ஓவியங்கள் தீட்டிய பிறகு, அதன் பின்புறம் ஒரு கறுப்புக் கலர் பேப்பரை ஒட்டி, பொங்கல் வாழ்த்து மற்றும் தீபாவளி, கிறிஸ்துமஸ், மொகரம் நீல்வாழ்த்துக்களாக அனுப்பலாம். இலையில் படம் வரையும் போது ஸ்கெட்ச் பேனாக்களை உபயோகிக்கக் கூடாது. பிரஷ் தான் உபயோகிக்க வேண்டும். எங்கே, நீங்களும் புறப்பட்டு விட்டீர்களா இலை பறிக்க?

—ந. சதீஷ்குமார் பாபு (1569).
ஈரோடு—2.

சார், தபால்!

படம்/இடம் மாறிவிட்டதே!

• கோகுலம் பத்திரிகையைப் படிக்கும் போது கீழ்க்கண்ட எண்ணமே வருகின்றது — அருமையான ரீடர்ஸ் டைஜஸ்ட்.

—கல்பகம் தம்பு, பாபநாசம்.

• தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடவிருக்கும் —கோகுலத்திற்கு என் அட்வான்ஸ் பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

—ஜி. சிவகுமார் (3574), நெகமம்.

• 'கடவுளின் குழந்தை.' 'எம். ஜி. ஆரின் குழந்தைப் பருவம்' ஆகியவற்றுடன் வெளி வந்த ஜனவரி இதழ் புத்தாண்டுப் பரிசாகத் திகழ்கிறது.

—எம். சுவாமிநாதன், கும்பகோணம்.

• ஜனவரி மாதக் கோகுலத்தில், திருக்குறள் புதிர் விடையில், 35—ஆம் படத்திற்கான குறளை 36—க்கு விடையாகவும், 36—ஆம் படத்திற்கான குறளை 35—க்கு விடையாகவும் மாற்றி வெளியிட்டு விட்டீர்களே!

—தெ. முருகசாமி, (காரைக்குடி), அமுதி, (ஜின்னா நகர்), எஸ். விஜே (6079), (திருவனந்தபுரம்), எம். கல்யாணசுந்தரம், (7722), (கோனுபட்டு), ஆர். சுபத்ரா, (திருநெல்வேலி), குமுத வல்லியரசு, (நீடாமங்கலம்), கே. வி. நேமி வலவன் (6801), (காளி), எஸ். கோபாலகிருஷ்ணன் (7692), (பழமார் நேரி), காயத்ரி (சென்னை—23), ந. செந்தில்குமார் (279), (தஞ்சாவூர்), ஜி.முரளிதரன் (4823), (திருச்சி—101), த. மாரியப்பன் (7172), (நாகப்பட்டினம்), வி. பூங்குன்றன் (1083),(இரட்டணை) துரை இளமாறன், (தலைமலைப்பட்டி), பா.ரமேஷ் பாபு, (3489), (விருதுநகர்), சி. குமார் (5190), (நெய்வேலி—3), பா. பிரேமலதா, (சென்னை—81), அ. திருநாவுக்கரசு (7258), (ச ே ர ா டு), ஜி.வைகுண்ட நயினார் (6001), (கல்விடைக்குறிச்சி), ந. சண்முக வரதராஜ் (1348), (கோவை).

(திருக்குறள் புதிரைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறோமே. எத்தனை பேர் இதில் கவனம் செலுத்துகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவே இந்த மாதிரி ஒரு தவற்றை வேண்டுமென்றே செய்தோம்' — இப்படிக் கூறி நாங்கள் தப்பித்துக் கொள்ள விரும்பவில்லை. படங்கள் மாறியது தவறுதான். 10.1.85 வரை எழுதியவர்கள் பெயர்களே மேலே உள்ளன. இன்னும் பலர் எழுதுவார்கள். இந்தப் பிழையைக் கண்டு பிடித்தவர்கள் நூற்றுக் கணக்கில் இருக்கலாம். எல்லோருமே எழுதுவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? எல்லோருக்கும் நன்றி

—ஆசிரியர்.)

• எம். ஜி. ஆரே எங்கள் எதிரில் நின்று; தன் வாழ்க்கை வரலாற்றைச் சொல்வது போல் இருந்தது.

—அழ. நடராஜன், அண்ணாமலைநகர்.

• எம். ஜி. ஆர். இளம் வயதில் எவ்வளவு கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்திருக்கிறார் என்பது பற்றியும், தன் தாயின் மீது அவர் வைத்துள்ள அளவு கடந்த பக்தியைப் பற்றியும் படித்த போது என் உடம்பு புல்லரித்தது.

—திருமதி பிரசன்னாராஜன், கும்பகோணம்.

• எழுத்தாளர்களின் புகைப்படங்களை வெளியிடுவதைப் போல், ஓவியர்களின் படங்களையும் வெளியிடலாமே.

—ந. பொன்ராஜ் (3176), சுமுதி.

• பெரியவர், சிறியவர் என்று பாராமல் எழுத்தாளர்கள், கவிஞர்களின் புகைப்படங்களை வெளியிட்டுப் பெருமைப்படுத்தும் கோகுலத்திற்குப் பாராட்டுக்கள்.

—ஹேமதாசன், உடையார்கோவில்.

• கோகுலம் இதழ் வாங்கியதும், நான் முதலில் படிப்பது டாக்டர் பூவண்ணனின் 'ஒரு பூனை புலியாகிறது!' தொடர்கதை தான், விறுவிறுப்பாகச் செல்கிறது.

—ஆர். குருராஜன், சென்னை—5.

• 'அவனே இவன்!'; 'விளக்கு எதற்கு?' இரண்டும் வெகு அருமை.

—கே. ஆர். எஸ். மணியன், திண்டுக்கல்.

• 'உமாவின் பாட்டி' 'கண்ணன் வந்தது உண்மையா?' 'குழந்தைகள் ஒரே ரகம்' — யாவுமே மிகச் சிறந்த கதைகள். இதேபோல் 6 கதைகளைச் சேர்த்துப் புத்தகமாக வெளியிட்டால் ரூ. 5/— விலை வைத்து விடுவார்கள்!

—எஸ். பொன்னுசாமி, திருச்சி.

கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி


2232. டி. வி. சுமதி, 2, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புத்தூர்—621 207.
2233. டி. வி. கௌரி, 2, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புத்தூர்—621 207.
2234. எஸ். டி. வானதி, 57, முத்தைய முதலி தெரு, சென்னை—86.
2235. க. ரமேஷ் முத்துராமன், 45/2, வாச்மேன் தெற்கு தெரு, டாணு அஞ்சல், விக்கிரமசிங்கபுரம்—627 425.
2236. எஸ். வளர்மதி, 20—ச, போலீஸ் லைன் தெரு, கிவளூர், தஞ்சை மாவட்டம்.
2237. என். ஆர். சிவக்குமார், 59, அய்யங்குள அக்ரஹாரம், திருவண்ணாமலை.
2238. R. Usha, C-693, Laxmi Bai Nagar, New Delhi-23.
2239. S, Prabhakaran, 17/2851, Bedan Pura, Karolbagh, New Delhi-5.
2240. R. Vidhya, 426, I.I.T. Campus, Kanpur-203 016.
2241. வி. புவனா, 1, சிவராமன் தெரு, சென்னை—28.
2242. என். பிரபாகரன், 12, சாமித் தெரு, கொசப்பாளையம், ஆரணி.
2243. எல். ஸ்ரீமதி, 102, பிள்ளையார் தெரு, ஆரப்பாளையம், மதுரை—10.
2244. ஜி. புவனேசுவரி, 366—டி, ரயில்வே காம்ப், போத்தனூர்—641 023.
2245. அ. தோமினிக், C/o. எஸ். அந்தோணிசாமி, கிறிஸ்துவ மருத்துவக்கல்லூரி, பாகாயம், வேலூர்—2.
2247. ச. லட்சுமி, 18, ராமகிருஷ்ண அய்யர் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை—45.
2248. எம். ஆர். ராஜ்குமார், S/o. எம். ராமமூர்த்தி, கிருஷ்ணாநகர், சந்தியாசிகுண்டு, பச்சப்பட்டி, சேலம்—3.
2249. ல. ஸ்ரீஹரி, 30, சத்தியமூர்த்தி ரோடு, ராம்நகர், கோவை—9.
2250. ஆர். வெங்கட்ராமன், 221, 9—வது கிராஸ் ரோடு, பெரியார் நகர், ஈரோடு.
2251. பி. கணபதி சுப்ரமணியன், 50, துர்க்காலயா ரோடு, திருவாரூர்.
2252. கே. குந்தவி, ஏ. எச். 26, சாந்தி காலனி, அண்ணாநகர், சென்னை—40.
2253. க. லெட்சுமிகாந்தம், 6, வள்ளலார் தெரு, இராஜபாளையம்.
2254. எச். பழனி, 3052, கீழ 2—ஆம் வீதி, புதுக்கோட்டை.
2255. வி. துர்க்கா செல்வி, D/o. எஸ், வேதரத்தினம் பிள்ளை, அம்மன் டிரேடர்ஸ், மேல வீதி, வேதாரண்யம்.
2256. கு. கொளஞ்சியப்பா, S/o. குமாரசாமி, மகரூர், அசகளத்தூர்—606 204.
2257. கே. வேல்முருகன், S/o. குமாரசாமி, மகரூர், அசகளத்தூர்—606 204.
2258. ந. ரா வெங்கடேஷ், 3, வெங்கடேச நகர், கடலூர்—607 002.
2259. இ. உமா, 42, சர். ஏ. ராமசாமி முதலியார் நகர், சென்னை—19.
2260. ஜே. லூர்து சேவியர், 53டி/7, புது அக்ரஹாரம், திண்டுக்கல்.
2261. அ. இராஜேஸ்வரி, 35, சர். ஏ. இராமசாமி முதலியார் நகர், சென்னை—19.
2262. லூ. அந்தோணி மிக்கேல் ராஜ், S/o. சா. லூர்துராஜ், கல்லடி இடல்—623 401.
2263. பி. சி. சாந்தி, எல்/30—ஐ, நவபாரத் காலனி, சென்னை—78.
2264. எம். கீதா, L/30—A, நவபாரத் காலனி, சென்னை—78.
2265. எஸ். சத்தீஷ், 18, ஆதி நாயுடு தெரு, வில்லிவாக்கம், சென்னை—49.
2266. கே. எஸ். வசுமதி, 28, கருணாநிதி தெரு, காவேரி ரங்கன் நகர், சென்னை—93.
2267. வி. அருண், 16, சங்கு தெரு, கடலூர் துறைமுகம், கடலூர்—3.
2268. கே. கண்ணன், C/o. ஏ. கருப்பையா, 115, மாடசாமி கோவில் சந்து, சந்திய கிணற்றுத் தெரு, ஸ்ரீவில்லிப்புத்தூர்.
2269. A, Ravichandran, Shubba Laxmi Illam, Vandiperiyar, Kerala State.
2270. இரா. சப்தரிஷி சாயிராம், 60—டி, ரயில்வே காலனி, கடலூர்—3.
2271. கே. எஸ். சுஜாதா, 65, மெயின் ரோடு, கோபிசெட்டிப்பாளையம்—638 452.
2272. இரா. லெனின் பாபு, 2/39, நடுத்தெரு, போலகம், திருமருகல்—609 702.
2273. வி. சுரேஷ், 9, வெங்கட கிருஷ்ணய்யர் ரோடு, சென்னை—28.
2274. ஹ. ரேவதி, 2, மூக்கன் சேர்வை இல்லம், மதுரபாண்டியன் தெரு, படிங்கா நத்தம், மதுரை—3.
2275. கே. பத்மநாபன், 60, மங்கலம் ரோடு, கருவம்பாளையம், திருப்பூர்—638 604.
2276. ஆர். எஸ். சுரேஷ் பாபு, 9—ஏ, பழைய ஆஸ்பத்திரி தெரு, திருத்தணி.

2277. ல. வெங்கட்ராகவன், 46, குளத்து மேட்டுத் தெரு, கள்ளக்குறிச்சி—606 202.
2278. பி. வி. வெங்கடேசன், 2, வெங்கடராம செட்டி தெரு, தர்மபுரி.
2279. ஆர். அபர்ணா, 45, பாக்கிய நிவாஸ், கிழக்கு பவர் அவுஸ் வீதி, டாடாபாத், கோவை—12.
2280. வி. ராமச்சந்திர பிரபு, 48, அக்ரஹாரம்,,சின்னமனூர்—626 515.
2281. **T. Balaji, b/149, Sarojini Nagar, New Delhi.**
2282. **D. D. Moorthy, Old Diary farm, M A U D E Line, Delhi Cantt-110 010.**
2283. ஸ்ரீ சுபஸ்ரீ, 85, தெற்கு ஜகன்னாத நகர், 2—ம் மெயின் வீதி, சென்னை—49.
2284. ப. திருமாவேலன், 2, வ.உ.சி. நகர், 6—வது தெரு, கோவில்பட்டி—627 702.
2285. ச. கோமதி, 'குறிஞ்சி இல்லம்', ஜி.கே.டி. நகர், கோவை—37.
2286. ஏ. மாலதி, 69, 4—வது குறுக்கு வீதி, கனகசபை நகர், சிதம்பரம்—1.
2287. ச. ரேவதி, 'குறிஞ்சி இல்லம்', ஜி.கே.டி. நகர், கோவை—37.
2288. நா. சிவக்குமார், 17—ஏ/1, மார்க்கெட் பீட்டர் ரோடு, இராணிப்பேட்டை.
2289. ஜெ. பொன் இசக்கி முத்து, 25, அல்லிக்குளத் தெரு, திரு—பட்டினம்—609 606.
2290. **J. Indhumathi, D/o. A.P. Jothinathan, Consultant, A.H., RUHSA, K.V. Kuppam (Via), N.A. Dt.**
2291. வெ. லக்ஷ்மணன், 94, மேற்கு ராமலிங்கம் தெரு, ஆர். எஸ். புரம், கோவை—2.
2292. எஸ். ஜெயா, 75, பெரிய தெரு, வடிவீஸ்வரம், நாகர்கோவில்.
2293. டி. ஆர். ராஜா, கொக்காங்காடு, தம்மம்பட்டி—636 113.
2294. எஸ். முத்துக்கருப்பன், S/o. டாக்டர் எம். சுப்பிரமணியம், தெக்கூர், தேரூர்—629 704.
2295. கே. பார்வதி, 2/62, அக்ரஹாரம், கவரிமான், மதுரை மாவட்டம்—624 222.
2296. **C. D. Rajan, S/o. D. Ganapathy, 19, Jai Hari Kunj, 13/13-A, Shrinagar Estate, Goregaon (West), Bombay-400 062.**
•2297. ஆர். வசந்தா, D/o. ராஜகோபால், வாணியம்பாளையம், வி. அகரம்—605 115.
2298. பா. நடராஜன், 2, உமையாள் சந்து, சிதம்பரம்.
2299. வி. இராதாகிருஷ்ணன், திருமகள் இல்லம், சண்முகநாதபுரம்—623 314.
2300. கி. லதா, 2, 13—வது கிராஸ் தெரு, நியூ காலனி, குரோம்பேட்டை, சென்னை—44.
2301. கே. என். பரக்கத்துல்லாகான், 13, அசாத் நகர், சவ்கத் அலி தெரு, கூத்தாநல்லூர்.
2302. இரா. செந்தில் குமார், 409/4, வடக்கு ராஜ வீதி, புதுக்கோட்டை.
2303. எஸ். ரகுராமன், 43, மெயின் ரோடு, சென்னை—16.
2304. ரா. சிவசுப்பிரமணியன், 1, சுந்தரம் நகர், மெடிகல் காலேஜ் ரோடு, தஞ்சை—7.
2305. கே. ரேணுகா தேவி, 7, நாலாயிரம் தெரு, விழுப்புரம்.
2306. கே. ஆர். செந்தில்குமார், திருப்பூர் ரோடு, படேல் வீதி, காங்கயம்—638 701.
2307. ஏ. உஷாராணி, 56, திருவள்ளுவர் தெரு, ஜெகதாம்பிகை நகர், சென்னை—50.
2308. ந. பாலாஜி, 6, ஸ்ரீநிவாச நகர், ஆதம்பாக்கம், சென்னை—88.
2309. பி. பாலாஜி, 5, 7—வது தெரு, நியூ காலனி, சென்னை—88.
2310. கே. பி. எம். மாயூரன், 5, சி.பி.எஃப். ஸ்டாப் குவார்ட்டர்ஸ், டாக்டர் திருமூர்த்தி நகர், சென்னை—34.
2311. ஆ. குமரேசன், ஏ—14, நந்தனம் மெயின் ரோடு, என். ஜி. ஓ. குவார்ட்டர்ஸ், சென்னை—35.
2312. சுஜாதா சுகுமார், 5, கபாலி சந்நிதி தெரு, சென்னை—44.
2313. சுஜாதா மேகல், 8/11, 13—வது கிராஸ் தெரு, நியூ காலனி, சென்னை—44.
2314. எல். வெங்கடேஷ், 3—A, சுப்பராயத் தெரு, பெரிய காஞ்சிபுரம்.
2315. எஸ். ஆனந்த் குமார், 1/126—சி, வடக்குத் தெரு, கீழ ஆம்பூர், திருநெல்வேலி மாவட்டம்.
2316. கே. பாபு, 4, வ. உ. சி. தென் வடல் வீதி, தில்லை நகர், கோவை—26.
2317. ரா. ராஜ்மோகன், 13, சுந்தர் ராஜ் நகர், திருச்சி—20.
2318. எம். கணேஷ், 7—5 W/11, மண்டபம் தெரு, உத்தமபாளையம், மதுரை மாவட்டம்.
2319. எஸ். ராஜேந்திரன், S/o. எஸ். செந்தூர்பாண்டியன், (போலீஸ்), அலங்கியம்—638 651.

(இன்னும் வரும்)

அடுத்த இதழில்—

உறுப்பினர் மனு வெளிவருகிறது.



ஔவையார்
ஆதாரம்: எதிராஜுலு எழுதி அவ்வை டி.கே.சண்முகம் பதிப்பித்த நாடக நூல்.
சித்திரக்கதை வடிவம் : குமரன்
படம் : வினு
பாணர்-அழகம்மை தம்பதி தங்கள் வளர்ப்பு மகள் பற்றி கவலையோடு....
அவ்வையின் கல்வித்திறன் பற்றி கேள்விப்பட்டு அரசர்களெல்லாம் அவளைச் சபைக்கு அழைத்து வருமாறு ஆளனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.
இப்போது அது கூடாது. திருமணப் பருவத்தில் இருக்கிறாள் அவள்...
அதுதான் கவலை. அவள் நம் வளர்ப்பு மகள் என்பதால் யாரும் தாமாக அவளை மணமுடிக்க முன் வரக் காணோம்...
நாமாக வலியப் போய் வரன் தேடுவதும் அழகல்ல...
அப்போது ஒரு புரோகிதர் வந்தார்...
நான் மலைநாட்டு அரசன் ஆஸ்தான வித்வான். அரசனுக்குத் தங்கள் மகளை மணந்து கொள்ள ஆவல்...
எங்கள் குலம் பற்றி....



அரசர்கள் எந்த ஜாதி யிலும் மணக்க லாம். அவ்வை வளர்ப்பு மகள் என்பதையும் அறிவேன். தாங்கள் சம்மதித்தால் அரசரை அழைத்து வருகிறேன்.
சரி.
புரோகிதர் சென்றபின்.... அவ்வை விஷயமறிந்து....
அப்பா! இல்லற மெனும் நீர்ச் சுழலில் அகப் பட்டு அழிய எனக்கு விருப்பமில்லை. வற்புறுத்தாதீர்கள்.
அவ்வை! நீ என் மகள். நான் உன் நன்மையே நாடுபவன். என் சொற்படி நட.
சில தினங்கள் சென்று...
விநாயகப் பெருமானே! நான் பிறருக்குத் தொண்டு செய்யப் பிறந்தவள். எனக்கு ஏன் அழகும் இளமையும்? இதனால் தானே திருமணம் பேச வருகின்றனர்.
என் லட்சியத்துக்கு இடையூறாக உள்ள இவற்றைப் போக்கிக் கிழப் பருவத்தை அளியுங்கள்!
அவ்வை மனமுருகிப் பாடினாள். அப்போது மலை நாட்டரசன் அவ் வையைக் காண வந்தான்.
ஆஹா! என்ன இனிய குரல்! குரலின் இளமையும் பாடலின் அழகும் இவள் முகத்திலும் இருக்குமானால் நான் அதிர்ஷ்ட சாலி!
குரல் கேட்டு அவ்வை திரும்பிப் பார்க்க...
ஐயோ! இதென்ன...! புரோகிதரே! இந்தக் கிழவியை மணம் முடிக்கவா இவ்வளவு தூரம் அழைத்து வந்தீர்?


அரசன் ஓட, அவ்வை நகைக்க, பெற்றோர் வந்து பார்த்துத் திகைக்க ....
அப்பா! என் லட்சியம் ஈடேறத் தடையாயிருந்த இளமையை இறைவனிடம் ஒப்படைத்து விட்டேன். இனி நான் உங்களுடன் இருக்க இயலாது.
அறத்தின் அவசியத்தையும் கல்வியின் மேன்மையையும் உணர்த்த ஊர் ஊராய்ச் செல்வேன். விடை கொடுங்கள்...
பரமனருள் பெற்ற நீ எங்களுக்குப் பெண்ணாக இவ்வளவு காலம் இருந்ததே எங்கள் பாக்கியம்.
ஊர் ஊராகச் சென்றாள் அவ்வை. அவள் புகழ் பரவியது. அதிகமான் அரண்மனை அடைந்தாள். பெருஞ்சித்திரனார் வரவேற்றார்...
வரவேணும் தாயே! மன்னர் வேற்றூர் சென்றிருக்கிறார்....
அப்படியா, நான் சென்று பிரிதொரு சமயம் வந்து கண்டு கொள்கிறேன்.
வேண்டாம், பொறுங்கள். அதிகமான் திரும்பி வரும் சமயம் தான்... அதோ அவரே வந்து விட்டார்!


அதிகமான் பெருமகிழ்ச்சியோடு..
அம்மையே! வரவேணும்! வந்து நெடு நேரமாயிற்றா?
இல்லை, இப்போதுதான் வந்தார்கள். நெடுந்தூரப் பயணம் போலும். களைத்திருக்கிறார்கள்.
தன் மடியில் பத்திரப்படுத்தியிருந்த கரு நெல்லிக்கனி ஒன்றை எடுத்துத் தந்தான் அதிகமான்.
தாயே! இதைப் புசியுங்கள். களைப்பு நீங்கும்.
கனியைச் சுவைத்தார் அவ்வை...
ரொம்ப இனிப்பாயிருக்கிறதே, எங்கு கிடைத்தது?
ஒரு பெரியவர் இறப்பைத் தவிர்க்க முடியாது எனினும் நீண்ட காலம் பிணி, மூப்பு இன்றி வாழலாம் என்று கூறி உபாயமும் சொன்னார்...
அவர் யோசனைப்படி குதிரைமலைச் சாரலுக்குப் பலகாலமாகச் சென்று தேடி கடைசியில் நேற்றுத் தான் குறிப்பிட்ட மரத்தைக் கண்டு பிடித்தேன். ஒரே ஒரு கனிதான் அம்மரத்தில் இருந்தது...
அந்த அபூர்வக் கனியையா எனக்குத் தந்தாய்? மெய் சிலிர்க்கிறது!
அம்மையே! நான் இக்கனியைப் புசிப்பதால் என்ன பயன்? என் செல்வம் நிலையற்றது. ஆனால் உங்களிடம் உள்ள கல்விச் செல்வமோ....
ஏழேழு பிறவிகளுக்கும் மக்களுக்கு நன்மை செய்யும். அதனால் தான்....
மாபெரும் வள்ளலாகிய உன்னைக் கண்டது என் பெரும் பேறு. உன் அன்பு கருதி சில நாள் தங்கிச் செல்வேன்...


சில தினங்கள் சென்று ஒரு நாள் அவ்வை அதிகமானுடனும் அவர் மனைவி குயிலினியுடனும் இருக்கும்போது அவசரமாக வந்தார் அமைச்சர்....
பிரபோ! காஞ்சி புரித் தொண்டை மான் நம்மீது போர் தொடுக்கச் சித்தமாகிவிட்டான்!
திகைப்பிலிருந்து நீங்கிய அதிகமான்...
ஓ! மலையமான் திருமுடிக்காரியுடன் போரிட்டு நம் வீரர்கள் களைத்திருக்கும் இச்சமயம் பார்த்து தொண்டை மானும் துள்ளுகிறானா? சரி போருக்கு ஆயத்தம் செய்யும்!
மன்னவா! தங்கள் புகழ் பரவுவதைச் சகியாமல் மூவேந்தர்களும் கூடத் தங்கள் மீது பொறாமை கொண்டிருக்கின்றனர். இந்நிலையில்...
மூவேந்தரில் தொண்டைமான் பக்கம் யாராவது ஒருவர் சேர்ந்து கொண்டால் கூட ஆபத்து என்கிறீர்கள்! இந்தப் போரைத் தவிர்ப்பதே நல்லது அல்லவா?
தொண்டைமானிடம் நான் தூது போகிறேன்!
அம்மையே, வலுச்சண்டைக்கு இழுக்கும் தொண்டைமானுக்கு வீரத்தால் புத்தி புகட்டாது சமாதானம் பேசுவதா?
அது எனக்கு அவமானம் ஆகாதா?


உங்கள் வீரத்தை மெச்சுகிறேன். உங்களுக்கு இழுக்கு நேராத வகையில் யுத்தத்தைத் தருப்பேன்.
முயன்று பாருங்கள்.
தொண்டைமானைக் காணவந்த அவ்வையை ஆயுதசாலைக்கு மன்னன் அழைத்துப் போனான்.
எமது வீரர்களின் திறமையைப் பார்த்தீர்களா?
ம்ம்... நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆனால் உடற் கட்டில் அதிகமான் வீரர்கள் இன்னும் அழகுடையவர்கள்.
பார்த்தீர்களா படைக் கருவிகளை! எத்தனை கூர்மை பளபளப்பு!...
ஆகா! உமது படைக் கலங்கள் மயில் பீலி அணிந்து மாலை சூட்டப் பெற்று நெய் தடவி பளபளப்பாய் நன்கு பாதுகாக்கப் படுகின்றன.
ஆனால் அதிகமான் ஆயுதங்களோ, அடிக்கடி பகைவரைத் தாக்கியதால் முனை மழுங்கி பளபளப்பின்றி விளிம்பொடிந்து, பழுது பார்க்கப்பட கொல்லன் உலைக்களத்தில் உள்ளன...


ஆகா! என்னைப் புகழ்வது போல் இகழ்ந்து அதிகமான் போர்க்களம் பல கண்டிருக்கிறான் என்று அவன் வீரத்தைச் சுட்டுகிறீர்கள்!
உண்மையைச் சொன்னேன். அதிகமான் மாவீரனானாலும் போரை விரும்பாதவன். ஆனால் வலுவில் சண்டைக்கு இழுத்தால் பணிய மாட்டான்...
வேந்தே! உமது சுய நலத்துக்காக ஆயிரக்கணக்கான மக்களை ஏன் துன்பத்தில் ஆழ்த்த வேண்டும்? வலுச் சண்டைக்குப் போவது வீரமல்ல. அதிகாரத்தினால் ஒருவனை அடக்க முடியாது. அன்பினால் அடக்கலாம். அன்பின் வழியது உலகம்.
அவ்வை சொற் கேட்டு மனம் மாறிய தொண்டைமான் அதிகமானிடம் நட்பு பாராட்டி வந்தான்.
அம்மையே! ஒரு நாட்டை இன்னொரு நாடு அடக்கி ஆள முயல்வது ஒழுங்கற்றது என உணர்த்தினீர்கள்.
இனி எங்களுக்குள் பகை இல்லை.
மன்னர்களே! போர் இல்லை எனில் பொருள் மிச்சமாகும். அதை மக்கள் முன்னேற்றத்துக்கு நீங்கள் பயன் படுத்தலாம். நீங்களும் உங்கள் நாடும் மக்களும் வாழ்க!
வள்ளல் பாரியைக் காண வந்தாள் அவ்வை. மன்னன் பாரிக்கு இரு பெண்கள்: அங்கவை, சங்கவை.
வள்ளலே! இப்பெண்களுக்கு ஏன் இன்னும் மணம் முடிக்கவில்லை?
அம்மையே! மூவேந்தரும் என் பெண்களை விரும்பிக் கேட்கிறார்கள். இருவருக்குக் கொடுத்தால் மூன்றாமவருக்குக் கோபம் வரும்.


ஆகவே மூவருக்குமே இல்லை என்று கூறி விட்டேன். இப்போது மூவருக்குமே என் மேல் கோபம்!
இவர்களுக்கு உன் போன்ற குறுநில மன்னர் கடி மணம் நடத்துவதே நலம்.
அப்போது கபிலர் பெருமான் வர...
கபிலரே! இப்பெண்களுக்கு நன்கு கல்வி புகட்டியிருப்பீரே!
ஓ! இன்னிசை அமுதையும் ஊட்டியிருக்கிறேன்.
அங்கவை சங்கவை பாடக் கேட்டு மகிழ்ந்தாள் அவ்வை.
மிக இனிமையாகப் பாடினீர்கள். இவ்வாறு பொருள் செறிந்த பாடல்களையே பாட வேண்டும்.
அம்மையே நாங்கள் சில காலம் தங்கி அங்கவை சங்கவைக்கு இசைத் தமிழின் சிறப்பை எடுத்துரைக்க வேண்டும்.
பாரி! என்னை மன்னிப்பாய். நான் ஊர் ஊராகச் சென்று தமிழ்த் தொண்டு செய்யப் புறப்பட்டவள். ஓரிடத்தில் தங்குதல் இயலாது.
அவ்வை புறப்பட்டுச் சென்றாள். வழியில்...
ஏ கிழவி! ராஜா கிட்ட வாங்கின பரிசையெல்லாம் என் கிட்ட கொடுத்திட்டீன்னா பொழச்சே... இல்லே...
ஏம்பா இந்த ஈனத் தொழில் செய்யறீங்க?


ஆ! வேறே தொழில்னு முதல்ல வேணுமே இது முதலில்லா வியாபாரம் ஆச்சே!
உயிரையே முதலாக வைக்கிறீர்கள். நானும் உங்களைப் போல் முரடனாயிருந் தால்...?
ஆ! முரடன் கிட்ட போக எங்களுக்குப் பைத்தியமா?
ஏ கிழவி! நீதான் களவும் கற்று மறன்னு எழுதியிருக்கியே.
அடடா! அதற்கு இப்படி தவறாக அர்த்தம் கொள்ளலாமா? களவும் கத்தும் அற என்றால் திருட்டையும் பொய்யையும் ஒழி என்று பொருள்.
அது என்ன இழவு பொருளோ, முதல்லே உன் பொருளை எடு...
மன்னனிடம் பெற்ற பரிசிலைத் தந்தாள் அவ்வை.
வள்ளல் பாரியின் நாட்டிலுமா களவு?... ம்...
பாரியின் அரண்மனைக்கே திரும்பினாள் அவ்வை.
அம்மையே! வரவேணும், வரவேணும்!
வேந்தே! உங்கள் நாட்டிலுமா வழிப்பறித் திருட்டு?


நடந்தது கேட்ட பாரி கைதட்டி அழைக்க...
தாயே! பதற வேண்டாம். உங்களிடம் வழிப் பறி செய்தவர்கள் இவர்கள் தானா?
ஆம்! இவர்களேதான்!
மன்னிக்க வேண்டும் தாயே! இவர்களைக் கள்வராக்கியது நானே தான்!
என்ன? என்ன!
ஆம், அப்படி யாவது உங்களைத் திரும்பி வரச் செய்து இன்று ஓர் இரவேனும் என் மகளிருடன் தங்கி இருக்கச் செய்ய நடந்த சூழ்ச்சி!...
... மற்றபடி இந்நாட்டில் கொலை களவு போன்ற எதுவும் கிடையாது...
வள்ளலே! உனது அன்பை எப்படி புகழ்வேன். ஆனால் இனி விளையாட்டுக்குக் கூட தவறான செயலைச் செய்யாதே.
பரிசில்களைத் திரும்பக் கொடுத்தான் பாரி. மறுத்தாள் அவ்வை.
இதை முதலில் உன்னிடம் நான் பெற்றுச் சென்றதே தவறு. துறவியான எனக்கு வேண்டியது ஒரு வேளை கூழ். அது எங்கும் கிடைக்கும். நான் பொருள் சேர்க்க வேண்டியதே இல்லை.
சோழ நாட்டை அடைந்தாள் அவ்வை. ராஜவீதியில்...
ஏனம்மா குழந்தையை அடிக்கிறாய்?
பிறகென்ன, ராஜாமேலே போர்த்தியிருக்கும் பட்டு வேணும்னு அடம் பிடிக்கிறான்.


குழந்தை அறியாமையால் கேட்கிறது. அன்புடன் மறுமொழி கூற வேணுமே தவிர, அடிக்கக் கூடாது... அழாதேடா தங்கம் நான் வாங்கித் தருகிறேன் பட்டு!
மன்னர் பல்லக்கில் பவனி வர....
சோழ மன்னரே! இக்குழந்தை கேட்பது உம் தோள்மீதுள்ள பட்டு. இந்தாரும் அதற்குப் பிரதியாக இதை ஏற்றுக் கொள்ளும்!
ஓலையை வாங்கிப் படித்தான் மன்னன்.
நாற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நாற்சீலை நாற்றிங்கள் நாளுக்குள்
பொன்றப் புறங்கண்ட போர்வேல் அகளங்கா! என்றும் கிழியா(து) என் பாட்டு!
மன்னன் ஓலையைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு பட்டைத் தரவும்...
மகிழ்ச்சி தானடா கண்ணா!
அம்மா உங்களிடம் என்ன மாய சக்தியோ?
மாயமில்லை. கல்வித்திறன்தான். கோழைத்தனமும் கல்வியின்மையும் தான் உன் போன்றவர்களைத் தடுத்து நிறுத்துகிறது.
சோழன் அழைப்பை ஏற்று அரண்மனை சென்றாள் அவ்வை. அரசவையில் புலவர்கள் கூடியிருக்க, ஒருவர்....
ஓர் இரவுக்குள் நாலுகோடி செய்யுள் பாட முடியுமா என்று மன்னர் கேட்டு விட்டாரே! சாத்தியமா?
அப்போது மன்னர் வந்து அரியாசனத்தில் அமர....
அரசே! புலவர்களுக்கு நீங்கள் இட்ட கட்டளையை நான் நிறைவேற்றுகிறேன்....
அம்மையே! ஏதோ வேடிக்கையாக நான் சொன்னதை மன்னிக்க வேண்டும்.


இல்லை மன்னா, இதுபோன்ற சோதனைகள் புலவர்களின் ஏற்றத்துக்கு உதவும்... ம்ம்... பாடவா!
மதியாதார் முற்றம் மிதித்தொருகால் சென்று மிதியாமை கோடி பெறும்
ஆகா!
உண்ணீர் உண்ணீரென்றே ஊட்டாதார் தம்மனையில் உண்ணாமை கோடி பெறும்...
இரண்டு கோடி ஆயிற்றா?
கோடி கொடுக்கும் குடிப் பிறந்தார் தம்மோடு கூடுவதே கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடை நாக் கோடாமை கோடி பெறும்...
நாலு கோடி ஆயிற்றா? இன்னும் எத்தனை கோடி வேண்டும்?
தாயே தாங்கள் பாடிய பாடல்கள் நாலு கோடி அல்ல. கோடி கோடி பெறும்!
பயணம் தொடர்ந்த அவ்வை ஓரிடத்தில் அங்கவையும் சங்கவையும் குடிசையில் வாழக் கண்டு...
ஐயோ! பாரி மகளிருக்கா இந்தக் கதி?


தாயே, எங்கள் திருமண விஷயமாக ஏற்பட்ட சண்டை முற்றி, கடைசியில் மூவேந்தரும் எங்கள் தந்தையைக் கொன்று விட்டார்கள்.
கபிலர்?
அவர் எங்களை இரண்டொரு அரசரிடம் அழைத்துப் போனார். அவர்கள் மூவேந்தருக்கு அஞ்சி எங்களை ஏற்க மறுத்தனர். கபிலர் மனமுடைந்து எங்களை ஓர் அந்தணரிடம் ஒப்படைத்துப் போனார். இன்னும் திரும்ப வில்லை...
அவ்வை அவர்களை அரசன் தெய்வீகனிடம் அழைத்துப் போனாள்.
தெய்வீகா! அங்கவையை மணந்து கொள்!
அம்மையே, நான் சிற்றரசன். மூவேந்தரின் பகையைச் சமாளிக்க முடியுமா?
காட்டில் தவமிருந்தாள் அவ்வை. விநாயகர் தோன்றி மூவேந்தருக்கும் அவள் கூறியபடி அழைப்பிதழ் எழுதினார். வனதேவதை அவற்றை சேர, சோழ, பாண்டியரிடம் சேர்ப்பித்தது.



அவ்வையின் அழைப்பைச் சிரமேற் கொண்டு மூவேந்தரும் வந்தனர். தெய்வீகன்-அங்கவை திருமணம் சிறப்பாக நடந்தது.
மூவேந்தர்களே, நீங்கள் எக்காலத்திலும் தெய்வீகனுடன் நண்பர்களாய் இருக்க வேண்டும்.
அப்படியே ஆகட்டும்.
பாரி மகளுக்குத் தன் கடமை முடித்த அவ்வை மீண்டும் கானகம் வந்தாள். நாவல் மரம் ஒன்றின்மேல் மாடு மேய்க்கும் சிறுவன்...
அப்பனே! எனக்கும் இரண்டு நாவல் பழம் பறித்துப் போடு...
சுட்ட பழமா? சுடாத பழமா?
அட, பழத்தில் அப்படி இரண்டு வகை இருக்கா? எனக்குச் சுடாத பழமே போதும் அப்பா!



சிறுவன் பறித்துப்போட பொறுக்கி எடுத்து, ஊதி, மணலை அகற்ற முயன்றாள் அவ்வை.
பாட்டி! சுடாத பழம் தானே கேட்டே? பிறகு ஏன் சுட்ட பழத்தை எடுத்தே?
அவ்வை வெட்கினாள்.
நான் எவ்வளவு கற்றறிந்து என்ன பயன்? இந்தச் சிறுவன் கேள்விக்கு உட்பொருள் எனக்குத் தெரியாமல் போய் விட்டதே!
சிறுவனாயிருந்த முருகன் தன் திருக்கோலம் காட்டினான்.
ஆகா! முருகப்பெருமானே! என்னைச் சோதிக்க நீயே வந்தனையா?
அவ்வையே! உமது திருவாயால் உலக நீதிகளைக் கூறல் வேண்டும்... கொடியது எது? இனியது எது?

முருகன் கேள்விகளுக்குப் பல செய்யுள்களாகப் பதிலளித்தாள் அவ்வை.










விநாயகர் அகவல் பாடி முடித்தாள் அவ்வை.

வேலைக்காரனும் சுண்ணாம்பும்

மு.கா. நெடுமாறன்



ஒரு கோபக்காரப் பண்ணையாரிடம் வேலை செய்து வந்தான் சுந்தரம். பண்ணையார் சாப்பாடு முடித்துக் கொண்டு தினமும் அவரது வீட்டின் திண்ணையில் வந்து அமர்ந்து கொள்வார். அவருக்கு அங்கு வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுப்பது அவனது வேலை. வழக்கம் போல் பண்ணையார் சாப்பிட்டுவிட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தார். சுந்தரம் நீட்டிய வெற்றிலையை வாயில் போட்டார். மறு கணம்,

"தூ. தூ!" எனத் துப்பினார். ஆம்; அவர் வாயிலிருந்த வெற்றிலை தரையில் விழுந்தது.

"ஏண்டா! வேலைக்காரப்பயலே! உனக்கு எத்தனை தடவை சொல்வது, வெற்றிலையில் சுண்ணாம்பு அதிகமாகச் சேர்க்காதேன்னு! உனக்கு இன்னிக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன். பக்கத்துத் தெரு பங்கஜத்திடம் போய் நான் கேட்டேன் என்று கூறி ஒரு குவளை சுண்ணாம்பு வாங்கி வா. அதை நீ இன்று இப்போது என் முன்னிலையில் குடிக்க வேண்டும். என் நாக்கு வெந்தது போல உன் நாக்கும் வெந்து துடிப்பதை நான் பார்க்க வேண்டும்!" என்று கொக்கரித்தார். சுந்தரம் நடுங்கிப் போனான். அவன் பக்கத்துத் தெருவிற்குப் புறப்பட்டான்.

அடுத்த தெருவில் வைத்தியர் வைத்தியலிங்கம் இருப்பது அவன் ஞாபகத்திற்கு வந்தது. அவரிடம் சென்று நடந்தது என்னவென்று கூறினான். வைத்தியர், "கவலைப் படாதே! இந்தா ஒரு குவளை நெய்.

பிருந்தாவனக் கதையரங்கம்

"இதைச் சாப்பிடு" என்றார். சுந்தரத்திற்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் அவர் கொடுத்த நெய்யைச் சாப்பிட்டான். "இப்போது நீ போகலாம். கவலைப்படாதே!" என்றார். குழப்பத்துடன் சுந்தரம் வைத்தியரிடம் விடை பெற்றான். பின்னர் பங்கஜத்திடம் சென்று ஒரு குவளை சுண்ணாம்பு வாங்கிக் கொண்டு பண்ணையாரின் வீட்டை நோக்கி நடந்தான்.

பண்ணையாரின் வேலைக்காரன் சுண்ணாம்பு குடிக்கும் அதிசயத்தைக் காணக் கூட்டம் கூடிவிட்டது, அவரது வீட்டின் முன்னால், "சுந்தரம்! உம், குடி" என்றார், பண்ணையார். சுந்தரம் தயங்கினான். பண்ணையார் அதட்டினார்; மிரட்டினார். "குடிக்காது போனால் சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பிவிடுவேன்" என்று பயமுறுத்தினார். சுந்தரம் வேறு வழியின்றிக் கடவுளை வேண்டிக் கொண்டு சுண்ணாம்பைக் குடித்தான்.

மறுகணம், லொடக்...! லொடக்...! சுந்தரம் வாந்தி எடுத்தான். வேடிக்கை பார்க்க வந்த கூட்டம் இப்போது விலகி ஓடியது. பண்ணையார் ஆடிப் போய் விட்டார். ஆனால் சுந்தரத்திற்குப் புரிந்தது, இப்போது தன்னை ஏன் வைத்தியர் நெய் சாப்பிடச் சொன்னார் என்பது. அவன் மகிழ்ந்தான்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு பண்ணையார் சுந்தரத்தை அதட்டி, உருட்டி, மிரட்டி வேலை வாங்குவது இல்லை!

சாம்ராஜ்யத்தின் விலை

என்.சாரதா (74)



பண்டைக் காலத்தில் யூனான் தேசத்தில் ஒரு சர்வாதிகாரி மன்னன் இருந்தான். அவன் பெயர் அப்துல் ரஷீத். அவன் தன் வலிமையிலும், தன் வீரத்திலும் மிகவும் கர்வம் கொண்டிருந்தான். அவனுடைய சாம்ராஜ்யத்தின் செழுமையும், வளமையும் மன்னன் மனத்தில் உள்ள கர்வத்தை மேலும் அதிகமாக்கின. பரந்து விரிந்த தன் சாம்ராஜ்யத்தைக் கண்டு மன்னன் அப்துல் ரஷீத் பெருமிதம் கொண்டான். யாரையும் லட்சியம் செய்யாதவனாக இருந்தான். தான் என்ற மமதையும் எதற்கும் பணியாத திமிரும் மன்னனிடம் குடிகொண்டிருந்தன.

அவனுடைய நாட்டிற்கு ஒரு தடவை கலீபா அபு அலி என்ற ஞானியார் வந்தார். கலீபா அபு அலியை எல்லா மன்னர்களும் விரும்பிப் போற்றுவார்கள். மிகப் பெரிய துறவி அவர்!

அப்துல் ரஷீத் கூட அந்த ஞானியாரைத் தன் அரண்மனைக்கு அழைத்து வந்து உயரிய ஆசனத்தில் அமரச் செய்து மரியாதை செய்தான். பேச்சோடு பேச்சாக அப்துல் ரஷீத் துறவியாரிடம், தன் சாம்ராஜ்யத்தின் உயர்வையும், தன் வீரத்தையும், வலிமையையும் கூறிப் பெருமைப் பட்டுக் கொண்டான். தன் நாட்டை இன்னும் வலிவும், பொலிவும் உள்ளதாக்க விழைகிறேன் என்றும் சொன்னான்.

ஞானியார் மனத்திற்குள் சிரித்துக் கொண்டார். சிறிது நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிய பின்னர் ஞானியார் மன்னனிடம் கேட்டார். ''மன்னா! நீ ஒரு பாலைவனம் வழியாகப் போய்க் கொண்டிருக்கிறாய் என்று வைத்துக் கொள். நடந்து நடந்து உனக்குத் தாகமெடுக்கிறது. தாகத்தால் உன் நாக்கு தவியாய்த் தவிக்கிறது. தண்ணீர், தண்ணீர் என்று நீ கேட்கிறாய். அப்பொழுது வானிலிருந்து ஒரு தேவன் கையில் தண்ணீர் உள்ள ஒரு செம்புடன் வருகிறான். 'உனக்குத் தண்ணீர் வேண்டுமானால் 'உன் சாம்ராஜ்யத்தில் பாதி எனக்குத் தந்தால் உனக்குக் குடிக்க இந்தச் செம்புத் தண்ணீரைத் தருவேன்' என்று அந்த தேவன் கூறுகிறான். நீ அவனுக்கு என்ன மறுமொழி கூறுவாய்?'' என்று ஞானியார் கேட்டார்.

உடனே அப்துல் ரஷீத், ''மகிழ்ச்சியோடு அவன் கோரிக்கையை ஏற்றுத் தண்ணீரை வாங்கிக் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொள்வேன்'' என்றான்.

துறவியார் மனத்திற்குள் சிரித்தார். பிறகு சொன்னார்: ''சரி, அப்புறம் நீ கொஞ்ச தூரம் செல்கிறாய். இப்பொழுது உனக்குப் பசி ஏற்படுகிறது. பசியால் உன்னால் நடக்கவே முடியவில்லை. உணவுக்காக இறைவனை வேண்டுகிறாய். அப்பொழுது தேவன் உணவோடு உன் முன்னால் தோன்றி, உன் சாம்ராஜ்யத்தில் பாதி தந்தால் அறுசுவை உணவு தருகிறேன்' என்கிறான். அப்பொழுது நீ என்ன செய்வாய்?'' என்று மன்னனிடம் கேட்டார்.

அதற்கு மன்னன் அப்துல் ரஷீத் ''மகிழ்ச்சியோடு சாம்ராஜ்யத்தில் பாதி தருகிறேன் எனக் கூறி உணவை வாங்கிச் சாப்பிடுவேன். உயிரை விடவா சாம்ராஜ்யம் பெரிது?'' என்றான்.

மன்னன் கூறியவற்றைக் கேட்டு ஞானியார் அபு அலி கடகடவென்று சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று அப்துல் ரஷீத் கேட்டான்.

''கேவலம், ஒரு செம்புத் தண்ணீர், ஒரு வேளை வயிற்றுச் சோறு — இரண்



டிற்கும் உள்ள மதிப்புத்தானா உன் சாம்ராஜ்யம்? இதை நினைத்தால் எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. இந்த சாம்ராஜ்யத்தைப் பற்றி நீ மனத்தில் கட்டியிருக்கும் கோட்டைகளை நினைத்துப் பார்த்தால் சிரிப்பு வராமல் என்ன செய்யும்?'' என்று கேட்டார், ஞானி கலீபா அபு அலி. அவர் கூறிய வார்த்தைகள் அப்துல் ரஷீதைச் சிந்திக்க வைத்தன. மனத்தில் அவனையும் அறியாமல் ஒரு பய பக்தியும், அடக்கமும் குடிகொண்டன.

அன்று முதல் பணிவின் சிகரமாக ஆனான். மக்களின் முதல் தொண்டனாக மாறி பல விதத்திலும் குடிமக்களுக்குத் தொண்டு செய்தான். மக்களும் மன்னனின் அரிய செயல்களைக் கண்டு வியந்து போற்றினார்கள்.

ரகசியத்தைச் சொல்லாதே!

R.சிதம்பரம்

(2505)



சிம்மபுரத்தை முன்பு ஆண்டு வந்த ராஜா அடிக்கடி சண்டை போடுவார் பக்கத்து ஊர்களோடு!

அதனால் அவருக்கு எதிரிகள் அதிகம்.

ஒற்றர்கள் அவரை ஜாக்கிரதையாக இருக்குமாறு எச்சரித்தனர்.

அதற்கு என்ன வழி?

உயிருக்குப் பயந்த ராஜா யோசித்தார்!

சிறிது நேரம் சென்றிருக்கும்.

'ஆகா! யோசிப்பது நம் வேலையல்லவே! மந்திரியின் வேலை அல்லவா?'

''யாரங்கே? ம ந் தி ரி யை வரச் சொல்.''

மந்திரி வந்தார்.

''என்னய்யா மந்திரி நீர்! எனக்கோ ஒவ்வொரு விநாடியும் பயமாக இருக்கிறது! விரோதிகளிடமிருந்து என்னைக் காப்பாற்ற ஒரு வழி சொல்லும்!'' என்றார்.

மந்திரி யோசித்தார், யோசித்தார், அப்படி யோசித்தார்.

ம்ஹூம்.

ஒன்றும் புலப்படவில்லை.

மந்திரிக்குப் பசிக்க ஆரம்பித்து விட்டது!

யோசித்துக் களைத்து விட்டார், பாவம்!

திடீரென,

"நல்லவழி, நல்லவழி" என்று மந்திரி குஷியில் குதித்து,

ராஜாவின் த லை ப் பா கை யைத் தட்டிவிட்டு விட்டார்.

ராஜா கோபத்துடன் "என்ன தைரியம் உமக்கு! தலைப்பாகையைத் தட்டிவிடுகிறீர்!" என்றார்.

மந்திரி பயந்து உளறியடித்துக் கொண்டு, "ராஜா, மன்னிக்க வேண்டும். ஒரு பல்லி தலைப்பாகையில் இருந்ததைப் பார்த்தேன்!" என்று சமாளித்தார்.

ராஜாவுக்குப் பல்லி பயம் உண்டு!

"சரி, போகட்டும். வழி என்ன? சொல்லும்."

"ஹா, இதோ, விரோதிகள் விஷம் வைப்பார்கள்! எதில்? உணவில். எனவே, உணவைச் சோதித்துப் பார்த்து உண்ண வேண்டும்."

"எப்படிச் சோதிப்பது?" என்று கவலையுடன் ராஜா கேட்டார்.

"ஒரு ஆளைப் போட்டு விடுவோம். அவன் சாப்பிட்டு விட்டு அரை மணி நேரம் வரை காத்திருங்கள். அவனுக்கு ஒரு ஆபத்தும் இல்லையென்றால், தாங்கள் சாப்பிடலாம்."

"சரி, அப்படியே செய்வோம்."

என்னே விந்தை!

"நம் மகாராஜாவுக்கு ஓர் ஆள் தேவை. சாப்பாடு போட்டுச் சம்பளமும் தரப்படும்" என்று தண்டோராப் போட்டும் ஒருவரும் வரவில்லை.

எல்லோருக்கும் உயிராசை உண்டல்லவா?

இறுதியில் ஒருவன் வந்தான்.

அவன் பெயர் அழகன்.

திருப்தியாக உண்டான்! உறங்கினான்!

அழகன் மனைவிக்கு ஒரே கவலை, புருஷன் உயிர் ஆபத்தில் இருக்கிறது என்று.

ஒருநாள்,

அழகன் மனைவி வருத்தத்துடன் அழுது கொண்டிருந்தாள்.

அழகன் அங்கு வந்தான்.

அவளைத் தேற்றினான்.

"இதோ பார். ஒன்றும் பயமில்லை. நல்ல சாப்பாடு. கைநிறையச் சம்பளம். ஏன் கவலைப்படுகிறாய்? எனக்கு ஒரு ஆபத்தும் வராது!" என்றான்.

"அது எப்படி?"

அழகன் மடியிலிருந்து ஒரு பூனைக் குட்டியை எடுத்தான். மனைவியிடம் அதைக் காட்டிக் கூறினான்:

"நான் சாப்பிடுவதற்கு முன்பு இதற்கு உணவில் கொஞ்சம் கொடுத்து விடுவேன். இதற்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று தெரிந்த பிறகே நான் சாப்பிடுவேன். இது சமையல்காரனுக்கும் எனக்கும் மாத்திரம் தெரிந்த ரகசியம்!"

அழகன் மனைவி சந்தோஷப்பட்டாள்.

அவள் பக்கத்து வீட்டுக்காரியிடம் மட்டும் தான் சொன்னாள் இந்த ரகசியத்தை!

அவ்வளவுதான்!

அது மந்திரியின் காதிலும் விழுந்து விட்டது! உடனே ராஜாவிடம் இதைத் தெரிவித்தார்.

அதுதானே அவர் வேலை!

அழகன் வேலையை விட்டு விலக்கப்பட்டான்.

நாய், பூனை வகையறுவில் இரண்டிரண்டைக் கொண்டு வந்தார் மந்திரி.

நாய், பூனை தின்ற பிறகு மிச்சத்தை ராஜா தின்று வெகுகாலம் ஜீவித்திருந்தார்!



“என் கதையைக் கேளுங்கள்”

—வரிக்குதிரை

''அம்மா, அம்மா, அதோபாரம்மா. கழுதை மேலே கறுப்புக் கறுப்பாய்க் கோடு போட்டிருக்கு!'' என்று ஒரு குரல் கேட்டது.

மிருகக் காட்சி சாலையில் வேலிக்குள் நின்று கொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்த்தேன். ஒரு சிறுவனும் அவன் அம்மாவும் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

''இது கழுதை இல்லேடா கண்ணு. உடம்பைப் பார். எப்படிப் பளபளப்பாக இருக்கிறது! இந்த மிருகக் காட்சி சாலையிலே புலிக்கு அடுத்தபடி அழகான மிருகம் இதுதான். இதன் பெயர்தான் 'வரிக்குதிரை!'' என்றாள் அம்மா.

உடனே அந்தப் பையன் வாய்விட்டுச் சிரித்தான். சிரித்துக் கொண்டே, ''வரிக் குதிரையா! இதற்கும் குதிரைக்கும் என்னம்மா சம்பந்தம்? அசல் கழுதை மாதிரியே இருக்கிறது. இது வரிக் குதிரை இல்லேயம்மா.' வரிக்கழுதை! இதுதான் சரியான பெயர்'' என்றான். பையன் பேச்சைக் கேட்டு அம்மாவும் சிரித்தாள்.

எனக்குக் கோபம் கோபமாக வந்தது. உடனே அந்தப் பையனுக்குச் சுடச் சுடப் பதில் கொடுக்க வேண்டும் போல் தோன்றியது. ''நானா கழுதை? கழுதையைப் போல் நான் காகிதத்தைத் தின்கிறேனா? இல்லை; கற்றாழையைத் தின்கிறேனா? வேண்டுமானால், இந்த மிருகக் காட்சி சாலையில் வேலை செய்கிறவர்களைக் கேட்டுப் பார். புல், பூண்டு, காரட், கோதுமைத் தவிடு—இவைகளைத் தான் நான் தின்கிறேன்'' என்று சொல்ல' நினைத்தேன். ஆனாலும் சொல்லவில்லை. காரணம், அந்தப் பையன் சொன்னதிலும் ஓரளவு உண்மை இருப்பதால்தான்! ஒரு விதத்தில் நான் கழுதை இனத்தைச் சேர்ந்தவன்தானே?

சாப்பாட்டில் மட்டும்தானா? இன்னும் எத்தனையோ விஷயங்களில் எனக்கும் கழுதைக்கும் வேறுபாட்டைக் காணலாம். கழுதை நன்றாகப் பொதி சுமக்கும்; எஜமானனுக்குப் பணிந்து நடக்கும். நான் கொஞ்சம் முரடன். என்னைப் பழக்குவது சுலபமல்ல. அடிமையாக வாழ்வது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.

இந்த மிருகக் காட்சி சாலைக்கு வருவதற்கு முன்பு, ஆப்பிரிக்காவில் ஒருவர் என்னைக் காட்டிலிருந்து பிடித்து வந்து வீட்டிலே வளர்த்தார். வண்டியிலே போட்டுப் பழக்கினார். நானும் குதிரையைப் போல நன்றாகத் தான் வண்டி இழுத்தேன். அவர் என்னைச் சில சமயங்களில் சாட்டையால் அடித்துத் தொந்தரவு செய்வார். எனக்குப் பொல்லாத கோபம் வந்து விடும். சமயம் பார்த்துப் பின்னங்காலால் அவருக்கு நல்ல உதை கொடுப்பேன். தீனி போடும் போது பல்லால் அவர் கையைக்

கடித்து விடுவேன். என் தொந்தரவு பொறுக்க மாட்டாமல் தான் அவர் என்னை விற்று விட்டார்.

அபூர்வமான மிருகங்களெல்லாம் பிறக்கின்ற ஆப்பிரிக்காவில்தான் நானும் பிறந்தேன். அங்குள்ள காடுகளில் தான் என் இனத்தைக் காணலாம். ஆட்டு மந்தையைப் போல் கூட்டம் கூட்டமாக நாங்கள் காட்டிலே திரிவோம்.

சிங்கத்திற்கு எங்களை அடித்துச் சாப்பிடுவதிலே அபாரமான ஆசை. பாதாம் அல்வாவை நீங்கள் எவ்வளவு விருப்பமாகச் சாப்பிடுகிறீர்கள்? அவ்வளவு விருப்பமாக எங்கள் மாமிசத்தைச் சிங்கம் சாப்பிடும். கூட்டமாக நாங்கள் இருக்கும் போது சிங்கம் எங்களிடம் வருவதற்கு யோசிக்கும். தனியாக இருந்தால், ஆபத்துத்தான்!

ஒரு தடவை, நான் தனியாக மேய்ந்து கொண்டிருந்தேன். அப்போது பின்னால் யாரோ வருவது போல் தெரிந்தது. சிறு சத்தமாக இருந்தாலும் எனக்குத் தெரிந்து விடும். அதற்காகத்தானே கடவுள் எனக்கு நீளமான காதுகளைக் கொடுத்திருக்கிறார்!

சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தேன். ஆ! ஆபத்து! ஆண் சிங்கம் ஒன்று என்னை நோக்கிப் பாய வந்தது. உடனே எடுத்தேன் ஓட்டம் மணிக்கு 40 மைல் வேகம் தான் என்னால் ஓட முடியும். ஓடினேன், ஓடினேன். சிங்கமும் விடவில்லை; துரத்தியது. மிகவும் நெருங்கி வந்து விட்டது! ஒரு விநாடி தாமதித்தாலும் ஆபத்து! மேலே பாய்ந்து பிடரியைக் கடித்துவிடும். ஆனால், நானா அதற்கு இடம் கொடுப்பேன்? சிங்கம் நெருங்கி வந்ததும், பின் கால்களால் ஓங்கி ஓர் உதை கொடுத்தேன் சிங்கம் வலி தாங்காமல் அங்கேயே உட்கார்ந்து விட்டது. நான் நாலுகால் பாய்ச்சலில் ஓடி வந்து விட்டேன்.

பிறந்து ஏழு எட்டு மாதம் ஆன பிறகுதான் நீங்களெல்லாம் நிற்கிறீர்கள், அப்புறம் தான் நடக்கிறீர்கள். ஆனால், பிறந்த அன்றைக்கே என்னால் நிற்க முடிந்தது; ஓடக்கூட முடிந்தது. மனிதரைப் போல என்னை இடுப்பிலே தூக்கி வைத்துக் கொள்ள என் அம்மாவால் முடியுமா? அல்லது கங்காருவைப் போல் பைக்குள்ளே வைத்துக் கொள்ளத்தான் முடியுமா? அதனால் தான் பிறந்தவுடனே ஓடக் கூடிய சக்தியை எங்களுக்கு ஆண்டவன் கொடுத்திருக்கிறார். சிங்கமோ, சிறுத்தையோ வந்தால் கூட ஓட வேண்டுமல்லவா?

எங்களிலே சிறு குட்டிகள் ஒன்றுடன் ஒன்று சண்டை போடுவதுண்டு. மனிதர்கள் குஸ்திச் சண்டை





போடுவது போல் அந்தக் காட்சி இருக்கும். ஆனால், இந்தக் குஸ்திச் சண்டையில் ஒருவரை ஒருவர் கடிக்கக் கூடாது என்று சட்டம் எதுவும் இல்லை. அதனால், சில சமயம் ஒன்றை ஒன்று நன்றாகக் கடித்து விடுவதும் உண்டு!


ஆப்பிரிக்காவில் சில பேராசைக்காரர்கள் இருக்கிறார்கள். எங்கள் இனத்தை வேட்டையாடி இவர்கள் நிறையச் சம்பாதிக்கிறார்கள். எங்களுடைய மாமிசம் மனிதருக்குப் பிடிக்காதாம். தோலையும் பதனிட முடியாதாம். ஆனாலும் எங்களுடைய கொழுப்பு இருக்கிறதே, அதற்குக் கிராக்கி அதிகம். கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள பூர்வ குடிகளுக்கு அது ஒரு சிறந்த மருந்தாக உதவுகிறது. சிறிய அளவு கொழுப்புக்கு அவர்கள் நிறையப் பணம் கொடுப்பார்கள். காச நோய்க்கு அது கைகண்ட மருந்தாம்!

உங்களைவிட இரண்டு மாதங்கள் அதிகமாகக் கர்ப்பத்தில் இருந்தவன் நான். அதற்காக இந்த உலகத்திலும் உங்களைவிட அதிக நாள் உயிரோடு இருக்க முடியுமா, என்ன? என் ஆயுள் காலமே இருபது ஆண்டுகள் தானே!

குதிரைகள் இழுத்த டிராம் வண்டி!

முன்பெல்லாம் சென்னை நகரில் முக்கிய தெருக்களில் டிராம் வண்டிகள் ஓடின. இப்போது கல்கத்தா நகரில் டிராம் வண்டிகள் நிறைய ஓடுவதைக் காணலாம்.

ஆதியில் டிராம் வண்டிகளைக் குதிரைகள் இழுத்துச் சென்றன. பிறகு நீராவியின் சக்தியால் டிராம் வண்டிகள் ஓடின. அதன் பிறகு, மின்சக்தியைக் கொண்டு டிராம் ஓட்டினார்கள். ஆனாலும் மின் சக்தியை உற்பத்தி செய்யச் செலவு அதிகம் ஆனது. பிறகு, டைனமோ கண்டுபிடிக்கப்பட்டு, அதிகச் செலவு இல்லாமல் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடிந்தது.



முதன் முதலில் மின் சக்தியால் டிராம் வண்டி ஓடியது ஜெர்மனியில் தான். 1881ஆம் ஆண்டில்.

அமெரிக்கக் கதை



பையனைக் கடத்தியவர் பணத்துடன் கொடுத்தார்!

மூலம்: ஓ. ஹென்றி
தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

பில்லும், நானும் தெற்கே அலபாமாவுக்குப் போயிருந்த போது இந்தக் கடத்தல் எண்ணம் எங்களுக்குத் தோன்றியது. எங்கள் இருவரிடமுமாகச் சுமார் அறுநூறு டாலர் ரொக்கம் இருந்தது. மனை வாங்குவதற்காக இன்னும் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. இரண்டே இரண்டாயிரம் டாலர், அவ்வளவுதான்! நாங்கள் தங்கியிருந்தது ஓர் ஓட்டல். எதிரே சம்மிட் என்னும் கிராமம். கிராம மக்களிடம் பிள்ளைப் பாசம் அதிகம். மேலும், அங்கே போலீஸ் முதலிய காவல் வசதிகளும் குறைவு. ஆகவே, எங்கள் கைவரிசையை அங்கே காட்ட நினைத்தோம்.

எபனீயர் டார்சட் என்னும் பெயருடைய ஒரு கட்டிடக் கலைஞரின் பிள்ளையைக் குறி வைத்தோம். அவருக்கு ஊரில் செல்வாக்கு இருந்தது. அவருடைய பிள்ளைக்கு வயது பத்து. முகத்தில் ப்ருப்புப் புள்ளிகள். தலைமுடி செம்பட்டையாகக் குச்சி குச்சியாக இருந்தது. டார்சட் தன் பிள்ளையை மீட்கக் குறைந்தது இரண்டாயிரம் டாலர் கொடுப்பார் என்று பில்லும், நானும் எண்ணினோம். ஆனால், பொறுங்கள், கதையை முழுவதும் சொல்லி விடுகிறேன்.

கிராமத்திற்கு இரண்டு கல் தொலைவில் அடர்ந்த காடும், காட்டில் ஒரு சிறு குன்றும் இருந்தன. குன்றின் மேல் ஒரு குகை. உணவுப் பொருள்களை அங்கே சேகரித்து வைத்தோம். அடுத்த ஊரிலிருந்து ஒரு குதிரை வண்டியை வாடகைக்கு எடுத்தோம். டார்சட்டின் வீதி வழியாக வண்டியைச் செலுத்தினோம். அந்தச் சிறுவன் தெருவில் இருந்த ஒரு பூனைக் குட்டி மீது கற்களை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தான். பில் அவனைப் பார்த்து, ''தம்பி, உனக்கு மிட்டாய் வேணுமா? நிறையத் தருகிறேன். குதிரை வண்டியில் வருகிறாயா?'' என்று கனிந்த குரலில் கேட்டான். சிறுவன் ஒரு பெரிய கல்லை எடுத்துப் பில்லின் முகத்தில் பட்டென்று வீசினான்.

பில் கீழே இறங்கினான். அந்தச் சிறுவனுடன் ஒரு போராட்டமே நடத்திக் கடைசியில் அவனைப் பிடித்து வண்டியில் தள்ளினான். வண்டி புறப்பட்டது. பில்லையும், சிறுவனையும் குகையில் இறக்கினேன்; வண்டியைத் திருப்பிக் கொடுத்து விட்டு நடந்து வந்தேன்.

பில் முகத்திலிருந்த காயங்களைத் துடைத்து மருந்து தடவிக் கொண்டிருந்தான். அவனுக்குக் கைகால்களிலும் கூட அடிபட்டிருந்தது. குகை

யின் நுழைவில் தீ எரிந்தது. அதன் மேல் காப்பி கொதித்தது. சிறுவன் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய செம்பட்டைத் தலையில் இரண்டு இறகுகள் பளிச்சிட்டன. சிறுவன் ஒரு குச்சியை என் முன்னால் நீட்டி, "ஒரு பயங்கரமான சிவப்பு இந்தியனின் முகாமில் நுழைகிறாய்! உனக்கு எவ்வளவு தைரியம்?" என்று கேட்டான். நான் பில்லை நோக்கினேன்.

சிறுவனுக்குக் குகை வாழ்க்கை மிகவும் பிடித்திருந்தது. 'தான் ஒரு கைதி' என்ற நினைப்பே அவனுக்கு வரவில்லை. எனக்குப் 'பாம்புக் கண்ணன்' என்று பரிகாசமாகப் பெயர் வைத்து, "நீ எதிரியின் ஒற்றன். நாளை சூரிய உதயத்தில் நீ எரிக்கப் படுவாய்" என்று சிவப்பு இந்தியர் வழக்கப்படி தீர்ப்பு அளித்தான்.

இரவு உணவு தயாரித்தோம். சிறுவன் தன்னுடைய பள்ளி நண்பர்களைப் பற்றியும், தான் பார்த்த மிருகங்களைப் பற்றியும் ஓயாமல் பேசிக் கொண்டே சாப்பிட்டான். தான் ஒரு சிவப்பு இந்தியன் என்று நினைத்துக் கொண்டு அவன் திடீர், திடீரெனப் போர்க் குரல் எழுப்பினான். ஆரம்ப முதலே அந்தச் சிறுவன் பில்லைப் பயமுறுத்தி வந்தான்.

"செவ்விந்தியத் தலைவரே! தாங்கள் வீட்டுக்குப் போக வேண்டாமா?" என்று அந்தச் சிறுவனிடம் நான் பணிவோடு கேட்டேன். "எதற்காகப் போக வேண்டும்? வீட்டில் எனக்குப் பொழுது போக்குகளே இல்லை. பள்ளிக்கூடம் போகவும் பிடிக்கவில்லை. இந்தக் காட்டு வாழ்க்கைதான் எனக்குப் பிடிக்கிறது. பாம்புக் கண்ணா! என்னைத் திரும்பவும் வீட்டுக்கு அழைத்துப் போக மாட்டாயல்லவா?" என்று சிறுவன் கேட்டான். "இப்போது இல்லை. கொஞ்ச நாட்களுக்கு இந்தக் குகையிலேயே தங்கலாம்," என்றேன். சிறுவன் மகிழ்ச்சி அடைந்தான்.

குகையில் ஒரு பெரிய கம்பளத்தை விரித்து எங்கள் இருவருக்கும் நடுவில் சிறுவனைப் படுக்க வைத்தோம். இரவு நெடுநேரம் வரை அவன் தூங்கவில்லை. ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான். நான் சற்றுக் கண் அயர்ந்தேன். சிவப்புத் தலைமுடி உடைய ஒரு கொள்ளைக்காரன் என்னைக் கடத்திப் போவதாகவும், ஒரு மரத்தில் கட்டிப் போடுவதாகவும், நான் ஒரு பயங்கரக் கனவு கண்டேன்.

பொழுது புலர்கையில் பில்லின் குரல் பயங்கரமாக ஒலித்தது. பேயோ, பிசாசோ எதிரில் வந்தால் மனிதர்கள் எவ்வாறு அலறுவார்களோ அவ்வாறு பில் அலறினான். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தேன்.

பில்லின் மார்பின் மீது சிறுவன் உட்கார்ந்திருந்தான். சிறுவனின் ஒரு கை பில்லின் தலைமுடியை

<u>எப்படித் தின்பான்?</u>

"அம்மா, தம்பி அழுறான். அவனுக்கும் ஒரு மைசூர்ப் பாகு கொடு அம்மா."

"பல் முளைக்காத அவன் எப்படியடா தின்பான்?

"தாத்தாவோட பல் செட்டை மாட்டி விடுகிறேன் அம்மா."

—கீழை ஜி.எஸ். தர்மலிங்கம்.





இறுகப் பற்றியிருந்தது. இன்னொரு கை சமையலுக்காக வைத்திருந்த கூரிய கத்தியைப் பிடித்திருந்தது. 'பில்லின் தலையிலிருந்த முடியையும், தோலையும் நீக்க வேண்டும்' என்று சிவப்பு இந்தியப் பாணியில் சிறுவன் அவனுக்குத் தண்டனை அளித்து விட்டு, அதை நிறைவேற்றவும் தொடங்கியிருந்தான்.

முதலில் கத்தியைப் பிடுங்கிப் பத்திரமாக வைத்துவிட்டுச் சிறுவனைப் படுக்கச் செய்தேன். சூரிய உதயத்தில் என்னை எரிக்க வேண்டும் என்று அச் சிறுவன் கூறியது என் நினைவுக்கு வந்தது. நான் பயப்படா விட்டாலும் எனக்கு உறக்கம் வரவில்லை. எழுந்து உட்கார்ந்து கொண்டு புகை பிடித்தேன். பில் சற்று நேரம் என்னையே பார்த்தான். பிறகு, ''இந்தத் துஷ்டப் பையனைத் திரும்பவும் வீட்டுக்கு அழைத்து வர யாராவது பணம் கொடுப்பார்கள் என்று நீ நினைக்கிறாயா?'' என்று என்னிடம் கேட்டான்.

''நிச்சயமாகக் கொடுப்பார்கள். இம்மாதிரிப் பிள்ளைகளிடம் தான் பெற்றோருக்குப் பாசம் அதிகம். நீயும், சிறுவனுமாகச் சமையல் செய்யுங்கள். நான் குன்றின் உச்சிக்குப் போய்க் கிராமத்தை ஒரு நோட்டம் விட்டு வருகிறேன்,'' என்று சொல்லிப் புறப்பட்டேன்.

நான் குகைக்குத் திரும்பிய போது பில்லுக்கும், சிறுவனுக்குமிடையே ஏதோ தகராறு. ஒருவரை ஒருவர் துரத்திச் சென்று கற்களை எறிந்து கொண்டிருந்தனர். அவர்களை விலக்கி விட்டுப் பில்லைத் தனியாக அழைத்துப் பேசினேன். ''சிறுவன் காணாமல் போனது குறித்து ஊரில் பரபரப்பையே காணோம். அவன் உறவினர் வீட்டுக்குப் போயிருப்பதாக நினைக்கிறார்கள் போலிருக்கிறது. இன்றிரவு அவனுடைய அப்பாவுக்குத் தகவல் அனுப்பி, இரண்டாயிரம் டாலர் மீட்புப் பணம் கேட்போம்,'' என்று பில்லிடம் கூறி



னேன்.

சிறுவனை அழைத்து, "பில்லைத் தொந்தரவு செய்ததற்காக அவனிடம் மன்னிப்புக் கேள். இனிமேல் நீ ஒழுங்காக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னை வீட்டுக்கு அனுப்பி விடுவேன்," என்று மிரட்டினேன்.

"அவன் என்னை அடித்ததால் தான் நானும் அவனை அடித்தேன். இனிமேல் நான் ஒழுங்காக இருப்பேன். ஆனால், இரண்டு நிபந்தனைகள். ஒன்று — என்னை வீட்டுக்கு அனுப்பக் கூடாது. இரண்டு — என்னைக் காவல்காரன் விளையாட்டு விளையாட இன்று அனுமதிக்க வேண்டும். ஏனென்றால், சிவப்பு இந்தியன் விளையாட்டு எனக்கு அலுத்துவிட்டது," என்றான் சிறுவன். சிறுவனுக்கு விளையாட்டுத் தோழனாக இருக்கும்படி பில்லிடம் சொன்னேன். இருவரையும் கைகுலுக்கச் செய்து நண்பர்களாக்கினேன்.

பில்லைத் தனியாகக் கூப்பிட்டுச் சிறுவனின் அப்பாவுக்கு எப்படிக் கடிதம் எழுதுவது என்று ஆலோசித்தேன். சிறுவனுடைய தொல்லைகளைப் பொறுக்க முடியாத பில், சிறிது யோசித்தான். பிறகு, இரண்டாயிரம் டாலர் கேட்க வேண்டாம். பாவம், அந்த அப்பாவால் கொடுக்க முடியுமோ என்னவோ? ஆயிரத்து ஐநூறு என்றே எழுதுவோம். மீதிப் பணத்தை நானே தருகிறேன்," என்றான் பில். நாங்கள் இருவருமாகக் கீழ்க்கண்ட கடிதத்தை எபனீயருக்கு எழுதினோம்:

"எபனீயர் டார்சட் அவர்களுக்கு,

ஊருக்கு வெகு தொலைவில் உங்கள் பிள்ளையை வைத்துக் கொண்டிருக்கிறோம். நீங்களோ, போலீசோ எவ்வளவு தேடினாலும் அவன் கிடைக்க மாட்டான். சிறுவனைத் திரும்பப் பெற வேண்டுமானால் ஒரே ஒரு நிபந்தனை — ஆயிரத்து ஐநூறு டாலர் பணம் எங்க

னுக்குத் தேவை. அந்தப் பணத்தை இன்றிரவு பன்னிரண்டு மணிக்குக் காட்டில் நாங்கள் குறிப்பிட்டுள்ள இடத்தில் வைக்க வேண்டும். அதற்கு முன்னால் இரவு எட்டு மணிக்கு அதே இடத்தில் உங்கள் ப தி லை யு ம் வைக்க வேண்டும். பணம் அனுப் பினால் பிள்ளை கிடைப்பான். மறுத் தாலோ, அல்லது போலீசை நாடி னாலோ நீங்கள் அவனைப் பார்க்க முடியாது. இதுவே கடைசி எ ச் ச ரிக்கை,'' என்று எழுதிப் பதிலையும், பணத்தையும் வைக்க வேண்டிய இடத்தையும் தெளிவாகக் குறிப்பிட் டோம். ''இரு முரடர்கள்'' என்று கையெழுத்திட்டு, டார்சட்டின் விலா சத்தை உறையின் மேல் எழுதி னேன்.

பில்லிடம் வி டை பெ ற் று க் கொண்டு நான் தபால் நிலையத் திற்குப் புறப்படுகையில், சிறுவன் குறுக்கிட்டான்; ''சிவப்பு இந்தியர் படையெடுப்பை ஊருக்கு அறிவிக் கும் காவல்காரனாக நான் இன்று விளையாடப் போகிறேன். எனக்கு ஒரு குதிரை வேண்டும்,'' என்றான். பில்லைக் குதிரையாக இருக்கச் சொல்லிவிட்டு நான் வெளியே போக ஆயத்தமானேன். பில் மிகவும் பரிதாபமாகக் கைகளைக் கீழே ஊன்றி ஒரு நாலுகால் பிராணியாக மாறினான். உடனே சிறுவன் அவ னுடைய முதுகில் ஏறி அமர்ந்து, அவனை அடுத்த ஊருக்குப் போகும் படி விரட்டினான். ''ஈட்டுப் பணத்தை ஆயிரமாகக் குறைத்தாவது இந்தக் குட்டிச் சாத்தானை விரட்டிவிடு, அப்பா; இவன் என் உயிரையே வாங்கி வி டு வா ன் போலிருக் கிறது,'' என்று அழாத குறையாக பில் சொன்னான். நான் வெளியே விரைந்தேன். சிறுவன் காணாமல் போன செய்தி ஊர் முழுவதும் பரவி யிருந்தது. அந்தக் கடிதத்தை ரகசியமாகத் தபாலில் சே ர் த் து விட்டுக் குகைக்குத் திரும்பினேன்.



ஏன் கண்ணை மூடினான்?

கப்பு: வாத்தியார் கேள்வி கேட்கும்போது ஏ ண் டா கண்ணை முழிக்கிறே?

குப்பு: பதில் தெரியாட்டி சும்மா 'திருதிரு'ன்னு முழிக்கக் கூடாதுன்னு என் அப்பா சொல்லியிருக்கார்.

—கீழை அ. கதிர்வேல்.

அங்கே பில்லையும் காணவில்லை. சிறு வனையும் காணவில்லை.

பில் ரத்தக் காயங்களுடன் அலங் கோலமாகக் குகைக்குத் தி ரு ம் பி க் கொண்டிருந்தான்.

''என்ன ஆயிற்று?'' என்று பயந்து போய்க் கேட்டேன்.

''அந்தச் சிறுவனைப் பார்த்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். ஆகவே, அவனை வி ர ட் டி வி ட் டேன்,'' என்றான் பில்.

''பில்! கொஞ்சம் புரியும்படியாகச் சொல்!'' என்றேன்.

''என் மேல் குதிரைச் சவாரி செய்த அந்தச் சிறுவன் அடுத்த ஊர் வரைக்கும் காட்டிலும், மேட்டிலும் என்னை விரட்டி அடித்தான். எனக்கு முழங்கால் தேய்ந்து ஒரே காயம். ரத்தம் ஒழுகியது. ஒரே வலி. என் பொறுமை எல்லையை மீறியது. 'நீயும் வேண்டாம், உன் பணமும் வேண் டாம் என்று சொல்லி, அவனை உ தை த் து விரட்டி விட்டு வருகி றேன்,'' என்றான் பில்.

பில் பேசி வாயை மூடுவதற்குள் அந்தச் சிறுவன் மீண்டும் குகைக்குள் நுழைந்தான்! பில்லுக்குத் தலை சுற்றியது!

''பில், இன்றிரவே முடிவு தெரிந்து விடும். டார்சட் பணம் கொடுத்து விட்டால், இந்தச் சிறுவனைத் திருப்பி அனுப்பி விடலாம். பொறுமையாக இரு!'' என்று பில்லிடம் கூறினேன்.

அன்றிரவு காட்டில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு பெட்டியை வைத்து விட்டு, நான் ஒளிந்து கொண்டேன். சரியாக எட்டு மணி.ஓர் ஆள் சைக்கிளில் வேகமாக வந்தான். அந்தப் பெட்டியில் ஒரு கடிதத்தைப் போட்டு விட்டு வந்த வேகத்திலேயே திரும்பினான். அதை எடுத்துக் கொண்டு நான் குகைக்கு ஓடினேன்.

பில்லுக்கு அந்தக் கடிதத்தைப் படித்துக் காட்டினேன். அதில் பின்வருமாறு இருந்தது:

''இரு முரடர்களுக்கு,

அன்புடையீர்! என் மகனைத் திருப்பி அனுப்புவதாகப் பணம் கேட்டு நீங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. உங்கள் கோரிக்கை சற்று அதிகமாக இருக்கிறது. நான் இப்போது ஒன்று சொல்லுகிறேன். அதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகிறேன். நீங்கள் என் பிள்ளையை வீட்டுக்கு அழைத்து வந்து, ரொக்கமாக இருநூற்று ஐம்பது டாலர் எனக்குக் கொடுத்தால் போதும். உங்களிடமிருந்து நான் அவனை ஏற்றுக் கொள்ளுகிறேன். என் அண்டை வீட்டார் சிறுவன் தொலைந்து போய் விட்டான் என்று நம்புகின்றனர். ஆகவே, யார் கண்ணிலும் படாமல் இரவில் வாருங்கள். சிறுவனைத் திரும்பவும் வீட்டுக்கு அழைத்து வருபவர்களை அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கு நான் பொறுப்பு அல்ல.

உங்கள் மதிப்பிற்குரிய,
எபனீயர் டார்சட்.''

எனக்கு ஒரே அதிர்ச்சி. பில்லுக்கு ஒரே ஆனந்தம். ''இருநூற்று ஐம்பது டாலர் ஒரு பெரிய பணமா, என்ன? நம்மிடம்தான் இருக்கிறதே! கொடுத்துவிட்டு இந்தச் சனியனைத் தலைமுழுக வேண்டியதுதானே? என்ன இருந்தாலும் டார்சட்டுக்கு மிகவும் தாராள மனசு. அவர் குறைந்த தொகையே கேட்கிறார். சந்தர்ப்பத்தை நாம் நழுவ விடக்கூடாது.'' என்றான் பில். உடனே நானும் ஒப்புக் கொண்டேன்.

இரவு பன்னிரண்டு மணி. சிறுவனிடம் பல பொய்களைச் சொல்லிச் சமாளித்து அவனை வீட்டுக்கு அழைத்துப் போனோம். நாங்கள் ஆயிரத்து ஐநூறு டாலர் பெற வேண்டிய அதே நேரத்தில், டார்சட்டின் கைகளில் இருநூற்று ஐம்பது டாலரை எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தோம்.

சிறுவன் பில்லின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடவே இல்லை. ஒரு பிளாஸ்டரைப் பிய்த்து இழுப்பதைப் போல மெதுவாக அவனை இழுத்து, அப்பாவின் கைகளில் கொடுத்துவிட்டு நாங்கள் காற்றாய்ப் பறந்தோம்.


O. Henry எழுதிய The Ransom of Red Chief என்ற கதையின் சுருக்கமே இது.

ஏன் கோபம்?

''அதுக்கு ஏன் கோபம்?''

''ஒண்ணுமில்லே. அதன் நிறமும், அதன் கொம்பிலே பூசியிருக்கிற நிறமும் மேட்சாகல்லியாம்.''

—நெல்லை சுவாதி.



ஆழ்கடலில் அப்பாவுடன் போனேன்!

ஒவ்வொரு குழந்தைக்கும் தன் அப்பா எங்கே வேலை செய்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசையாகத்தான் இருக்கும். சில குழந்தைகளுக்குத் தங்கள் அப்பா வேலை செய்யும் இடத்திற்குக் கூடச்செல்ல வேண்டுமென்ற எண்ணம் எழலாம்.

வீட்டிலுள்ள பெரியவர்கள் வெளியே செல்லும் போது, ''நானும் கூட வருகிறேன்'' என்று அடம்பிடிக்கும் குழந்தைகள் எத்தனையோ! எங்காவது வெளியே சுற்றிவர இந்த விளையாட்டுப் பருவத்தில் ஆசை வருவது இயற்கையே!

குறிப்பாக விமானம் ஓட்டுபவரின் மகனுக்கு, தானும் ஒரு நாள் அப்பா மாதிரி விமானம் ஓட்ட வேண்டும்; அவருடன் செல்ல வேண்டும் என்ற ஆசை வரலாம்.

கப்பல் ஓட்டும் மாலுமியின் மகனுக்கும் அதே மாதிரி ஆசை வரும்.

அதேபோல மீன் பிடிக்கும் மீனவரின் குழந்தைக்கும் தன் அப்பா எப்படி மீன் பிடித்து வருகிறார் என்ற எண்ணம் ஏற்படலாமல்லவா?

அவ்வாறு தன் அப்பா எப்படி மீன் பிடித்து வருகிறார்; தங்கள் குடும்பத்தில் ஒருநாள் என்னென்ன நடக்கிறது; தனது அப்பாவின் தொழில்





எத்தகையது என்பது பற்றி இக்கட்டுரையில் சிறுவன் ஆபிரகாமும், சிறுமி ரெஜியும் கூறுவதைக் கேட்கலாம்.

சிறுவன் ஆபிரகாம் ஏழாம் வகுப்பு படிப்பதாகச் சொன்னான். அவனுக்கு ஒரு தங்கை. அவள் பெயர் ரெஜி.

''தினமும் என் அப்பா காலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து மீன் பிடிக்கும் வலையை எடுத்துக் கொண்டு அம்மா கொடுக்கும் சாப்பாட்டை வாங்கிக் கொண்டு புறப்பட்டு விடுவார். மாலையில் திரும்பி வரும் போது நிறைய மீன் கொண்டு வருவார். 'என் அப்பா நிறைய மீன் கொண்டு வருவார்' என்று சொல்லும் போதே அவன் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றுகிறது.

''தம்பி, எல்லா நாளுமா உன் அப்பா நிறைய மீன் கொண்டு வருவார்?''

இப்படிக் கேட்டதும் அவன் சற்று யோசித்து, ''தினமும் நிறைய மீன் கெடைச்சா நாங்க ஏன் சார் இப்படி இருக்கப் போறோம்? சில நாள் கிடைக்கும். சில நாள் சும்மா வெறுங் கையோடே வந்தாலும் வந்திடுவாரு. கிடைச்சா லாபம். இல்லேன்னா எங்கப்பாவுக்குக் கோபம்'' என்று சினிமா வசனம் போல் பேசினான்.

''ஆமா, இந்த மீனையெல்லாம் என்ன பண்ணுவீங்க?''

''எங்கப்பா மீன் கொண்டு வந்த அன்னிக்கே எங்க வீட்டிலே வந்து நிறைய மீன் விக்கிற பொம்பளைங்க மீன் வாங்கிட்டுப் போவாங்க. சில ஆம்பளைங்க கூட சைக்கிள்லே வந்து வாங்கிட்டுப் போவாங்க. யாருமே வரலேன்னா எங்கம்மாவே கூடையில மீன் எடுத்துட்டுப் போயி வித்திட்டு வந்திடுவாங்க'' என்று அவன் சொல்லும்போதே அவன் தங்கை குறுக்கிட்டாள்.

''எங்கம்மா மீனு வித்திட்டு வர்றப்போ எனக்கு நிறைய பொரி, கடலே, மிட்டாய் எல்லாம் வாங்கிட்டு வருவாங்க'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''ஏன் தம்பி, நீ உங்கப்பா கூட மீன் பிடிக்கப் போயிருக்கிறாயா?''

''சார், எனக்கு ரொம்ப நாளா இந்த ஆசை இருந்தது. எப்போதாவது மழை வர்ற மாதிரி இருந்தால் அன்னிக்கெல்லாம் எங்கம்மா சாப்பிடாம அழ ஆரம்பிச்சிடுவாங்க. ஏம்மா அழுவுறேன்னு கேட்டா, ஒண்ணும் இல்லேன்னு சொல்லிட்டுத் திரும்பக் கடல் பக்கமாப் போயி நின்னுக்கிட்டு 'ஏய் ஆபிரகாம், அந்தா ஒரு படகு வருதே அதிலே உங்க அப்பா மாதிரி இல்லே. நல்லாப் பாரு'ன்னு சொல்லுவாங்க'' என்று ஆரம்பித்துத் தொடர்ந்து சொன்னான்.

எங்கப்பா கரைக்கு வந்த பிறகு தான் எங்கம்மா சிரிச்ச முகத்தோடே இருப்பாங்க.

ஒருநாள் நானும் எங்கப்பாக்கிட்ட அவருகூட வர்றதாச் சொன்னேன். எங்கம்மா அதெல்லாம் வேண்டாம்னாங்க. நான் ரொம்ப அடம் பிடிச்சேன். எங்கப்பா ''சரி வாடா, உங்கப்பன் தொழிலே நீயும் பாரு''ன்னு சொல்லிக் கூட்டிக்கிட்டுப் போனாரு.

படகு புறப்பட்டுடுச்சு. எங்கம்மாவுக்கு ஒரே பயம். எங்கப்பா எந்த பயமும் இல்லாமே படகை வேகமா ஓட்டினாரு.

கொஞ்ச தூரம் போனவுடனே எனக்கு பயம் வர ஆரம்பிச்சிடுச்சு. அடேயப்பா! எவ்வளவு தண்ணீர்! நம்ம தெருவிலே தண்ணிக்கு என்னமா சண்டை போடுறாங்க ''ஏம்பா, நம்ம ஊருக்குள்ளே தண்ணிக்குக் கஷ்டமா இருக்கே, இந்தத் தண்ணியை ஊருக்குள்ளே கொண்டாந்தா என்னப்பா?'' — இப்படி நான் சொன்னதும் எங்கப்பா என்னை ஒரு மாதிரி பார்த்துவிட்டு, ''படிக்கிற புள்ளை கேக்கிற கேள்வியா இது! ஏண்டா டேய், இது உப்புத் தண்ணி. இதெல்லாம் நம்ம

புழுக்கத்துக்கு உதவுமா? விவரந்தெரியாத புள்ளேடா'' என்று அவர் சொல்லும்போது லேசாகக் காற்று அடிக்க ஆரம்பித்தது.

ஒரு பெரிய அலை வீசுவதைப் போல இருந்தது. ''அப்பா, எனக்குப் பயமா இருக்குது''ன்னேன். ''வீட்லே இருக்கிறப்போ ஆசைப்படுறே. இங்கே வந்து பயப்படுறியே! இன்னும் மீன் பிடிக்கலே. இரு. இந்த வலையைப் போடுறேன்'' என்று கூறியவாறே கொஞ்ச தூரத்தில் வலையை வீசினார்.

என்ன ஆச்சரியம்! சிறிது நேரத்தில் வலை முழுவதும் தங்கக் கட்டிகளைப் போல மீன்கள்! எனக்கு ஒரே சந்தோஷம். ஆனாலும் லேசாக மழை வருவதைப் பார்த்ததும், மீண்டும் பயம் வந்தது. இனிமேல் எதுவும் கேட்கக் கூடாது என்று நினைத்தேன். ஆனாலும், இன்னொன்று கேட்க வேண்டும் போல் இருந்தது.

''ஏம்பா, கடலுக்கு அடியிலே நெறைய முதலை, பெரிய பெரிய மீன் பாம்பு எல்லாம் இருக்குமில்லே?'' என்று கேட்டேன்.

என் அப்பா பொறுமையுடன் ''ஆபிரகாம், எல்லாம் இருக்கும். அதற்கெல்லாம் பயந்தா நாம வாழவே முடியாது'' என்று கூறிவிட்டு மீண்டும் வலையை வீசினார்.

லேசான ஒரு காற்று. கொஞ்சம் மழை. படகு ரொம்ப ஆட்டம் கொடுத்தது. 'ஆண்டவா, நம் அப்பா எவ்வளவு கஷ்டங்களைத் தாங்கிக் கொள்கிறார்!'' என நினைத்துக் கொண்டே, ''அப்பா, வீட்டுக்குப் போகலாம்'' என்றேன்.

என்னை மீண்டும் ஒருமுறை பார்த்த என் அப்பா சிரித்துக் கொண்டே, படகைத் திருப்பினார். ''ஆபிரகாம், நீ என்னோடே வந்திருக்கிறதினாலே நான் கால்வாசித் தூரம் தான் போக முடிஞ்சது'' என்றார்.

இதுவே கால்வாசி என்றால் இன்னும் நெறையத் தூரம் அல்லவா நம் அப்பா போகிறார்! நினைக்கவே பயமாக இருந்தது. அதற்குள் லேசான மழை விழுந்து என் சட்டையை நனைத்து விட்டது. குளிர் வாட்ட ஆரம்பித்தது. என் அப்பாவோ சட்டை இல்லாமல் நனைந்து கொண்டே வந்தார்.

'எங்கம்மா கரையில் எங்களை எதிர் பார்த்து நின்னாங்க. அப்பாடா! கரை வந்து சேர்ந்தோம். கரையில் வந்து இறங்கிய பிறகுதான் எனக்குப் பயமே போனது.''

ஆபிரகாம் இவ்வளவு நேரமாகக் கூறியதைக் கேட்டதும், ''தம்பி, இந்த மாதிரி மீன் பிடிச்சிட்டு வர்றதைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?'' என்று கேட்டேன்.



என்ன வரும்?

அம்மா: பாபு, போன மாச பால் கணக்கு எவ்வளவுன்னு கொஞ்சம் கணக்குப் பார்த்துச் சொல்லிட்டுப் போடா!

பாபு: உம், சரியம்மா!

அம்மா: தினம் காலையிலே 900 மில்லி பால், சாயந்திரம் 700 மில்லி. மூணு நாள் காலையிலேயும் ஆறு நாள் மாலையிலேயும் பால் வாங்கலே. ரெண்டு நாள் காலையிலே 400 கூட வாங்கியிருக்கோம். அஞ்சு நாள் சாயந்திரத்திலே 300 கூட வாங்கியிருக்கோம். பால்காரர் ரூ. 8.50 கைமாற்று வாங்கியிருக்கார். ஆக மொத்தம் என்னடா வரும்?

பாபு: எனக்கு மயக்கம் வரும்.

—தங்கம் மணிவண்ணன்.

''எனக்கென்னவோ எங்கப்பா தொழிலைப் பத்தி நெனைச்சா பயமாத்தான் இருக்கு சார். மழை அடிச்சா, புயல் வந்தா எங்க தொழில் நடக்கிறதேயில்லே. அந்த மாதிரி நாட்களிலே எல்லாம் எங்க வீட்டிலே எங்கப்பா ரொம்பக் கவலையோட இருப்பாரு. அன்னிக்கெல்லாம் எங்களோட அவரு சிரிச்சே பேச மாட்டாரு. சில நாட்களிலே எங்க அப்பா கடலுக்குள்ளே போன பிறகு புயல் வரும்; மழை வரும்.

ஒருநாள் மீன் பிடிக்கப் போன எங்கப்பா வரவேயில்லே. அன்னிக்கு மத்தியானம் புயல் வீசுறதா வேறே சொல்லிட்டாங்க. எங்கம்மா பயந்துப் போயி ஏசுநாதர் படத்துக்கு மெழுகுவர்த்தி ஏத்தி வச்சி ஜெபம் பண்ண ஆரம்பிச்சிட்டாங்க. அன்னிக்கு ராத்திரி முழுவதும் கரையிலே நின்னோம். எங்கப்பா வரல்லே, எங்கம்மா, எங்க பாட்டி எல்லாரும் அழ ஆரம்பிச்சிட்டாங்க. பக்கத்து வீட்டிலேயிருந்து ரெண்டு ஆளுங்க வேறே போயிருந்தாங்க. அவங்க வீட்டிலேயும் ஒரே அழுகை!

கடைசியா மறுநாள் காலையிலே ஹெலிகாப்டர்லே தேடிப் பிடிச்சுக் கொண்டாந்தாங்க. எங்கப்பா வந்ததும் எங்கம்மா, ''இந்தத் தொழிலே வேண்டாம். எம்புள்ளே வேலைக்குப் போயி உங்களைக் காப்பாத்துவான்'' என்று கூறினாங்க.

எப்படியோ சார் எங்கப்பா தொழிலு கொஞ்சம் கஷ்டந்தான். ஒருநாள் கூடப் போனதினாலே ஏதோ இதைப் பத்திக் கொஞ்சம் தெரிஞ்சிக்கிட்டேன்'' என்றான்.

இப்படிச் சொல்லும்போதே அந்தப் பையனுக்கு ஒரு கஷ்டமான தொழிலைத் தன் அப்பா செய்கிறார் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரிந்தது.

''அப்பிடின்னா இந்தத் தொழில் உனக்குப் பிடிக்கலையா?''

''எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலே சார். ஆனால், 'இது கஷ்டமான தொழிலு. ஆபிரகாம், நீயாவது படிச்சி நல்ல வேலைக்குப் போடான்னு' எங்கம்மா சொன்னது தான் ஞாபகத்துக்கு வருது.''

''அப்படின்னா நீ நல்லாப் படிக்கப் போறே. இந்த மீன் பிடிக்கிற தொழிலைச் செய்யப் போறதில்லே. அப்படித்தானே!''

''படிக்கப் போறேன். நல்லாப் படிச்சுட்டு இப்படிக் கட்டை மரத்திலே போகாமே, விசைப் படகிலே போய் மீன் பிடிச்சு நல்ல வியாபாரம் பண்ணணும்னு ஆசை. அரசாங்கம் உதவுங்கிறாங்களே!''

''ஆமா தம்பி, அரசாங்கம் விசைப்படகு வாங்க, நைலான் வலை வாங்கவெல்லாம் உதவி செய்யுது. உங்க அப்பா கூட அந்த உதவிங்களைப் பெறலாமே!''

''அப்படியா!'' என்றான் ஆபிரகாம்.

''ஆமா தம்பி, மழை வரும் போலிருக்கு. நான் வர்றேன். இதுவரை பொறுமையாப் பதில் சொன்ன உனக்கு நன்றி. இதுவரை வராமேயிருந்த மழைக்கும் நன்றி.''

—பேட்டி: பாலா.


தாய்: பாவம் செய்தா நரகத்திற்குப் போவாங்க. அங்கே தண்டனை கிடைக்கும்.

மகள்: அப்படியா!

தாய்: ஆமாம், அங்கே எமதரும ராஜா இருக்கிறரு.


மகள்: அப்போ எமதர்மராஜாதான் பாவம் செய்தாருன்னு சொல்லு!


—உதய்.



மாலியும் ஜூலியும் 11

கருத்து: எம். ஆர். ராஜன்





பிருந்தாவனக் கவியரங்கம்

முயல்

பட்டுப் போன்ற மேனியும்,
பளிங்கு போன்ற கண்களும்,
வெட்டி விட்ட இதழ்களும்,
விரைந்து செல்லும் கால்களும்,

கொண்ட அழகு முயலேயே
குழந்தை களே பாருங்கள்.



பச்சை இலையைத் தின்றிடும்;
பழமும் விரும்பி உண்டிடும்;
விரைத்த இரண்டு காதுடன்
விரைந்து தாவிச் சென்றிடும்.

கண்ணுக் கினிய முயலேயே
கண்டு மகிழ்வீர் அனைவரும்.

—மீ. ஸ்ரீதேவி (3114), திருச்சி—13.



என் தெய்வம்

காலையில் எழுப்பிக் கண்களைத் துடைத்துக்
கனிவுடன் தூக்கம் போக்கிடுவாள்.
பாலும் அன்னமும் கலந்தே தந்து
பள்ளிக்கு என்னை அனுப்பிடுவாள்.
தவறுகள் செய்தால் உடனே திருத்திச்
சாந்தமாய் அறிவுரை கூறிடுவாள்.
கலங்கிநான் அழுதால் கவலையைப்
போக்கிக்
கண்ணீர் தன்னைத் துடைத்திடுவாள்.

மாலையில் வீடு திரும்பிடும் என்னை
மகிழ்வுடன் அள்ளி அணைத்திடுவாள்.
அமுதத் தமிழில் அருமைக் கதைகள்
அழகாய்த் தினமும் கூறிடுவாள்.
அயர்வுடன் கண்கள் சோர்ந்திட உடனே
அன்புடன் படுக்கையில் கிடத்திடுவாள்.
அனுதினம் என்னைக் கனிவுடன்
வளர்க்கும்
அருமைத் தாயே என்தெய்வம்!


—எஸ். சுபகணேசன் (628),
திருச்சி—2.

இளந்தளிரே!

நாட்டைக் காக்கும் நல்லவராய்
நாளும் வலிமை மிக்கவராய்
உலகம் புகழும் உத்தமராய்
உருவா கிடுவோம், இளந்தளிரே!

அகிலம் போற்றும் அன்பர்களாய்
ஆக்கம் தந்திடும் அறிஞர்களாய்
இரக்கம் கொண்ட நெஞ்சினராய்
இருந்திடு வோம்நாம், இளந்தளிரே!

—வி. அபிராமி (6957), வேலூர்.





உலகைச் சுற்றுவோம்!

உல்லாச மாக ஊர்தியில் என்னுடன்
உலகைச் சுற்றிட வாருங்கள்.
அகில உலகமும் போற்றிடு கின்ற
அமெரிக் காவைப் பாருங்கள்.
அருமை! அருமை! அருமை தானே!
அத்தனை காட்சியும் அற்புதமே!
சட்டென ஊர்தியில் ஏறிடு வோமே,
ஜப்பான் நாட்டை அடை வோமே.

முயற்சியி னாலே அற்புதம் செய்து
முந்திடும் நாட்டைக் காண்போமே.
நாமுமே நல்ல முயற்சியி னாலே
நலன்கள் செய்வோம் நாட்டினிலே.
நலன்கள் செய்து நாட்டை உயர்த்திக்
காட்டிடு வோமே தோழர்களே!

—ஏ. ஆர். சுந்தர் (340), திருச்சி—6.


புயலே, திரும்பு!

புயலே, புயலே திரும்பிப்போ.
புண்ணியம் உனக்குப் பலசேரும்.
வயல்கள் எல்லாம் அழியாமல்
வாழ நீயும் வழிசெய்வாய்.

வெள்ளமும் நீயும் உடன்பிறப்போ?
வேண்டாம், வேண்டாம், ஒடுங்கள்.
கள்ளமில் லாத உள்ளங்கள்
கஷ்டப் படவே செய்யாதீர்!

குடிசை யெல்லாம் அழிந்திட்டால்
குடும்பம் எங்கே நடத்துவதாம்?
படிப்பும் கெட்டுப் போகாதோ?
பறந்திடு புயலே, மறைந்திடுநீ!

—நெ. அன்புச் செழியன் (1727),
பண்ணுருட்டி.





ரகுவின் அம்மா

விஜயா வின்சென்ட்

டங்... டங்... டங்...

பள்ளிக்கூட மணிசப்தம் மதியம் சாப்பாட்டு வேளையை நினைவுபடுத்தியது.

நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் ரகு மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து தானும் வெளியே ஓடி வந்தான்.

ஆங்காங்கே மரத்தடி நிழல்களில் முடிச்சு முடிச்சாகப் பிள்ளைகள் அமர்ந்து தங்கள் சாப்பாட்டுப் பொட்டலத்தைப் பிரிக்க ஆரம்பித்திருந்தனர்.

அப்பொழுதுதான் ரகுவிற்கு நினைவு வந்தது, காலையில் பள்ளிக்குப் புறப்படும் போது அம்மா கட்டிக் கொடுத்த சாப்பாட்டுப் பொட்டலத்தை வீட்டிலேயே மறந்து வைத்துவிட்டு வந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது.

என்ன செய்யலாம் என்று பசிக்கு இரைபோட அவன் நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில்... ''ரகு கண்ணா!'' என்று அவன் பின்னாலிருந்து ஓர் அன்புக் குரல் கேட்டது.

ரகு திரும்பிப் பார்த்தான். அவனுடைய அம்மா கையில் சாப்பாட்டுப் பொட்டலத்தோடு நின்று கொண்டிருந்தாள்.

ரகுவிற்குக் கோபம் வந்தது...

''அம்மா! எத்தனை தரம் சொல்றது, நீ ஸ்கூலுக்கு வராதேன்னு...? ஓம் மூஞ்சியை என் பிரண்ட்ஸ் எல்லாம் பார்த்தா என்னை ஏளனமா சிரிப்பாங்க...''

''டேய் ரகு கண்ணா, நீ சாப்பாட்டிற்கு மதியம் என்ன செய்யப் போறியோன்னுதான் சாப்பாடு எடுத்துக்கிட்டு வந்தேன். சரி, இதைச் சாப்பிடு. நான் இப்பவே போயிடறேன்...''

''சீக்கிரம் போ அம்மா...''

ரகு சாப்பாட்டுப் பொட்டலத்தை விருட்டென்று பறித்துக் கொண்டு மரத்தடிக்குத் தன் சிநேகிதர்களுடன் கலந்து சாப்பிடுவதற்கு ஓடினான்...

ரகுவின் அம்மா மங்களம் சற்று நேரம் நின்று மகன் போகும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள். வீடு திரும்பினாள்.

அவள் இதழ்கள் மென்மையான புன்னகையை உதிர்த்தன. ரகுவின் மீது அவளுக்கு எள்ளளவும் கோபம் ஏற்படவில்லை....

'குண்டும் குழியுமாய்த் தீக்காயத் தழும்புகள் நிறைந்த விகாரமான முகத்தை எந்தக் குழந்தைதான் விரும்பும்? அதனால்தான் ரகு அப்படிப் பேசுகிறான்' என்றுநினைத்தபடி வீடு திரும்பினாள்.

அன்று வேலைக்காரி வராமல் சதி செய்து விட்டாள். இல்லாவிட்டால் அவளிடமே சாப்பாட்டுப் பொட்டலத்தைக் கொடுத்து அனுப்பி இருக்கலாம்.

ரகு சில நேரங்களில் மங்களத்தின் மடிமீது அமர்ந்து கொண்டு சொல்லுவான்.

"அம்மா, இன்னைக்கு சதீஷின் அம்மா எங்க ஸ்கூலுக்கு வந்தாங்க... என்ன அழகாய் இருக்காங்க தெரியுமா?... எனக்குக் கூட சாக்லேட் தந்தாங்க..." என்பான்.



மற்றும் ஒருநாள்...

"அம்மா... பாபுவோட அம்மா ஸ்கூலுக்குப் பீஸ் கட்ட வந்தாங்க. அவுங்களும் அழகாக இருக்காங்க... நீ மட்டும் ஏம்மா இப்படி இருக்கிறே....?"

அவன் மழலைமொழியில் ஏக்கம் பிரதிபலிக்கும்... அந்தப் பிஞ்சு உள்ளத்தின் கேள்விகளுக்கு விடை கூற முடியாமல் புன்னகையே பதிலாகக் கொடுத்துப் பேச்சைத் திசை திருப்புவாள் மங்களம்.

அன்று பள்ளிக்கூடம் சீக்கிரமே முடிவடைந்து விட்டது... ஆசிரியர்களின் கூட்டம் இருப்பதாகக் கூறிச் சீக்கிரமே வீட்டிற்கு விட்டுவிட்டார்கள்...

ரகுவிற்கு ஏகக் குஷி... அப்பா நேற்றுப் புதிதாக வாங்கிக் கொடுத்த ரயில் பொம்மை அவன் மனக்கண் முன் வந்து விளையாடியது. வேகமாக வீட்டை நோக்கி ஓடினான்...

வீட்டினுள் அப்பாவின் குரலும் வேறு ஒரு புதியவரின் குரலும் மாறி மாறிக் கேட்டுக் கொண்டிருந்தன. குழந்தைகளுக்கே உரித்தான லேசான பயம் அவனைக் கவ்விக் கொள்ள வாசல்படியிலேயே நின்றான்.

அவர்கள் பேசுவது அவன் காதுகளில் தெளிவாக விழுந்தது. அவர்களின் பேச்சு தன் அம்மாவைப் பற்றியது என்று அறிந்ததும் என்ன பேசுகிறார்கள் என்ற ஆர்வத்தில் வாயில் நிலைப்படியிலேயே சாய்ந்து கொண்டு நின்றான் ரகு...

"ராஜாராம், மங்களத்தின் முகத்தில் எப்படித் தீக்காயம் ஏற்பட்டது...? என்ன அழகான ரோஜா முகம்! இப்படிக் கருகிப் போயிருக்கே?"

"சித்தப்பா... ரகுவிற்கு அப்போ இரண்டு வயசிருக்கும்... அப்போது தானே நீங்களும் வேலை மாத்தல்னு டெல்லிக்குப் போனீங்க...?"

"ஆமா... அதுக்கப்புறம்தான் நடந்துச்சா...?"

"ஆமா சித்தப்பா... ரகு பசியிலே அழுதுக்கிட்டிருந்தான்... மங்களம் பால் காய்ச்சறதுக்காக அடுப்படிக்குப் போனா... பின்னால், ரகு வர்றதை அவ பார்க்கல... அவனும் அழுகையை நிறுத்திட்டு அவ பின்னாலேயே நின்னுக்கிட்டிருந்தான்...

"மங்களம் அவசரமா ஸ்டவ்வைப் பத்த வச்சு பாலை அடுப்பில் ஏத்தினா... விபத்துன்னாலே என்னன்னு தெரியாத ரகு எரிஞ்சிக்கிட்டிருந்த ஸ்டவ்வை இழுத்துட்டான்... அவன் இழுத்த வேகத்தில் தன்னைச் சுதாரிச்சிக்கிட்ட மங்களம், குழந்தையைக் காப்பாத்த அவனை இழுத்து, அதே வேகத்திலே தள்ளிட்டா... குழந்தை ஒரு காயங்கூட

இல்லாமத் தப்பிச்சிருச்சு. ஆனால்... ம்ம்... அப்புறம், நம்ம போறாதகாலம். அது பம்ப் ஸ்டவ் ஆனதாலே, விழுந்த வேகத்துலே வெடிச்சிருச்சு. அந்தத் தீப்பிழம்பு மங்களம் முகத்தைப் பதம் பார்த்திடுச்சு.''

ரகுவிற்கு அதற்குமேல் அங்கு நிற்க முடியவில்லே. மென்மையான அவன் உள்ளம் விம்மி மௌனமாக அழுதது.

''இப்படிப்பட்ட பாசமுள்ள அம்மாவையா நான் திட்டினேன்? இனிமேல் திட்டவே மாட்டேன். என் அம்மாதான் அழகு. என்னைக் காப்பாத்தின அம்மாதான் என் தெய்வம்.''

''அம்மா...!'' என்று உரத்த குரலில் கூவிக் கொண்டே வீட்டினுள் பிரவேசித்தான்.

''ரகுக்கண்ணு...!'' என்று மங்களம் அன்புடன் அழைத்து, அவனைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டாள்.

அன்று ரகுவிற்கு அம்மாவின் அணைப்பு வெகு சுகமாக இருந்தது!...

ஏன் போட்டேன்?

''என்னங்க இது! நாளைக்கு உங்க பையனைத் திருப்பதிக்குக் கூட்டிக்கிட்டுப் போய் மொட்டை போடுறதாச் சொன்னீங்க, இன்னிக்கே அவனுக்கு மொட்டை அடிச்சிட்டீங்களே!''

''எனக்கு ரொம்ப மறதிங்க. அதனாலே நாளைக்குத் திருப்பதிக்குப் போய் மொட்டை போட மறந்தாலும் மறந்திடுவேன்னு இன்னிக்கே போட்டுட்டேன்.''

-டி. எல். ரெட்டி

உங்களுக்குத் தெரியுமா!

கோவி




சிகப்பு, கறுப்பு உடை:

பிரான்சின் ஒளவ் பள்ளத் தாக்கில் சொத்துக்குத் தனி வாரிசான பெண் மட்டுமே சிவப்பு உடை அணிவாள். அண்ணன் தம்பி, அக்காள் உடைய பெண் கறுப்பு உடை அணிய வேண்டும்.




டெக்மி ஷெரிங்:

புத்தர் பிரானின் மூன்று வழித் தோன்றல்களின் தாய் என்ற பெருமைபெற்ற டெக்மி ஷெரிங், இவரது மூத்தமகன்தான் தலாய் லாமா.



பிருந்தாவனம்





சிந்திக்கலாமா?

பூனையின் கால்களோடு, யானையின் கால்களைக் கூட்டி, ஈயின் கால்களைக் கழித்து, கோழியின் கால்களைக் கூட்டி, கிளியின் கால்களால் வகுத்து, புலியின் கால்களைக் கூட்டி, முக்காலியின் கால்களைக் கழித்தால்—

சில பிடிவாதக்காரர்கள், தாங்கள் பிடித்த ஒரு பிராணிக்கு இத்தனை கால்களே என்பார்கள். அப்படியானால் எத்தனை கால்கள்?

—கே. முரளி (3405), சென்னை—45.

விடை: 3 கால்கள்.

யாரும் இல்லாத இடம்

இமயமலைச்சாரலில் இருந்த ஒரு முனிவருக்குப் பல சீடர்கள் இருந்தார்கள். அவர் நோய்வாய்ப் பட்டு இறக்கும் நிலையில் இருந்தார். தமக்குப் பிறகு சீடர்களில் ஒருவனைத் தம் இடத்திற்குத் தேர்ந்தெடுக்க நினைத்தார்.

சீடர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாம்பழத்தைக் கொடுத்து, "யாரும் இல்லாத, யாரும் பார்க்காத இடத்தில் மாம்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு வாருங்கள்" என்றார்.

சீடர்கள் தனித்தனியாகப் பிரிந்து, மறைவான இடத்திற்குப் போய் மாம்பழங்களைத் தின்றுவிட்டு வந்தார்கள், ஒரே ஒரு சீடனைத் தவிர! அவன் மாம்பழத்துடன் திரும்பி வந்ததைப் பார்த்து, "ஏன், நீ மட்டும் சாப்பிடவில்லை?" என்று முனிவர் கேட்டார்.

"குருவே, நான் எங்கே சென்றாலும் கடவுள் என்னைக் கண்காணிக்கிறார். எனவே, நான் மாம்பழத்தைச் சாப்பிடவில்லை" என்றான். முனிவர் மகிழ்ச்சியடைந்தார். அவனையே தம் இடத்திற்குத் தேர்ந்தெடுத்தார்.

—எஸ்.கே. வெங்கடேஷ் (227), பெரியகுளம்.

நான் கேட்ட வரம்

சில தினங்களுக்கு முன்பு நான் கடவுளை நோக்கித் தவமிருந்தேன். அவர் நேரில் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். "நான் எழுதி அனுப்புவது கோகுலத்தில் வெளிவர வேண்டும்" என்று வரம் கேட்டேன்.

"அப்படியே ஆகுக" என்றார் கடவுள்.

கண்ணை விழித்துப் பார்த்தேன்.



அத்தனையும் கனவு! கனவு கனவாய்ப் போகாமல் கோகுலம் ஆசிரியர் நனவாக்குவார் என்று நம்புகிறேன்.

—எஸ். பாலமுருகன் (3445),
மதுரை—1.





அன்புப் பெயர்கள்

நாட்டுக்கு உழைத்த நல்ல தலைவர்களை மக்கள் எவ்வாறு அன்புடன் அழைத்தார்கள்?

மகாத்மா காந்தி — பாபுஜி
சி. ஆர். தாஸ் — தேசபந்து
ரவீந்திரநாத தாகூர் — குருதேவ்
பாலகங்காதர திலகர்—லோகமான்ய
அப்துல் கஃபார்கான்—எல்லைகாந்தி
இராஜகோபாலாச்சாரி — ராஜாஜி
காமராசர் — மக்கள் தலைவர்

—கே. நரசிம்மன் (7378), ஓசூர்.

ஈர வெடி

"கடைக்காரரே, இது என்ன வெடிங்க?"

"யானை வெடி தம்பி."

"ஓரே ஈரமா இருக்குதே!"

"அப்படித்தான் இருக்கும். இது நீர் யானை வெடி."

—வி. இளங்கோ (6913),
விருகம்பாக்கம்.



வாழ்த்து அட்டை

லண்டனைச் சேர்ந்த ஜான் கால் கோட் ஆர்சிலி என்பவர்தான் 1843—ஆம் ஆண்டில் முதல் முதலாக வாழ்த்து அட்டையைக் கண்டுபிடித்தார். 1870—ஆம் ஆண்டு உலகம் முழுவதும் வாழ்த்து அட்டை அனுப்பும் மரபு வழக்கத்திற்கு வந்தது.


—எஸ். சிவராஜ் (22), மன்னார்குடி.



புலி பிறந்தது!

புலியை ஆங்கிலத்தில் டைகர் (Tiger) என்று அழைக்கிறார்கள். ஆனாலும் அது ஆங்கிலச் சொல் அல்ல. பாரசீகச் சொல்! டைகர் என்பது அம்பின் பெயர். அம்பு நாணேற்றி விடும்போது மிக வேகமாகச் செல்கிறதே. அதேபோல் புலியும் வேகமாகப் பாய்வதால், டைகர் எனப் பெயரிடப்பட்டதாம்.

—நாஞ்சில் தா. சிந்துகுமார் (4764) திருவட்டாறு.



தானத்தில் சிறந்தது?

நான் என் அம்மாவிடம் 'தானத்தில் சிறந்தது எது அம்மா? ரத்த தானமா? கண் தானமா, அன்ன தானமா என்று கேட்டேன்.

"சமாதானம்தான். உலகில் சண்டை சச்சரவு இல்லாமல் எப்போது சமாதானம் நிலவுகிறதோ அப்போதுதான் மற்ற தானங்களுக்கெல்லாம் 'அர்த்தமே உள்ளது" என்றார்கள் என் அம்மா.

—நவீனானந்தகோபால் (1657), ஈரோடு—3.





ஆங்கிலக் கும்பகர்ணன்

இராமாயணத்தில் வரும் கும்பகர்ணனைப் போல் ஆங்கில இலக்கியத்திலும் ஒரு கும்பகர்ணன் உண்டு. இவன் இருபது வருடங்கள் தொடர்ந்து தூங்கினான் என்றும், அவன் தூங்கி விழித்த போது உலகமே மாறி இருக்கக் கண்டான் என்றும் சொல்லப்படுகிறது. அந்த ஆங்கில இலக்கியக் கும்பகர்ணன் பெயர் ரிப் வான் விங்கிள் (Rip Van Winkle).

—எஸ்.மாதவன் (204), திருச்சி—14.



ஆள் எங்கே?

"என்ன தம்பி, மேடையிலே யாரோ 'மைக்கிலே பேசுறது கேட்குது. ஆனால், ஆளையே காணோமே!"


"நல்லாப் பாருங்க. அவர் மைக்குக்குப் பின்னாடி ஒளிஞ்சிண்டிருக்கார்."

—எஸ்.இரமேஷ் (7713), விருதுநகர்.

பின் கோடும் ஜிப்பும்

இந்தியாவில், கடிதங்களில் முகவரி எழுதும் போது, ஒவ்வொரு ஊருக்கு, அல்லது ஒவ்வொரு பகுதிக்கும் உரிய எண்ணைக் குறிப்பிடுகிறோம். இதை 'பின்கோடு' என்று சொல்லுகிறோம். அமெரிக்காவில் பின்கோடு என்று சொல்வதில்லை. ஜிப் (Zip) என்கிறார்கள். Zonal Improvement Plan என்பதாகும்.

—த. அருள் சிவபாலன் (47),
செங்கற்பட்டு.



சங்கீதக் கட்டணம்


அரபு நாட்டு அபுநுவாஸ் மிகவும் வேடிக்கையானவர். ஒரு முறை அவருக்குச் சங்கீதம் கற்றுக் கொள்ள ஆசை வந்தது. உடனே ஒரு சங்கீத வித்வானிடம் சென்று, ''சங்கீதம் கற்றுக் கொள்ள எவ்வளவு சம்பளம் கட்ட வேண்டும்?'' என்று கேட்டார்.

அதற்கு சங்கீத வித்வான், ''முதல் மாதம் 20 வெள்ளிக்காசும் இரண்டாவது மாதம் 10 வெள்ளிக் காசும் செலுத்த வேண்டும்'' என்றார்.



''அப்படியா? சரி, நான் இரண்டாவது மாதம் வந்து 10 வெள்ளிக் காசு கொடுத்துவிட்டுச் சங்கீதம் கற்றுக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் அபுநுவாஸ்.

—சி. என். செல்வக்குமரி (2988),
கும்பகோணம்.



ஒரு புதிர்

இங்கே ஒரு புதிர். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இந்தப் புதிரைப் போடும்போது, நிறுத்தி, நிதானமாகச் சொல்லாதீர்கள்.

''வாய் பேசாத ஒருவருக்கு டூத் பிரஷ் தேவை. அதை எப்படிக் கடைக்காரனிடம் கேட்பார்?'' என்று உங்கள் நண்பனிடம் கேளுங்கள்.

நண்பன் உடனே, சைகையால் பல்லைத் தேய்ப்பது போல் வாயின் அருகிலே கையைக் கொண்டு போய் விரலை ஆட்டிக் காட்டுவான்.

''சரி, கண் தெரியாத ஒருவர் கடைக்கு வருகிறார். அவருக்குச் சீப்பு வேண்டும். எப்படிக் கேட்பார்?'' என்று அடுத்தாற்போல் கேளுங்கள். உடனே உங்கள் நண்பன் தலைவாரிக் கொள்வது போல் சைகை செய்வான்.

விடை தவறு.

கண் தெரியாதவரால்தான் வாய் திறந்து கேட்க முடியுமே! சைகை எதற்கு?

—தாயு செந்தில்குமார் (1372),
சேலம்—3.



கன்னையனுக்கு அவசரமாகக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. என்ன செய்வதென்று யோசித்தான். பொன்னையனிடம் தன்னுடைய ஒரு ஜோடிக் கடுக்கனை அடமானம் வைத்து முந்நூறு ரூபாய் கேட்கத் திட்டமிட்டிருந்தான்.

அவ்வாறே பொன்னையனிடம் சென்றான். கடுக்கன் இரண்டையும் அடகு வைத்துக் கடனையும் பெற்றுவிட்டான். அவனுக்கு மனக்கஷ்டம்தான். தன் காதில் போட்டுக் கொண்டிருக்கும் அந்தக் கடுக்கன்கள் தாத்தா காலத்திலிருந்து அவன் குடும்பத்தில் தொடர்ந்து வருபவை. அந்தக் கால மதிப்பீட்டின்படி, அப்போதே நூறு ரூபாய் பெறுமானம் உடையதாயிருந்தன. தற்போதைய மதிப்பில் சுமார் இரண்டு ஆயிரம் ரூபாயாக இருக்கலாம். ஜொலிக்கும் அந்தச் சிவப்புக்கல் கடுக்கன்களைக் கன்னையனின் தாத்தாவாகட்டும், அல்லது கன்னையனே ஆகட்டும், காதில் போட்டுக் கொண்டு, தலைப்பாகையைக் கட்டிக் கொண்டு, மண்வெட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு வரப்பு மீது நடந்து போனால் பார்க்க மிக அழகாக இருக்கும். அது என்னவோ ரங்கூன் வைரம், பர்மா வைரம் என்று ஆளுக்கொன்றாய்ப் பெயர் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வளவு பிரசித்தியான கடுக்கன்களைப் பொன்னையனிடம் போய் அடகு வைக்க நேர்ந்ததே என்று கன்னையன் எண்ணிக் கொண்டேயிருந்தான். பதினைந்து நாட்கள் ஓடிவிட்டன. கன்னையனைப் பார்க்க அவனுடைய மைத்துனன் ஓடி வந்தான். அவன் கடுக்கன்களைப் பற்றிக் கேட்டான். கன்னையன் அடகு வைத்திருப்பதாகச் சொன்னான். ''என்ன அத்தான், போயும் போயும் அந்தக் கடுக்கன்களைக் கொண்டு போயா அடகு வைப்பது? உடனே பணத்தைக் கொடுத்துத் திருப்பி விடுங்கள். நான் பணம் தருகிறேன்'' என்றான். மைத்துனன் தந்த பணத்துடன் பொன்னையன் வீட்டுக்குக் கன்னையன் போனான். இதற்கிடையில் பொன்னையன் தினமும் அந்தக் கடுக்கன்களைத் தன் காதுகளில் போட்டுப் பார்த்து அழகு பார்த்துக் கொண்டிருந்தான். இவ்வளவு சீக்கிரம் கன்னையன் கடுக்கனை மீட்க வந்து விடுவான் என்று பொன்னையன் நினைக்கவேயில்லை. 'கன்னையனால் பணத்தைத் திருப்ப முடியாது. அதனால் கடுக்கனை மெதுவாக நமதாக்கிக் கொள்ள வேண்டும்' என்று அவன் திட்டமிட்டிருந்தான். எனவே, இப்போது கன்னையனைப் பார்த்ததும், பொன்னையனுக்கு அதிர்ச்சியாயிருந்தது.

''கன்னையா, என்னிடம் பணம் கடன் வாங்கிப் போன யாரும் இவ்வளவு சீக்கிரம் மீட்டுக் கொண்டதில்லை. நீ மீட்டுக் கொள்கிறாய். ரொம்ப சந்தோஷம். ஆனால், ஒரு சின்ன உபகாரம் செய்ய வேண்டும். இந்தக் கடுக்கன்களைப் போல் எனக்கும் ஒரு ஜோடிக் கடுக்கன் செய்து போட்டுக் கொள்ள ஆசை. எனவே ஒரு கடுக்கனை நீ இப்போது எடுத்துக்

கொண்டு போ. இன்னென்றை நான் புதுக் கடுக்கன் செய்ய ''மாதிரி''யாக வைத்துக் கொள்கிறேன். கடுக்கன் செய்து முடித்ததும் திருப்பித் தந்து விடுகிறேன்'' என்றான். கன்னையனும் அவன் பேச்சை நம்பி, ஒரு கடுக்கனைப் பொன்னையனிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றுடன் வீடு திரும்பினான். பத்து நாளாயிற்று — இருபது நாளாயிற்று — ஒரு மாதம் ஆயிற்று. ஆறு மாதங்களும் ஆயின. நடையாய் நடந்தான் கன்னையன். பொன்னையன் கடுக்கனைத் தருவதாக இல்லை; ''என் கடுக்கனைத் திருப்பித் தராது போனால், நான் பஞ்சாயத்தில் வழக்குத் தொடருவேன்'' என்றான் கன்னையன்.

பொன்னையன் போக்கிரியல்லவா? அவன் முந்திக் கொண்டான்.

கன்னையன் ஏதோ கடுக்கன் வாங்கப் போவதாகத் தன்னிடம் சொன்னதாகவும், அதற்காகத் தன் கடுக்கனை மாதிரிக்குக் கேட்டதாகவும்,வாங்கிக் கொண்டு போய் ஆறு மாதமாகியும் திருப்பித் தராமலிருப்பதாகவும், வழக்குத் தொடுத்தான் பொன்னையன்! பஞ்சாயத்துக்காரர்கள், பெரிய மனசு பண்ணி அதனை விசாரித்துத் திரும்பப் பெற்றுத் தருமாறும், பொன்னையன் வேண்டுகோள் விடுத்தான்.

வழக்கு விசாரணைக்கு வந்தது.

கன்னையன் வழக்கு மன்றத்தில் 'ஓ'வென்று அழுதுவிட்டான். ''இது பெரிய மோசடி'' என்று கூறித் தான் அடகு வைத்தது முதல் வழக்காட வந்தது வரை எல்லா விவரங்களையும் பஞ்சாயத்தாரிடம் கூறினான்.

சின்னானை அழைத்தார்கள். சின்னான் விசாரித்தான்.இருவரிடமிருந்தும் தனித் தனியாய்க் கடுக்கன்களை வாங்கிப் பஞ்சாயத்தார் முன்னிலையில் வைத்தான். பொன்னையனிடம் கேட்டான்சின்னான்.

''கன்னையனிடம் நீங்கள் கொடுத்த கடுக்கன் வலது காதுக் கடுக்கனா— இடது காதுக் கடுக்கனா?''

திருதிருவென்று விழித்தான் பொன்னையன். விழிப்பதனால் தீர்ப்பு எங்கு தனக்குப் பாதகமாகி விடுமோ எனப் பயந்து ''வலது காதுக் கடுக்கன்'' என்றான்.

''இந்த இரண்டில் அடையாளம் காட்ட முடியுமா?'' என்றான்,சின்னான்.

''முடியும்'' என்று சொல்லி 'பட்' என்று அவற்றில் ஒரு கடுக்கனை எடுத்துக் காட்டினான்.

நாட்டாண்மையார், பஞ்சாயத்துக் காரர்களை நன்றாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னான் சின்னான். அவர்கள் காதில் ஏதோ கிசுகிசுத் தான்.

இப்போது கன்னையனைக் கேட்டான்.

''பொன்னையனிடம் அடகு வைத்ததாகவும் அவர் உம்மிடம் நீர் நகையை மீட்ட போது ஒரு கடுக்கனை வைத்துக் கொண்டதாகவும் —தனக்கு ஒரு கடுக்கன் அதே போல் செய்து கொள்ள மாதிரியாய் வைத்துக் கொண்டு நகை செய்தபின் திருப்பித் தருவதாகவும் சொன்னதாகக் கூறுகிறீர். இப்போது சொல்லும் அவர் தன்னிடம் நிறுத்தி வைத்துக்கொண்ட கடுக்கன் வலது காதுக் கடுக்கனா? இடது காதுக் கடுக்கனா?''

கன்னையன் பதில் சொன்னான்:


''என்னங்க இது — ஜோடிக் கடுக்கன்லே எது வலது காதுக் கடுக்கன்— எது இடது காதுக் கடுக்கன்னு பிரிச்சு அடையாளமா சொல்ல முடியும்? இல்லே, தனித்தனியா வித்தியாசமாத்தான் செய்ய முடியுங்களா? நீங்க கேட்கிறது புதுசா இருக்குதுங்களே — நான் அடகு வைச்சது ரெண்டு. திருப்பித் தருகையிலே — ஒண்ணை நிறுத்தி வைச்சுக்கிட்டு, அதை நகை செய்தபின் தர்றேன்னாரு. நான் நெசம்னு நம்பினேன் — அக்கிரமம் செய்துட்டாரே!''—

பட்டென்று தீர்ப்புச் சொன்னான் சின்னான். ''இரண்டு கடுக்கன்களையும் எடுத்து இவை இரண்டும் உம்முடையதுதான். சந்தேகமில்லே. பொய் சொன்னது — ஏமாற்றியது பொன்னையனே' என்று கூறிக் கடுக்கன்களைக் கன்னையனிடம் தந்தான் சின்னான்: பிறகு சொன்னான்:

''திடுமென்று கேள்வி கேட்டால் உண்மையானவனிடமிருந்து எவ்வித பயமுமில்லாமல் தெளிவான உண்மையான பதிலே வரும். ஆனால், பொய் சொல்பவன் சற்றுத் தாமதித்தும் கூட, பொய்யைச் சொல்வதானல் உளற வேண்டி வரும். நீங்களே சொல்லுங்கள். காதிலே போடும் கடுக்கனில் வலது கடுக்கன் — இடது கடுக்கன் என்று எப்படி அடையாளம் காட்ட முடியும்? ஒரு முறை கழற்றி வைத்து விட்டு இயற்கையாக மறுமுறை போடும் போது வலது என்றும், இடது என்றும் சொல்வது இயற்கைக்கு மாறானது''.

சின்னானின் இந்தத் தீர்ப்புக் கண்டு அசந்து போனார்கள் அத்தனை பேரும்!

ஒரு புராதன விளையாட்டு



மகாபாரதத்தில் வில் வில் விஜயன் பெருமைகளை அறிவோம். குறித்த இலக்கைக் குறித்து வில் விற்பன்னர்கள் அம்பை எய்து பல சுற்றுகளுக்கு ஆடுவார்கள். ஒவ்வொரு சுற்றிலும் எத்தனை அம்புகள் எத்தனை தூரத்திலிருந்து எய்ய வேண்டுமென்று கணக்குண்டு. குறிப்பிட்ட இலக்கைச் சென்றடைந்த அம்பு எண்ணிக்கை பெறும்.

வில் அம்பு போட்டிகளில் ஆடவர்கள் 90 மீட்டர், 70 மீட்டர், 50 மீட்டர், 30 மீட்டர் தூரத்திலிருந்து அம்பை எய்வார்கள். பெண்மணிகளும் அம்பெய்யும் போட்டிகளில் ஈடுபடுவர். போட்டியாளர்கள் தனிப்படவும், குழுவாகவும் கலந்து கொள்வர். தேசிய குழுக்களில் மூன்று வில் வீரர்கள் அடங்கி இருப்பார்கள். எந்த அம்பு இரு வர்ணமுள்ள பிரிவுப் பகுதியில் தொட்டாலும் அதிக எண்ணிக்கை வழங்கப்படும். தவறான பகுதியில் அம்பு தொட்டால் செல்லுபடியாகாது. தரையைத் தொட்ட அம்பு மறுபடி இலக்கை எய்தினாலும் எண்ணிக்கை இல்லை. அம்புகளைப் பிடுங்கி அவை துளைத்த இடங்களில் மார்க் செய்வார்கள். இலக்குகள் வைக்கோல் சணலினால் தேய்க்கப்பட்டிருக்கும். அதன் மேல் பேப்பர் துணி ஒட்டப்பட்டிருக்கும். இலக்கில் பத்து எண்ணிக்கை பிரிவுகள் குறிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வில்லாளியும் இலக்கை நோக்கி 3 அம்புகளை எய்ய இரண்டரை நிமிஷங்கள் அவகாசம் தரப்படும். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அபாய அறிகுறி காலம் கடத்தலை அறிவிக்கும். குறித்த நேரம் கடந்து எய்யப்படும் அம்புகளுக்கு எண்ணிக்கை இழக்க நேரிடும். நேரக் கணக்கு வண்ண விளக்காலோ விசில் சப்தத்தாலோ அறிவிக்கப்படும்.

தன்ரமணி

குறிப்பிட்ட சுற்றுக்களில் எந்த வில்லாளி அதிக எண்ணிக்கை எடுக்கிறாரோ, அவரே வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். தலைசிறந்த வில்லாளிகள் எஃகு விற்களோ, ஃபைபர் கிளாஸ் விற்களோ, பிளாஸ்டிக் விற்களோ, மரத்தாலான விற்களோ பயன்படுத்துவார்கள். அம்புகள் சாதாரணமாக அலுமினிய கலவையில் தயாரிக்கப்படும். வில்லாளிகள் தங்கள் வில்லின் இயல்பிற்கேற்ப அம்புகளின் நீளம், கனம், உறுதி வேறுபடும். ஒரு அம்பின் கனம் 28 கிராம் இருக்கும்.

1949—ஆம் ஆண்டிலிருந்து 11 ஆண்டுகள் ஃபோர்டு பிரிட்டனின் சேம்பியனாக விளங்கினார். அவர் செல்டன் ஹாம் போட்டியில் 1250 பாயின்ட்டுகள் எடுத்தது ஒரு ரிக்கார்ட். விற்கலையின் அபிவிருத்திக்கு அவரது சேவை மகத்தானது. பெண்களில் மிஸ் லே தலைசிறந்த வில் விற்பன்னர். பிரிட்டனில் அவர் 23 தடவை சாம்பியன் பட்டம் பெற்றது தனிச் சிறப்பு.

உலகில் நான்கு விருதுகளை அடைந்தவர் ஸ்வீடனைச் சேர்ந்த ஹான்ஸ் டியட்ஸன். பெண் வில்லாளிகளில் போலீஷ் நாட்டு வில்லாளி ஜெனீனா குர்க்வஸ்கா ஏழு உலக விருதுகளை அடைந்திருக்கிறார்.

க்ராண்ட் நேஷனல் வில்லாளர் கழகம் 15 அடிப்படை சுற்றுக்களைப் போட்டிக்கு வைத்துள்ளது.

1545—ஆம் வருஷம் பள்ளி ஆசிரியர் ரோகர் ஆஷாம் வில் வித்தை பற்றிச் சட்டதிட்டங்கள் அடங்கிய நூலைத் தயாரித்திருக்கிறார். இவர் எலிஸபெத் ராணிக்கும், ஆறாம் எட்வர்ட்டுக்கும் ஆசிரியர். அவர் வில் வித்தைக்கான 5 குறிக்கோள்களை அறிவித்துள்ளார். நவீன காலத்தில் வில் வித்தை நுணுக்கங்கள் 7 வகைப்படும்.

வில் வித்தையில் மிகப் பிரபலமான விளையாட்டு (Field Archery) இந்தப் போட்டியில் வில்லாளிகள் கரடுமுரடான மைதானத்தில் வைக்கப்பட்டுள்ள மிருக உருவங்களின் மேல் அம்பெய்ய வேண்டும்.







(இதைப் படிக்கிறவர்கள் நாடகத்தின் பெயரோடு, நாடகத்தை எழுதியவரின் பெயரையும் தயவு செய்து சேர்த்துப் படிக்க வேண்டாம் —த.ம.)

* * *

(ஜன்னலுக்கு அருகில், நாற்காலியில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருக்கிற அப்பா, ஏதோ நினைப்புடன்சட்டெனநிமிர்ந்தார்.

அப்பா: பாக்கியம்! பாக்கியம்! பாக்...

(சோப்புக் கட்டியும், சேலையுமாகக் கிணற்றடிக்குப் போய்க் கொண்டிருக்கிற அம்மா, அப்பாவின் குரலைக் கேட்டதும் சரேலெனப் பாய்ந்தோடி வருகிறாள்.

அம்மா: என்னாங்க, கூப்பிட்டீங்களா...?

அப்பா: கூப்பிட்டீங்களான்னு கேக்கறே...? கூப்பிட்டேனா, கூப்பிடலையா—ன்னு சந்தேகம் வேறேயா...? கழுதை மாதிரி கத்தோ கத்துன்னு கத்தறேன்...

அம்மா: அப்படியெல்லாம்கத்தாதீங்க...

அப்பா: ஏன்?

அம்மா: கழுதையைக் காணாமல் அலையற எந்தச் சலவைத் தொழிலாளியாச்சும் நம்ம வூட்டுக்குள்ளே நுழைஞ்சுடப் போறானேன்னு சொல்றேன்...!

அப்பா: (ஆத்திரமாக) அடச்சீ கழுதே!... வாயை அடக்கிப்பேசு.. ஆமாம்... அவன் வந்தானா...?

அம்மா: யாருங்க ..? அந்த மளிகைக் கடைக்காரன்தானே...? ஓ... வந்தானே! ஏழெட்டு நாளா வந்து வந்து போய்க்கிட்டிருக்கானே...!

அப்பா: (எரிச்சலுடன்) நான் ஒன்று கேட்டால், நீ ஒண்ணு சொல்றியே...! அவன் வந்துக்கிட்டிருக்கான், இவன் வந்துக்கிட்டிருக்கான்னு சொல்லி என் ஆத்திரத்தைக் கிளறாதே!... உன் அருமை மகன் ஞானம் வந்தானான்னு கேட்டால்...?

அம்மா: ஞானத்தையா கேட்டீங்க...? அந்த மண்டுப் பயல்...

(தெரு வாசல் படி ஏறி வரும் ஞானத்தைப் பார்த்ததும்—)

இதோ வரானே, அந்த மண்டு!

(அறையின் வாசலுக்கு வந்து சோர்வுடன் நிற்கிற ஞானத்தைப் பார்த்து—)

ஏண்டா, மண்டு! காலையிலே எங்கேடா போய்ச் சுத்திட்டு வர்றே...?

அப்பா: (சற்றுக் கோபமாக) ஏழரை மணிக்குப் போனவன், ஒன்பது மணிக்கு வர்றியே! இதோ... பக்கத்துலே இருக்கிற தம்புச் செட்டித் தெருவுக்குப் போய் வர்றதுக்கு. இத்தனை நேரமா...?

ஞானம்: (சலிப்புடன்) அங்கேயும் இங்கேயுமா அலைஞ்சு திரிஞ்சு காலெல்லாம் வலியாய் வலிக்குது!..

அப்பா: (புரியாமல்) ஏன் அலைஞ்சே?.. எதுக்காகத் திரிஞ்சே...? ம்...?

ஞானம்: ஹூம்!... நீங்க சொல்லி அனுப்பிய அந்தத் தெரு...

அப்பா: நான் அந்தத் தெருவுக்கிட்டச் சொல்லி அனுப்பலியே! உன் கிட்டத்தான்...



மாஸ்கோவில் இந்திரா பள்ளி

மாஸ்கோ நகரில் உள்ள சிறந்த பள்ளிக்கூடத்துக்கு 'இந்திராகாந்தி பள்ளி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கும், இந்திரா காந்திக்கும் ஏற்கெனவே தொடர்பு உண்டு.

எப்படி?

இப்பள்ளிக்கு இந்திரா காந்தி சில ஆண்டுகளுக்கு முன்பு பல பொம்மைகளைப் பரிசாக அனுப்பி வைத்தார்.

இங்கு, இந்தியும் உருதும் 1976—ஆம் ஆண்டிலிருந்தே போதிக்கப்படுகிறது. மற்ற பாடங்களுடன் புகழ் பெற்ற இந்தியத் தலைவர்களைப் பற்றியும் தனி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன!

ஞானம்: ஆமாப்பா... என்கிட்ட சொல்லிய அந்தத் தெரு, இந்த மெட்ராஸ்லே, எந்த மூலை முடுக்கிலேயும் கிடையலே... கிடையாதாம்!

அப்பா: (ஆத்திரமாக) என்னடா சொன்னே...? இந்த மெட்ருகலே, தம்புச் செட்டித் தெருவே...

ஞானம்: இல்லே, இல்லே, இல்லேன்னு தான்...

அப்பா: சொன்னுங்க. நீ, ஆமாம், ஆமாம்—னு தலையாட்டிக்கிட்டு வந்துட்டே, அப்படித்தானே...? போடா மண்டு! எவன் எவனோ எங்கே எங்கேயோ அலைஞ்சு திரிஞ்சு, புதுப் புது மண்டலமாகக் கண்டுபிடிக்கிறானுங்க! நீ என்னடான்னு... இதோ... ரெண்டு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற, ராயபுரம் வாராவதிக்கு நேர் தெற்கிலே இருக்கிற...

ஞானம்: நான் அங்கேதாப்பா போனேன்... போய்... ஒரு கடைக்காரர்கிட்ட, இதுதானே தம்புச் செட்டித் தெரு?—ன்னு கேட்டேன். அந்தக் கடைக்காரரு, இது இல்லேன்னு சொன்னாரு. அப்புறம், இந்தத் தெருவோட பெயர் என்ன—ன்னு கேட்டேன். அவரு, தெரு மூலையிலே சுவத்துலே அடிச்சு வைச்சிருக்கும், போய்ப் பாருன்னாரு. போய்ப் பார்த்தேன். சுவத்துலே அடிச்ச வச்சிருக்கிற எனாமல் போர்டுலே, 'தம்பு'—ன்னு போட்டிருக்கு. அப்புறம், தார் பூசியிருக்கு. அதுக்கப்புறம் தெரு—ன்னு போட்டிருக்கு ஓ!... இது தம்பு தெருவா? அப்படின்னு தம்புச் செட்டித் தெரு எங்கே இருக்கும்...?னு யோசிச்சுக்கிட்டே...

அம்மா: தெருத் தெருவா அலைஞ்சியாக்கும், போடா மண்டு!...

(எனச் சிரித்தவாறே போகிறாள்.)

அப்பா: (சிரிப்பும், எரிச்சலுமாக) ஹூம்!... நம்ப அரசாங்கம், ஜாதிகளை ஒழிக்கப் போறேன்னு, தெருப் பெயர்ப் பலகைகளிலே இருக்கிற ஜாதிப் பெயரிலே தார் பூசி வைச்சிருக்குது. அதைப் புரிஞ்சிக்காமல்... ஏண்டா, உன் மண்டையிலே என்னடா இருக்கு...?

ஞானம்: அன்னிக்கு ஒரு நாள், ஸ்கூல்லே கணக்கு வாத்தியார் சொன்னாரு...

அப்பா: என்னன்னு சொன்னாரு...?

ஞானம்: உன் மண்டையிலே களி மண்ணுதான்...

அப்பா: சாதாரணக் களி மண்ணு இல்லேடா... உன்னைப் படைச்ச கடவுள் என்னவோ ஞாபகத்துலே உன் மண்டைக்குள்ளே அசல் சீமைக் களி மண்ணைப் போட்டு ரொப்பி வைச்சிருக்கான்! ஹூம்!... கிரேட் அலெக்சாந்தர், கிரேட் பிரிட்டன்னு சொல்லுவாங்களே, அந்த மாதிரி, நீ ஒரு கிரேட் மண்டு!...

(எனக் கோபாவேசத்துடன் தாவிய நொடியே, அங்கிருந்து ராக்கெட் வேகத்தில் பறக்கிறான், மண்டு—இல்லை, ஞானம்!)

* * *

(ஒன்பதாம் வகுப்பில் கணக்குப் பாடம் நடந்து கொண்டிருக்கையில்—)

ஆசிரியர்: ஞானம்...

ஞானம்: சார்...

(என்றவாறே எழுந்து நிற்கிறான்.)

ஆசிரியர்: பின்னம் என்றால் என்ன?

ஞானம்: பின்னம்—ன்னு... வந்து சார்... அது வந்து சார்... அது ஒரு சின்னம்...

ஆசிரியர்: என்னடா சொன்னே...? பின்னம்—ன்னு சின்னமா...? இப்ப வீங்கப் போகுது உன் கன்னம்!

ஞானம்: அது உங்க கைவண்ணம்!

(மாணவர்கள் சிரிக்கிறார்கள்.)*

ஆசிரியர்: ம்... பதினாறு—பதினெட்டு—இவ்வெண்களைத் தகு பின்னமாகவும், தகா பின்னமாகவும் சொல்...

ஞானம்: என்னையா சார் கேக்கறீங்க...?

ஆசிரியர்: ஆமாம், உன்னைத்தான்...

(என்னையே கேட்டுக் கேட்டுக் குடைகிறாரே!... கணக்குப் பாடத்தைக்கிழிகிழின்னு கிழிச்சுப்பிட்டு, மத்திய அரசாங்கத்துலே நான் நிதி மந்திரியாகப் போகப் போறதா நினைச்சுக்கிட்டு — என்று ஏதேதோ எண்ணிக் குழம்பித் தவித்தான் திடீரென்று)

ஞானம்: நெக்ஸ்ட்!

ஆசிரியர்: (திடுக்கிட்டு) என்னடா, நெக்ஸ்ட்...?

ஞானம்: இல்லே சார்... வந்துசார்... ஒரு மாணவன் பதில் சொல்லத் தெரியாமல் முழிச்சதும், உடனே அடுத்த மாணவனைப் பார்த்து, நெக்ஸ்ட்—டுன்னு சொல்லுவீங்களே, உங்களுக்கு எதுக்குச் சிரமம்னு நானே சொல்லிட்டேன் சார்...

(மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியரும் குலுங்கிச் சிரித்த பிறகு—)

ஆசிரியர்: அட மண்டு...! நீ சாதாரண மண்டு இல்லேடா, சூப்பர் மண்டு!... நீ கிளாஸ்லே இருந்தால், கணக்குப் பாடம் நடக்காது. காமெடியாத்தான் இருக்கும்! ஆகவே, மரியாதையா...உன் களி மண்ணு மண்டையிலே ஒரு குட்டு வைச்சு...

ஞானம்: குட்டு வைக்கிறதுக்கு மரியாதை எதுக்கு சார்... மண்டையிலே சொட்டை விழாமல் குட்டு வைச்சாப் போதும்...

(வகுப்பில் சிரிப்பு ஒலி குலுங்குகிறது.)

ஆசிரியர்: சரி... நீ வகுப்பை விட்டு வெளியே போ...

ஞானம்: வெளியே போய்...?

ஆசிரியர்: வெளியே போய்... ஸ்கூல் பியூனிடம் ஒரு அரிவாளை வாங்கிக் கொண்டு போய்... ஸ்கூல் தோட்டத்திலுள்ள தென்னை மரத்தில் ஏறி, இரண்டு இளநீர்க் காய்களை வெட்டிக் கொண்டு வா...

(ஞானம் வெகு வேகமாக வெளியேறுகிறான். சற்று நேரத்திற்குப் பிறகு, கணக்குப் பாடம் முடிந்து வகுப்பை விட்டு வெளியே வந்த படியே—

'இளநீர்க் காய் வெட்டிக் கொண்டு வரப் போன மண்டு என்னவானான்?'—என்று முனகியவாறே, தோட்டத்திற்குப் போகிறார், ஆசிரியர்.

தோட்டத்தில், தென்னை மரத்தின் உச்சியில், கொத்துக் கொத்தாகத் தொங்குகிற இளநீர்க் காய்களுக்கு அருகில், மரத்தைக் கவ்விக் கொண்டு, அப்படியும் இப்படியுமாகப் பார்த்துப் பார்த்து முழிக்கிற ஞானத்தை நோக்கி—)

ஆசிரியர்: என்னடா, மண்டு... இளநீர்க் காய்களை வெட்டித் தள்ளாமல்...

ஞானம்: (ஓங்கிய குரலில்) வந்து சார்... ஏதோ அவசரத்துலே மரத்து உச்சிக்கு ஏறிட்ட பிறகு தான்... அரிவாளைப் பத்தி ஞாபகம் வந்து...

ஆசிரியர்: அரிவாள் எங்கே...?

ஞானம்: மரத்தடியிலே வைச்சிருக்கிறேன் சார்... அரிவாளை எடுத்து வீசிப் போடுங்க சார்...

(மரத்தின் உச்சியிலிருக்கிற ஞானத்தை வெறித்துப் பார்த்த ஆசிரியர், குமுறி வந்த சிரிப்பை அடக்க முடியாமல் குலுங்கிச் சிரித்து விட்டு—)

ஆசிரியர்: மகா மண்டு! அரிவாளை எடுத்து வீசிப் போட்டால், இளநீர்க் காய்களுக்குப் பதில், உன் தலை உருண்டு விழுந்தால், என்னடா பண்ணுவது...?

(எனச் சிரித்தவாறே போகிறார்.)

* * *



கடிக்கும் காரணம்

மூட்டைப் பூச்சி 1: ஏன் இந்த வீட்டிலே நீ அந்த ஒருவரையே கடிக்கிறாய்? வேறு யாரையும் கடிக்க மாட்டேங்கறியே!

மூட்டைப்பூச்சி 2: அந்த ஒருவருக்குத்தான் என் குரூப் ரத்தம் இருக்கு.

-எடையூர் சிவமதி

(தமிழோங்கிபுரம் வீதியிலுள்ள ஸ்ரீசாயி கல்யாண மண்டபத்திற்குள்ளிருந்து, 'ஏவ்வ்...' என நெடிய ஏப்பம் விட்ட படியே வெளியே வருகிறான், ஞானம். அவனைப் பார்க்கிறார் அவ்வழியாக வந்த அவனுடைய அப்பா)

அப்பா: (திருதிருவென விழித்தபடியே) என்னடா... விருந்துச் சாப்பாட்டை விழுங்கிவிட்டு வர்றியா..?

ஞானம்: ஆமாப்பா... ரொம்ப அருமையான சாப்பாடு! ஸ்வீட்டுக்கும், பாயாசத்துக்கும் ஒரு சபாஷ் போடலாம்!... ஆனால்... அந்த கோங்கூரா சட்னி... அடேயப்பா! காரம்னு காரம்! படா காரம்! நாக்குத் துடிச்சுப் போச்சு!

அப்பா: (ஆத்திரமாக) மண்டேடா... மண்டு! எங்க ஆபீஸ்லே, என்னோட உத்தியோகம் பார்க்கிற குமாஸ்தாவோட மகனுக்குக் கல்யாணம். போய்... ஒரு ஐம்பது ரூபா அன்பளிப்பாக் குடுத்துட்டு வாடான்னு அனுப்பி வைச்சா... நீ என்னடான்னு... யாரோ ஒரு தெலுங்குக்காரர் வீட்டுக் கல்யாணத்துலே போய், வயித்தை ரொப்பிக்கிறு...

ஞானம்: இல்லேப்பா...

அப்பா: இல்லேப்பா, நொள்ளேப்பா.! அன்பளிப்புப் பணத்தைக் குடுத்துட்டியா...?

ஞானம்: இன்னும் குடுக்கலேப்பா... வந்து... உங்களோடு உத்தியோகம் பார்க்கிற அந்த நண்பருக்கு எந்த மண்டபத்துலே கல்யாணம்னு...

அப்பா: (திடுக்கிட்டு) அடப்பாவி! நண்பருக்குக் கல்யாணம் இல்லேடா!... நண்பரோட மகனுக்குக் கல்யாணம்...! ஆமாம், உன்னிடம் கொடுத்தனுப்பிய கல்யாண நோட்டீஸ் எங்கே...?

ஞானம்: நீங்கதானே சொன்னீங்க...?

அப்பா: என்னன்னு சொன்னேன்?...

ஞானம்: நோட்டீஸை எங்கிட்டக் குடுக்கிறப்ப, 'பத்திரமா வை'ன்னு சொன்னீங்களே...! அதனாலே, நோட்டீஸை உங்க மேஜை டிராயர்லே பத்திரமா வைச்சுட்டு வந்திருக்கேன்...

அப்பா: (வெறுப்புடன்) ஹூம்!... நோட்டீஸை வீட்டுலே வைச்சுட்டு, இங்கே கண்டவன் கல்யாணத்துலே போய், தொண்டை முட்ட விருந்துச் சோத்தைத் திணிச்சுக்கலாம்னு வந்தியா...? தமிழோங்கிபுரம் வீதியிலே, முருகன்—வள்ளி திருமண மண்டபத்துலே கல்யாணம்டான்னு கிளிப்புள்ளேக்குச் சொல்லிக்கொடுக்கிறப்பலே சொல்லி அனுப்பியுங்கூட... டேய் மண்டு மகனே! ஜப்பான் தேசத்துலே அமெரிக்காக்காரன் அணுகுண்டு போட்டானுமே அந்த மாதிரி உன் களி மண் மண்டையிலே...

(ஞானத்தின் தலையில் கடுங்கோபத்துடன் 'ணங்'கென்று ஒரு குட்டு வைக்கிறார்!)

ஞானம்: ஹம்ம்...ம்மா...!

(அணுகுண்டுக் குட்டு விழுந்த உச்சந் தலையைக் கையால் தாங்கியவாறே கதறுகிறான்!)

அப்பா: ஷூச்! ...கல்யாணத்துக்குப் போறப்ப கண்ணீர் சிந்தப்படாது!

(ஞானத்தின் கையைப் பற்றி



அதே மெட்டு!



பிரிட்டிஷ் தேசிய கீதம் 'ஆண்டவன் அரசரைக் காப்பாராக!' (God save the king) என்று தொடங்குகிறது. அதனை ஏற்படுத்தியவர் ஹென்றி காரி என்பவர். இந்த மெட்டிலேயே (Tune) சில நாடுகள் தங்கள் நாட்டு தேசிய கீதங்களை அமைத்துக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனி, டென்மார்க், சுவிட்சர்லாந்து ஆகிய நாட்டுத் தேசிய கீதங்கள் அந்தந்த நாட்டு மொழிகளிலே இருந்தாலும், அவர்கள் பிரிட்டிஷ் தேசிய கீத மெட்டிலேயே பாடுகிறார்கள்!

இழுத்துப் போகிறார்.)

ஞானம்: (ஆத்திரமாக) அப்படீன்னா.. கல்யாணத்துக்குப் போறப்ப, நீங்க என்னைக் கூட்டியிருக்கப் படாது...!

(தேம்பி அழுகிறான்!)

அப்பா: தலையிலே குண்டு விழுந்தாப் போல அலர்றியே, பேசாம வாடா, மண்டு!...

(அப்பாவும், மகனும் வேகவேகமாக நடந்து, முருகன்—வள்ளி திருமண மண்டபத்திற்குள் நுழைகிறார்கள். அந்த நேரத்தில், வெள்ளித் தாம்பாளத் தட்டில், நார் உரிக்காத தேங்காயில்தங்கத் தாலிக் கயிற்றைச் சுற்றி வைத்துக் கொண்டு, கல்யாணத்திற்கு வந்திருக்கிற எல்லோரிடமும் காட்டி வருகிறார், ஒரு முதியவர். எல்லோரும் அந்தத் தங்கத் தாலியைக் கனிவுடன் தொட்டுக் கும்பிடுகிறார்கள். அப்பாவும் கும்பிடுகிறார். ஞானமும் ஒரு நாற்காலியில் ஏறி நின்று கொண்டு, தங்கத் தாலியைத் தொட்டுக் கும்பிடுகையில்—

தொட்டால் விரலைப் பற்றிச் சுற்றிக் கொள்ளும் கம்பளிப் பூச்சி மாதிரி, ஞானத்தின் விரல்களில் தங்கத்தாலி' மஞ்சள் கயிற்றுடன் சுற்றிக் கொள்ளுகிறது! அந்தக் தங்கத்தாலியைப் பார்த்ததும், திகிலும் திணறலுமாகத் தவிக்கிறான், ஞானம்!

வெள்ளித் தட்டை ஏந்தி வந்த முதியவர், கல்யாண மேடையை நெருங்கியதும்,தேங்காயில் தாலியைக் காணாமல் அலறுகிறார்! கல்யாணக் கூட்டம் கதிகலங்கித் தவித்த சமயத்தில்...)

ஞானம்: இதோ! இதோ!... தங்கத் தாலி இங்கே... இங்கே...

(எனக் கூறியவாறே, நாற்காலியிலிருந்து தாவிக் குதித்தோடி, தனது அப்பாவின் நண்பரான மணமகளின் தந்தையிடம் தங்கத் தாலியைக் கொடுக்கிறான்.)

நண்பர்: (தாலியைப் பெற்ற மகிழ்ச்சியுடன்) தம்பி, நீ யாருடைய மகன்...?

ஞானம்: உங்களோடு வேலை பார்க்கிற ஆளு. ஆவன்னு ராமய்யாவோட மகன்...

நண்பர்: ஓ!... ராமய்ய செட்டியாரோட மகனா நீ! சபாஷ்...!

ஞானம்: செட்டியார்னு சொல்லாதீங்க சார்...

நண்பர்: ஏன்...?

ஞானம்: தெருப்பெயர்ப் பலகைகளிலே இருக்கிற ஜாதிப் பெயரிலே அரசாங்கம் தார் பூசி வைச்சிருக்குதே. அதுதான் எங்க அப்பாவோட செட்டியார்—லேயும் தார் பூசி...

(ஜனங்கள் சிரிக்கிறார்கள். உடனே, திருமண மேடைக்கு வந்த மணமகளின் தந்தை, மட்டில்லா மகிழ்ச்சிப் பெருக்குடன்—)

தந்தை: காணாமல் போன மங்கலத் தாலியைக் கண்டெடுத்துக் கொடுத்த வீரச்சிறுவனுக்கு மணமக்களின் சார்பாக நூறு ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது...!

(திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் கைதட்டி ஆரவாரிக்கிறார்கள். அவர்களுக்கு நடுவில் திகைத்து நிற்கிற—)

அப்பா: அட, அதிர்ஷ்டக்கார மண்டு...!

(முனகியபடியே தம்மையறியாமல் கைதட்டுகிறார்!)

அஞ்சா நெஞ்சன்

பொங்கி எழும் சிங்கங்கள் ⑤

பதினைந்து வயதுச் சிறுவன் அவன்.

உடலிலே துணி ஒன்றுமில்லை. தூணிலே கட்டி வைத்திருக்கிறார்கள்.

நீரில் ஊற வைக்கப்பட்ட நீண்ட மெல்லிய பிரம்பால் முரட்டுத்தனமாக, அடிக்கக் காத்திருக்கிறார்கள் போலீஸ்காரர்கள்.

சுளீர்! சுளீர்!' — கசையடி தொடங்கியது.

பையன் வாயோ, "வந்தே மாதரம், வந்தே மாதரம்!" என்று கூவியது.

இரத்தமும் சதையும் வெளிவர கொடுக்கப் பட்டன பதினைந்து கசையடிகள். அவன் கண்களிலோ சொட்டுக் கண்ணீர் வரவில்லை! போலீஸாரே மலைத்து நின்றனர்.

"உன் பெயர் என்ன?"

"ஆஜாத்" என்றான் சிறுவன் மிகுந்த கம்பீரத்தோடு.

"ஆஜாத் — என்றால் சுதந்திரம். அதுவா உன் பெயர்.. சிறுவனின் பதிலை நம்பாத போலீஸ் அதிகாரி கேட்டார்.

"உன் தந்தையின் பெயர்?"

"ஆஜாத்" — என்றான் சிறுவன்.

"உன் வீடு எங்கே உள்ளது?"

"என் வீடு சிறைச்சாலை..."

போலீஸ் அதிகாரிக்குச் சிறுவனின் துணிச்சல் பெருத்த அதிர்ச்சி அளித்தது. கொடுத்த தண்டனை குறைவோ என்று நினைக்க ஆரம்பித்தார்.

உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த பாவ்ரா என்ற கிராமத்திலே ஆஜாத் பிறந்தான். சிறு வயது முதலே ரொம்பவும் முரடன். வில்லும் அம்புமாக வேடுவச் சிறுவர்களுடனேயே திரிவான்.

கவண் வீசுவதும், திரிவதுமாக இருந்த சந்திரசேகரை — ஆம் — ஆஜாதின் இயற்பெயர் அதுதான் — அவனது சிற்றப்பா காசியிலுள்ள பள்ளியிலே கல்வி கற்க அனுப்பினார். சமஸ்கிருதம் கற்கும் மாணவனாதலால் உணவு, உடை, தங்குமிடம் எல்லாமே இலவசமாயிற்று சந்திரசேகருக்கு.

புயற்காற்றுப் போலச் சுற்றிக்கொண்டிருந்த சந்திரசேகரைப் பிடித்துக் கூண்டிலே அடைக்க முடியுமா?

கல்வியிலே நாட்டமில்லை. உடற்பயிற்சி செய்வதில் தான் அதிக ஈடுபாடு கொண்டான் சந்திரசேகர்.

அப்போதுதான் நாட்டை உலுக்கிய ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது. மக்கள் எல்லோரும் மனம் கொதித்தனர். சிறுவனான சந்திரசேகர் இயக்கத்திலே சேர்ந்தான். சமாதான இயக்கங்கள், ஒத்

—கங்கா ராமமூர்த்தி—



துழையாமை இவைகள் துப்பாக்கி ஏந்திய ஆங்கிலேயரின் முன்னே வெல்லும் வழிகள் அல்ல என்று அந்தத் துடிப்பான சிறுவன் நினைத் தான். புரட்சிகரமான சிந்தனைகள் எழுந்தன.

''ஆயுதம் ஏந்திய எதிரியை ஆயு தத்தால் எதிர்க்க வேண்டும்'' என்ற கொள்கை அந்த இளநெஞ்சிலே விதையூன்றியது.

புரட்சி இயக்கத்திலே நாட்டம் கொண்டான் ஆஜாத். கட்டான உட லும், முறுக்கி விடப்பட்ட மீசையும், உயரமும், பருமனுமாக 'வஸ்தாது' போன்ற தோற்றமளித்த வாலிபனு னுன் சந்திரசேகர ஆஜாத்.

மர்மமாகவே போலீஸுக்கும் வெள்ளையருக்கும் தொல்லைகள் கொடுத்து வந்தான். இந்தியாவில் புரட்சியை மலரச் செய்ய வெடி குண்டுகள், ஆயுதங்கள் செய்ய வேண்டும், என்பது அவனது இலட் சியமாயிற்று.

துணிச்சலுக்குப் பெயர் போன சந்திரசேகர ஆஜாத் கான்பூரில் போலீஸையும், அரசையும் படாதபாடு படுத்தினுன். மறை வாகத் திரியவில்லை. மக்களோடு மக்களாய்ப் பல வேடங்களில் சுதந் திரமாகவே திரிந்தான்!

ஜான்சி நகரப் போலீஸ் உயர் மட்ட அதிகாரியிடம் புதிதாக வேலை செய்ய வந்தான் ஒரு காரோட்டி.

ஜான்சிக்கு அருகே இருந்த காடு களிலும் மலைகளிலும் புரட்சிக் காரர்கள் ஒளிந்திருக்கிருர்கள் என்று போலீஸ் வலை போட்டுத் தேடிக் கொண்டிருந்தது.

அதிகாரியின் புதிய காரோட்டி — அவன்தான் ஆஜாத்–போலீஸ் வண் டியிலேயே தனது புரட்சித் தோழர் களைப் புரட்சி இயக்கம் நடக்கும் மறைவிடங்களுக்கு அழைத்துச் சென் ருன் என்ருல் பார்த்துக் கொள்ளுங் களேன்!

துப்பாக்கி சுடுவதில் நிபுணன் ஆஜாத். அபாரமான குறி பார்க்கும் திறமையுடையவன். காட்டிலே பயிற்சி நடத்திக் கொண்டிருந்தான் தோழர்களுக்கு.

போலீஸ் அதிகாரிக்குப் புதிய காரோட்டி மேல் சந்தேகம் எழுந்தது

தான் தாமதம் — ஆஜாத் உடனடியாகத் தனது புகைப்படத்தை லைசென்ஸ் புத்தகத்திலிருந்து அகற்றி எடுத்துவிட்டு மாயமாக மறைந்தான்.

இப்படிப் பலப்பல வேடங்களில் திரிந்தே தனது புரட்சி இயக்கத்தை நடத்தினான். பகத்சிங், சுகதேவ், பகவதிசரண், விஜயகுமார் — என்று இளம் புரட்சியாளர்கள் ஆஜாத்தைத் தங்களது புரட்சித் தளபதியாகக் கொண்டனர்.

வாரண்டுக்கு மேல் வாரண்ட். ஆஜாத் பிடிபடாமலே தப்பினான். எல்லாவற்றிற்கும் சிகரம் கான்பூரில் குண்டுகள் செய்யும் தொழிற்சாலையை நிறுவியதுதான். ஆயுதங்களும், வெடி குண்டுகளும், மருந்துகளும் உற்பத்தியாகிக் கொண்டே இருந்தன. இடையே பகத்சிங் தூக்கிலிடப்படுகிறான் என்று கேள்வியுற்று அவனைக் காக்க எத்தனையோ யுக்திகள் செய்தான் ஆஜாத். முயற்சி பலிக்கவில்லை.

வெடிகுண்டுக் கிடங்குகள், வெள்ளை அரசாங்கத்தாரால் கைப்பற்றப் பட்டபோது ஆஜாத் அலகாபாத்துக்குத் தப்பிவிட்டான். அடேயப்பா, வருடங்களாகச் சேகரித்த ஆயுதங்கள் மலைமலையாகக் குவிந்திருந்தன! அரசாங்கம் நாட்டின் மூலை முடுக்குகளில் ஆஜாத்தைத் தேடலாயிற்று.

1928, செப்டம்பர் 17. அலகாபாத்தில் ஒரு பூங்காவிலே நண்பனோடு உரையாடிக் கொண்டிருந்த ஆஜாதைக் கண்ட போலீஸ் வளைத்துக் கொண்டது. சிங்கம் சிலிர்த்து எழுந்தது. தன்னுடன் எப்பொழுதும் வைத்திருந்த துப்பாக்கியால் பல போலீஸ்காரர்களை வீழ்த்திய ஆஜாத் தனது இனிய மௌஜர் பிஸ்டலின் கடைசிக் குண்டால் தன்னுயிரை மாய்த்துக் கொண்டான்!

"என்னை உயிரோடு எவரும் சிறைப்படுத்த முடியாது" என்பதல்லவோ அவன் சொல்லாக இருந்தது!

முகமூடித் திருடனுக்கே பயப்படாதவன் - இந்த முத்து அண்ணனுக்கா பயப்படுவேன்?

-புகைப்படம்: எம். நடராஜன்





உதவி

பாலு விசிலடித்தபடி தலையை வாரிக் கொண்டிருந்தான். அன்று அவனுக்கு ஒரே சந்தோஷமாய் இருந்தது. இருக்காதா பின்னே? அவனுடைய சித்தப்பார் பிள்ளை ரமேஷ் லண்டனிலிருந்து வருகிறான். சம வயதுள்ள இருவரும் சேர்ந்தால் மணிக் கணக்காகப் பேசுவார்கள்; விளையாடுவார்கள். ரமேஷ் அழகான பொம்மைக் கார்கள் கொண்டு வருவான். மூன்று வருட இடைவெளிக்கப்புறம் பார்க்கப் போகிறான்.

''பாலு, எங்கே கிளம்பறே? இன்னும் ஒரு மணி நேரத்திலே ஏர் போர்ட் போகணும்'' – அவனுடைய தந்தை சுந்தரம் நினைவு படுத்தினார்.

''அதுக்குள்ளே வந்துடுவேன் அப்பா. ராமுவுடைய பிறந்த நாள் விருந்துக்கு என்னையும் கூப்பிட்டிருக்கான். அவனுக்கு வாழ்த்துக் கூறிவிட்டு, அரைமணியில் திரும்பி விடுவேன். ஏர்போர்ட் போய் பிளேன் பார்க்கணும்னு எத்தனை ஆசையா இருக்கேன்?''

பத்தே வயது நிரம்பிய பாலு பேசும் தோரணையும் அவனுடைய நடத்தையும் கண்டால் இரண்டு வயசு கூட்டித்தான் சொல்லத் தோன்றும். அவனுடைய ஆசை பெரியவன் ஆனதும் 'பைலட்' ஆகணும் என்பது தான். அதனால்தான் இந்த வாய்ப்பில் விமானத்தையெல்லாம் பார்க்கவும் ரமேஷை வரவேற்கவும் மிக்க ஆசையோடு காத்திருந்தான்.

ராமு வீட்டில் கூட்டம் தான். 'கேக்' வெட்டிப் பாட்டுப் பாடினார்கள். ஒரு துண்டு கேக்கையும், உருளைக் கிழங்கு சிப்ஸையும் சாப்பிட்டு, ஆரஞ்சு ஜூஸ் குடித்ததும் பாலுவுக்குத் தனி குஷி பிறந்தது. அவன் கிளம்பவும் ராமு எதிரே வந்தான்.

''என்ன பாலு, கொஞ்ச நேரம் கூட இரேன். ஏதாவும் விளையாடலாம். 'கேம்ஸ்' ஆரம்பிக்கவே இல்லையே!''

''பரவாயில்லை ராமு, நானே என்னோட சித்தப்பா பிள்ளையையும் கூட்டிண்டு வரேன். இப்போ போனால்தான் அப்பா கூடப் புறப்பட சரியா இருக்கும். இல்லையானால் அப்பா போயிடுவார். நான் ரொம்ப ஆசையாக் காத்திருந்தது வீணாயிடும்.''

தெருவில் இறங்கி அவசரமாய் நடையைக் கட்டினான் பாலு. ஒரு

கீதா ராகவன்

தெரு திரும்பியிருப்பான். அவ்வளவு தான்; சைக்கிளில் வந்த ஓர் ஆள் எதிரே வந்த கிழவர் மேல் இடித்து விட்டு நிற்காமல் பறந்து விட்டான். அந்தத் தாத்தா தடுமாறி, கைத்தடியைத் தவற விட்டுக் கீழே விழுந்து விட்டார். காலில் பலத்த அடிபட்டு ரத்தம் வழிந்தது. பாலு ஓடிப் போய் அவரைக் கைத்தாங்கலாக எழுப்பி விட்டான்.

"பக்கத்திலே டாக்டர் வீடு இருக்கா தம்பி"— என்றார் தாத்தா.

"ஓ... டாக்டர் ஜெகதீசன் எனக்குத் தெரியுமே! இந்தத் தெருக் கோடியிலேதான் இருக்கார்."

"கொஞ்சம் என்னைப் பிடிச்சுக் கூட்டிண்டு போறியாப்பா. கண்ணும் சரியாத் தெரியலே. ரோடும் மோசமா இருக்கு. ஒரு கட்டுப் போட்டாச் சரியாப் போயிடும்."

"சரி, தாத்தா."

தாத்தாவைக் கைத்தாங்கலாய் டாக்டரிடம் அழைத்துப் போனான் பாலு.

"இங்கேயே கொஞ்சம் உட்காரு தம்பி, கட்டுப் போட்டதும் என்னை வீட்டிலே கொண்டு விட்டுடு. பக்கத்திலேதான் வீடு இருக்கு."

"எனக்கு அவசரமாய்ப் போகணும் தாத்தா" — என்று சொல்ல நினைத்தான் பாலு. ஆனால், சொல்ல மனசு வரவில்லை. அவருக்காகக் காத்திருந்து வீட்டில் கொண்டு விட்டதும், அவருடைய பிள்ளை பாலுவுக்கு நன்றி சொல்ல வந்தார். அவர் வேறு யாரும் அல்ல; பாலுவுடைய ஹிந்தி மாஸ்டர் தான் என்பது தெரிந்ததும் சந்தோஷமாயிருந்தது. தாத்தா உள்ளே போய் ஒரு சாக்லேட் கொண்டு வந்து கொடுத்து அவன் முதுகில் செல்லமாய்த் தட்டிக் கொடுத்தார்.

பாலு யோசனையோடு நடந்தான். அப்பா போயிருப்பார். மணி ஏழு அடித்துவிட்டதே! அவனுக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது. அழுகையாய் வந்தது. ஓட்டம் ஓட்டமாக ஓடினான்.

அப்பா அப்பொழுதுதான் வாசலில் பேப்பர் படித்தபடி உட்கார்ந்திருந்தார்.

"என்னப்பா, நீங்க போகலையா?"

"இனிமேல்தான் கிளம்பணும் பாலு. ஏர்போர்ட்டுக்குப் 'போன்' பண்ணினேன். விமானம் இரண்டு மணி நேரம் தாமதமாய் வருகிறதாம்."

பாலுவுக்கு இப்போது ரொம்பவும் சந்தோஷமாய் இருந்தது. அவன் தாத்தாவுக்கு உதவினான்; கடவுளும் அவனுக்கு உதவி செய்திருக்கிறாரே!



எறும்பே வழிகாட்டி

"எறும்புதான் உனக்கு வழி காட்டியா? அது எப்படி?"

"என் அம்மா எனக்குத் தெரியாமே ஒளிச்சு வைக்கிற தின்பண்டங்களையெல்லாம் அது எனக்குக் காட்டிக் கொடுத்திடும்."

—எஸ்.ஆர். சின்னமணி

மாயத் திரை



வி.ர.வசந்தன்

செல்வத்திற்கு அந்தச் செய்தி தேனாக இனித்தது. அவனது ஊரில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டிருக்கும் திரையரங்கை அன்று மாலை அவனது அபிமான நடிகர் விஜய் திறந்து வைக்கப் போகிறாராம்! அது மட்டுமல்ல; அவர் ஏற்கெனவே வந்து அவர்கள் ஊரில் இருக்கும் சுற்றுலா மாளிகையில் தங்கி இருக்கிறாராம்.

எப்படியாவது அவரைச் சந்தித்து விடுவதென்று அவன் முடிவு செய்து விட்டான். சந்தித்து, அவன் தயாரித்து வைத்திருக்கும் படப்புத்தகத்தைக் காட்டி, அவரது பாராட்டைப் பெற்று விட வேண்டும். அவரிடம் கொஞ்ச நேரமாவது பேச வேண்டும். மிகமிக அருகில் அவரது முகத்தைப் பார்க்க வேண்டும்!

விஜய் நடித்த படங்களை, செல்வம் குறைந்தது ஐந்து, ஆறு முறையாவது பார்த்து விடுவான். பின் அவரது நடிப்பைப் புகழ்ந்து அவருக்குக் கடிதங்கள் எழுதுவான். சில வேளைகளில் அவன் எழுதும் கடிதத்திற்கு அவரிடமிருந்து பதில் வருவதுமுண்டு. அதையெல்லாம் பொக்கிஷமாகக் கருதி, பத்திரமாக வைத்திருப்பான். ஒருமுறை ஒரு படத்தில் அவர் இறந்து விடுவதைப் போல நடித்திருந்ததைப் பார்த்துவிட்டு, அப்படியெல்லாம் இனி நடிக்கக் கூடாது என்று அவருக்குக் கடிதம் எழுதினான். அவனுக்கு அவர் அன்புப் பரிசாக அனுப்பிக் கொடுதத அவரது புகைப்படத்தை, கண்ணாடிச் சட்டம் போட்டு வீட்டில் மாட்டி வைத்திருக்கிறான்.

பத்திரிகைகளில் வருகின்ற அவரது திரைப்படங்களைப் பற்றிய செய்திகள், புகைப்படங்கள் எல்லாவற்றையும் கத்தரித்து எடுத்து ஒரு படப்புத்தகமாகத் தயாரித்திருந்தான் செல்வம்.

அன்று பிற்பகல், தான் தயாரித்து வைத்திருந்த படப்புத்தகத்தை எடுத்துக் கொண்டு அந்தச் சுற்றுலா மாளிகையை அடைந்தான் அவன். ஏற்கெனவே அங்கு சிலர் விஜய் வரமாட்டாரா, அப்போது பார்த்து விடலாம் என்ற ஆர்வத்துடன் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனாகப் போய் நின்றான் செல்வம். உள்ளே போய்ப் பார்த்து விடலாம் என்றால் காவல்காரன் விடுவதாக இல்லை.

நின்று நின்று பொறுமையிழந்த அவன் ஒரு சிறு காகிதத்தில், "ஐயா, நான் உங்களை நேரில் பார்த்துப் பேச ஆசைப்படுகிறேன். இப்படிக்கு, செல்வம்" என்று எழுதி, காவல்காரனிடம் கொடுத்து, அதை விஜய்யிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான்.

"அதெல்லாம் முடியாது..... இப்போது அவர் யாரையும் பார்க்க மாட்டார்" என்று முதலில் மறுத்த காவல்காரன், அவன் மறுபடியும் கெஞ்சவே, என்ன நினைத்தானோ, அந்தக் காகிதத்தை வாங்கிக்

கொண்டு உள்ளே போனான்.

காவல்காரன் வந்து செல்வத்தை அழைத்துச் சென்றபோது அவனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. அவர் எப்படி இருப்பார்? திரைப்படங்களில் பார்ப்பது போல் இருப்பாரா, இல்லை வேறு விதமாக இருப்பாரா என்று சிந்தித்தவாறு அந்த அறைக்குள் நுழைந்தான்.

உள்ளே நாற்காலியில், கால்மேல் கால் போட்டுக் கொண்டு புன்சிரிப்போடு உட்கார்ந்திருந்தார் விஜய். விழித்தான் செல்வம். அவனால் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அவரைத் திரைப்படத்தில் பார்ப்பதற்கும், நேரில் பார்ப்பதற்கும் பெரும் வித்தியாசமிருந்தது.

"வா தம்பி, உட்கார், நீ தான் செல்வமா?" என்று கேட்டார் அவர். அவன் அடிக்கடி திரைப்படங்களில் கேட்கும் அதே குரல்! ஆனால், திரைப்படங்களில் தோன்றுபவரும், தனக்கு முன்னால் அமர்ந்திருப்பவரும் ஒருவர் தான் என்பதை நம்ப மறுத்தது அவன் மனம்.

"ஆமாம் ஐயா, நீங்கள்..." என்று தயங்கிக் கொண்டே கேட்டான் அவன்.

அதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்த அவர், "நான் தான் தம்பி, நீ அடிக்கடி கடிதம் எழுதுவாயே, அந்த விஜய்... ஏன் நம்ப முடியவில்லையா?" என்றார்.

உண்மையிலேயே செல்வத்தால் நம்பத்தான் முடியவில்லை. துள்ளிக் குதித்து வந்து அனல் பறக்கும் வசனங்களைப் பேசும் வீரர் விஜய் எங்கே? சாதாரணத் தோற்றத்துடன் உட்கார்ந்திருக்கும் இந்த மனிதர் எங்கே?

"அதெல்லாம் ஒண்ணுமில்ல ஐயா... சினிமாவில பார்க்கற மாதிரி இல்லியேன்னு நெனச்சேன்" என்று சமாளித்தான் அவன்.

புன்முறுவலோடு அவனைப் பார்த்த விஜய், "தம்பி, திரைப்படத்திற்கும், வாழ்க்கைக்கும் பெரும் வித்தியாசமுண்டு. அது கற்பனை வடிவம். இது உண்மை வடிவம். இதோ, இப்போது நேரில் நீ பார்க்கிறாயே, இதுதான் உண்மையான விஜய். திரைப்படத்தில் நீ பார்ப்பதெல்லாம், கதைக்காக நான் போடும் மாறு வேடங்கள்" என்றார்.

என்ன முயன்றும், செல்வத்தின் முகத்தில் ஏமாற்றத்தை மறைக்க



முடியவில்லை. "அது என்ன தம்பி, ஆல்பம் மாதிரி?" என்று கேட்டார்.

அப்போதுதான் செல்வத்திற்குத் தான் கொண்டு வந்திருந்த படப்புத்த கத்தைப் பற்றிய நினைவே வந்தது. "ஓ! இதுவா! இது நானே தயாரிச் சது... நீங்கள் நடித்த படங்களைப் பற்றிய தகவல்கள், புகைப்படங்கள் எல்லாவற்றையும் தொகுத்துத் தயா ரித்தேன்" என்று அவரிடம் அதைக் கொடுத்தான்.

அதை வாங்கிப் பொறுமையாகப் புரட்டிப் பார்த்த விஜய், "தம்பி, இதோ 'ஏறி வந்த படிகள்' என்ற திரைப்படத்தைப் பற்றிய செய்திகளை எல்லாம் தொகுத்து வைத்திருக்கி ருயே, இந்தப் படத்தை நீ பார்த் தாயா?" என்று கேட்டார்.

"ஓ, ஆறு தடவை பார்த்தேன்!" என்று கண்கள் அகல, பதில் சொன் னன் அவன்.

"ஆறு தடவையா...! சரி, எதற் காக அத்தனை தடவைப் பார்த் தாய்?" என்று அவர் கேட்க, உடனே சொன்னன் செல்வம்: "உங்கள் நடிப்புக்காக ஒரு தடவை, பாடல் களுக்காக ஒரு தடவை..." என்று அடுக்கிக் கொண்டே போனன்.

"நல்லது, அந்தப் படத்திலிருந்து நீ என்ன தெரிந்து கொண்டாய்?" என்று கேள்வியோடு அவனைப் பார்த்தார் அவர்.

இந்தக் கேள்விக்கு அவனல் பதில் சொல்ல முடியவில்லை.

"தம்பி, அந்தப் படத்தில் ஓர் அனுதைச் சிறுவன், பலரின் அன்பி னுலும், ஆதரவினுலும் வாழ்க்கையில் முன்னேறுகிருன். அவன் உயர்நிலை அடைந்ததும், தனக்கு ஆதரவு காட் டிய எல்லோரையும் நன்றி மறவாமல் மேலே கொண்டு வரப் பாடுபடு கிருன். அந்தப் போராட்டத்தில் தன் உயிரையும் இழக்கிருன். இதுதான் கதை. இதில் சொல்லப்பட்டிருக்கும் அருமையான கருத்துக்கள் ஆறு தடவை பார்த்தும் உன் மனத்தில் பதியவில்லையே! மாருக, அதில் நடித்த நடிகரின் தோற்றப் பொலி வையும், நடிப்பையும் பார்த்து மெய் மறந்து போயிருக்கின்ருய். தம்பி, இந்தச் சிறு பருவத்தில் இது போன்ற அர்த்தமற்ற வீண் மாயைகளில் மனத்தைச் செலுத்தாதே. இழந்து போனல் மீண்டும் திரும்பி வராத பருவம் இந்த இளமைப் பருவம். அதை வீணுகக் கழித்துவிடக்கூடாது.

செல்வம் சற்று நேரம் ஒன்றுமே பேசவில்லை. அவன் மனத்தில் இப் போது ஒரு பெரும் தெளிவு ஏற்பட் டிருந்தது. இதுவரையிலும் தன் தோற் றத்தாலும், நடிப்பினுலும் அவன் உள் ளத்தில் உயர்ந்து நின்ற நடிகர் விஜய், இப்போது ஒரு நல்லாசிரியனுக அவன் மனத்தில் உயர்ந்து நின்ருர்!

"நன்ருகக் கல்வி கற்று வாழ்க்கை யில் முன்னேற வேண்டும்" என்று வாழ்த்தி விடை கொடுத்தார் விஜய்.

அவன் வெளியே வந்த போது பல கண்கள் அவனைப் பொருமை யோடு பார்த்தன. ஆனல், அதைப் பார்த்து அவன் மனத்தில் எந்தப் பெருமையும் ஏற்படவில்லை.

அன்று மாலை அந்தத் திரையரங் கின் திறப்பு விழா நடைபெற்றது. விழா மேடையில், பூரண ஒப்பனைக ளோடு, ஒரு கம்பீர புருஷனுக நடிகர் தோன்றினர். அவரைக் கண்டு கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய் தது. கைத்தட்டல்களும், சீழ்க்கை ஒலிகளும் காதைப் பிளந்தன. ஆனல், ஓர் ஓரமாக நின்று கொண் டிருந்த செல்வம் எந்த ஆரவாரத் திலும் கலந்து கொள்ளாமல் அமைதி யாக விழா நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் மனத்தில் இருந்த மாயத் திரைதான் விலகி விட்டதே!



கோபால் ஓரளவு வசதியான வீட்டுப் பிள்ளை. ஏழையுமில்லை; பணக்காரனும் இல்லை. அவன் தந்தை நல்லசாமி ஓரளவு நிலங்களும் தோட்டமும் வைத்திருந்தார். நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தார். கோபாலுக்கு ஆறுமுகம் என்ற தம்பி மட்டும் உண்டு.

கோபாலுக்குக் கல்வி கற்க விருப்பமில்லை. முயன்றால் அவன் படிப்பில் முன்னேறியிருக்க முடியும். எப்பொழுதும் விளையாட்டுத்தான் அவனுடைய பொழுதுபோக்கு. ஐந்தாம் வகுப்பு வரை எப்படியோ படித்து விட்டான். அதற்குமேல் படிக்க அவனுக்கு விருப்பமில்லை. ஆனால், ஆறுமுகம் நன்கு படித்து, எல்லா வகுப்புக்களிலும் வெற்றி பெற்று வந்தான்.

அவ்வூரில் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு பக்கத்திலிருந்த நகரத்தில் ஆறுமுகம் கல்லூரிப் படிப்பு படிக்கப் போனான். அந்த நேரத்தில் அவன் தாயார் இறந்து விட்டாள். அதற்காக அவன் ஊருக்கு வந்தபொழுது, கோபால் வெறுப்புடன் வீட்டில் இருந்தான். தாயார் இறந்த வருத்தத்தைவிட வெளியில் சென்று சீட்டு விளையாட முடியவில்லையே என்றுதான் அவன் வருத்தப்பட்டான். தன் தந்தையிடம் சென்று அண்ணனுடைய போக்கைப் பற்றி ஆறுமுகம் கவலைப்பட்டான். ஆனால், அவன் தந்தைக்குக் கோபாலிடம் பாசம் இருந்தது. அதனால் அவர் அலட்டிக் கொள்ளாமல், 'காலம் செல்லச் செல்ல ஒழுங்காகி விடுவான்' என்று கூறினார்.

வீட்டில் கவனிப்பில்லாமையால் கோபால் மேலும் கெட்டு விட்டான். இந்தச் சமயத்தில் நல்லசாமிக்கு நோய் வந்துவிட்டது. அப்பொழுது ஆறுமுகம் பி.எஸ்:ஸி. வகுப்பில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தான். அதில் அவன் வெற்றி பெற்றால் நல்ல வேலைக்குப் போய் நிறைய சம்பாதிப்பான் என்று அவன் தந்தைக்குத் தெரியும்.

பரீட்சை முடிந்து கோடை விடுமுறைக்கு ஆறுமுகம் வீட்டுக்கு வந்தான். நோய் முற்றிய நிலையில் இருந்த அவன் தந்தை அவனை அழைத்து, "மகனே, நான் இன்னும் சில நாட்களில் இறந்து விடுவேன். நீ பலமுறை உன் அண்ணனைப் பற்றிச் சொல்லியும் நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் ஒன்றுக்கும் உதவாமல் வளர்ந்துவிட்டான். அவனைப் பற்றிய நினைவு என்னை மிகவும் வருந்தச் செய்கிறது. என் துன்பம் நீங்க நான் ஒன்று சொல்வேன், கேட்பாயா?" என்று மெலிந்த குரலில் கேட்டார். ஆறுமுகம் கண்ணீர் வடிய, "சொல்லுங்கள் அப்பா, தவறாமல் கேட்கிறேன். இது சத்தியம்" என்று சொன்னான்.

உடனே, நல்லசாமி, அவனை நோக்கி, "நீ பட்டம் பெற்று விடுவாய். கடவுள் அருளினால் உனக்கு நல்ல வேலை கிடைக்கும். ஆனால், உன் அண்ணன் படிக்காமல் வேலையில்லாமல் பாழாகி விட்டான். அவனுக்கு எதிர்காலமில்லை. ஆகவே, சொத்துக்களை அவனுக்கே எழுதி விட்டேன். கொஞ்சம் கடன் இருக்கிறது. அதை நீ அடைத்துவிட வேண்டும். அண்ணன் மேல் பொறாமைப் படக் கூடாது" என்றார். ஆறுமுகம்

தந்தையாரின் சொற்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டான்.

எதிர்பார்த்தபடி சில நாட்களில் அவன் தந்தை இறந்து விட்டார். கடன் கொடுத்தவர்களிடம் ஆறுமுகம் சென்றான். தான் வேலை பார்த்துச் சிறிது சிறிதாகக் கடனை அடைத்துவிடுவதாகச் சொன்னான். ஆறுமுகத்தின் நல்ல குணத்தை அறிந்த அவர்கள், அவன் கூறியதை ஒப்புக் கொண்டார்கள். விரைவில் ஆறுமுகத்திற்கு வேலை கிடைத்தது. தன் சம்பளத்தின் பெரும்பகுதியைக் கடனுக்கு அடைத்தான்.

கண்டிப்பார் யாரும் இல்லாததால் கோபால் கண்டபடி வாழ்ந்தான். சொத்துக்கள் எல்லாம் விரைவில் அழிந்துவிட்டன. ஏழையான பிறகு யாரும் அவனைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஒரு வேலையும் செய்யத் தெரியவில்லை. மாடு மேய்க்கப் போனான். மாடு முட்டிக் காயம் ஏற்பட்டது. அந்த வேலையும் ஒத்து வரவில்லை. கூலி வேலையிலும் போதுமான கூலி கிடைக்கவில்லை. குறைந்த கூலி வாங்குவோர் உண்ணும் உணவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

அவனுக்கு அறிவு வந்தது. தன்னோடு படித்தவர்கள் உயர்ந்த வாழ்க்கை வாழ்வதைப் பார்த்தான். தான் சீரழிந்த நிலையில் இருப்பதையும் நினைத்தான். தம்பி ஆறுமுகத்தை நினைத்தான். அமுதம் போன்ற பாலைக் கொடுத்து வெறும் வைக்கோலைத் தின்னும் பசுவைப் போல, தம்பி தனக்குச் சொத்தைக் கொடுத்துக் கடனை ஏற்றுக் கொண்டதை நினைத்தான். தம்பியிடம் போக அவனுக்கு வெட்கமாக இருந்தது. அவனுக்குச் சுமையாக இருப்பதைவிடச் சாவதே மேல் என்ற எண்ணத்தோடு ஆற்றின் பக்கம் வந்தான்.

ஆற்றங்கரைச் சிவன் கோயில் குருக்கள் அவனுடைய மனநோக்கத்தை அறிந்தார். அவனை அன்போடு அழைத்தார். அவனை நோக்கி, "உனக்கு உயிரைக் கொடுத்தவன்



இறைவன். நீ விரும்பியபடி பிறக்க முடியாது. அதுபோல விருப்பம் போலச் சாகவும் முடியாது. ஆனால், உழைத்துப் பிழைக்கலாம். நல்ல காலம் வரும் வரை இந்தக் கோயிலைப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டு இரு. அந்த வேலை செய்து கொண்டிருந்தவன் வேறு வேலைக்குப் போய் விட்டான். நீ ஒழுங்காக வேலை செய்தால் சுவாமி பிரசாத மாக மூன்று வேளை உணவை உனக்குத் தருவேன். இறைவன் கருணையினால் நல்ல காலம் உனக்கு வரும்'' என்று அன்போடு கூறினார். அவன் விருப்பத்தோடு அந்த வேலையை ஏற்றுக் கொண்டான்.

செய்தி தெரிந்த அவன் தம்பி ஆறு முகம் அவனைத் தன்னுடன் இருக்க அழைத்தான்.. ஆனால், கோபால் மறுத்து விட்டான்.

கோபாலுக்கு அந்தக் குருக்கள் கோவில் நிலங்களை நிர்வகிக்கக் கற்றுக் கொடுத்தார். படிப்படியாக விவசாய நுணுக்கங்களை அறிந்து கொண்டு நிம்மதியான வாழ்க்கையைப் பெற்றான். இருந்தாலும் படிப்பில்லாதவன் என்ற குறை இருந்து கொண்டே வந்தது.


குறள் வாக்கு:

எண்என்ப ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

4 டின் சாக்லேட்!

''நாலு டின் சாக்லேட் கேட்கிறாயே! உனக்கு எதற்கு?''

''எங்க டீச்சர் ஆல்பம் தயாரிக்கச் சொன்னாங்க நான் சாக்லேட்டிலே சுற்றியிருக்குமே கலர்ப் பேப்பர், அதைச் சேகரிக்க ஆல்பம் தயாரிக்கப் போறேன்.''





அடம் பிடிக்கிறான்

''நீங்க சொன்னீங்களேன்னு என் பிள்ளையை மாஸ்டர் குட்டிச்சாத்தான் படத்துக்கு அழைச்சுப் போய்க் காட்டினது தப்பாப் போச்சு.''

''ஏன் சார், பயந்துட்டானா?''


''ஊஹும், ரிக்ஷா ஓட்டி இல்லாத ஒரு மாய சைக்கிள் ரிக்ஷாவிலேதான் ஸ்கூலுக்குப் போவேன்னு அடம் பிடிக்கிறான்.''

சிரித்து சிரிக்கலாமே!

சுதர்ஸன்


பின்னால் வரும் எலி

''யம்மாவ்! மாறு வேடப் போட்டிக்கான என் முகமூடியிலிருந்து விழுந்த சுண்டெலி என்னைப் பிள்ளையாருன்னு நினைச்சுப் பின்னாலே ஓடி வருதம்மா!''



எனக்குப் பதில்...?

''என் கையில் அடிபட்டு விட்டது சார்! எனக்குப் பதில் இந்த ரோபட் தம்பி பரீட்சை எழுதுவான் சார்.''



Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Editor: K. Rajendran



ஆபிரகாம் லிங்கன்

பிறந்த நாள்: 12.2.1809 மறைந்த நாள்: 15.4.1865

REGISTERED No. TN-MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

